நிறுவனர் : நா.மகாலிங்கம்
செப்டம்பர் 2021

ஓம் சக்தி

கலை, இலக்கிய, ஆன்மிக மாத இதழ்
₹15/-



வெற்றிக்கு அதிபதி
கணபதி!







அன்புடன்...

நம்முடைய இந்து மதத்தில் உருவ வழிபாடு, அருவ வழிபாடு, அருவுருவ வழிபாடு என்று வழிபாட்டு முறைகள் அமைந்திருக்கின்றன. உருவ வழிபாட்டில் பல தெய்வங்களின் திருவடிவங்களை நாம் வழிபடுகிறோம். நாம் வழிபடும் தெய்வ வடிவங்கள் ஒவ்வொன்றும் அடிப்படையில் ஒரு தத்துவத்தை நமக்கு உணர்த்துவதாக அமைந்திருக்கின்றன.

அந்த வகையில் விநாயகப் பெருமானின் திருவுருவம் யானை முகம் கொண்டு அமைந்திருக்கிறது. அவரின் திருமுகம் பார்ப்பதற்கு ஓம் என்னும் பிரணவத்தின் வடிவத்தில் அமைந்திருப்பதைக் காணலாம். ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் ஓசையிலிருந்துதான் ஒளியும், தொடர்ந்து உயிர்ச் சக்தியும் தோன்றுகின்றன. அனைத்துக்கும் மூலமாக இருக்கும் பிரணவத்தின் வடிவத்தில் காட்சி தருவதால்தான் அவரை மூலமுழுமுதற் கடவுள் என்று போற்றுகிறோம். விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படும் இந்த மாதத்தில் விநாயகர் பற்றிய சில கட்டுரைகள் இந்த இதழில் இடம் பெற்றிருக்கின்றன.

ஜூலை இதழில் கார்கில் யுத்தம் பற்றியும், ஆகஸ்ட் இதழில் கார்கில் யுத்தத்தில் சாகசம் புரிந்து உயிர்த் தியாகம் செய்த வீரத் தமிழர் மேஜர் சரவணன் பற்றியும் வெளிவந்த கட்டுரைகளைப் படித்த வாசகர்களில் பலரும் பாராட்டியதுடன், ராணுவத்தில் வீர சாகசங்கள் புரிந்த வீரர்களைப் பற்றி ஒரு தொடர் வெளிவந்தால் நன்றாக இருக்குமே என்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள். நம்முடைய நிம்மதியான வாழ்க்கைக்காக தங்களை அர்ப்பணித்துக்கொண்டு, எல்லையைக் காக்கும் வீரர்களை கௌரவிக்கும் வகையில், இந்திய ராணுவத்தின் உயரிய விருதான பரம்வீர் சக்ரா விருது பெற்ற வீரர்களின் வாழ்க்கைத் தொடர் இந்த இதழிலிருந்து தொடங்கு கிறது. விக்ரம் பாத்ரா என்ற இளம் ராணுவ வீரரின் சாகசம் இந்த இதழில் இடம் பெற்றிருக்கிறது. தேசிய பெண்கள் உடல் ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு வெ.இன்சுவை எழுதிய ஒரு கட்டுரை, பரம்பரை பரம்பரையாக கொலு பொம்மைகள் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் சங்கரலிங்கம் பற்றிய கட்டுரை மற்றும் விநாயகரின் படைவீடுகள், மிராக்கிள் வெல்னெஸ் கிளினிக்கின் ஒருங்கிணைந்த மருத்துவத்தின் பலன்கள், சிறுகதை, கவிதை, கலை என்று வழக்கமான பகுதிகளும் இதழில் இடம் பெற்றிருக்கின்றன.

அடுத்து வரும் நவராத்திரி இதழில் சந்திப்போமே...

– பொறுப்பாசிரியர்

புவனேஸ்வரி

விநாயகர் முழுமுதற் கடவுள்... எப்படி?

விநாயகப் பெருமானை முழுமுதற் கடவுள் என்று போற்றி வழிபடுகிறோம். சிவபெருமானுக்கும் உமையன்னைக்கும் மகனாகத் தோன்றிய விநாயகர் எப்படி அவர்களை விடவும் மேலானவராக, முழுமுதற் கடவுளாகக் கொண்டாடப்படுகிறார்?

புராண காலத்துக்குச் செல்வோம்.

முற்காலத்தில் கிருச்சதமர் என்றொரு முனிவர் இருந்தார். கவிமுனிவரின் பத்தினியான முகுந்தைக்கு நெறிதவறிப் பிறந்த பிள்ளை அவர். காலப்போக்கில் அவருக்கு உண்மை தெரியவர, தன்னைப் பெற்றெடுத்த தாயை சபித்துவிட்டார். பெற்ற தாயென்றும் பாராமல் தன்னைச் சபித்த பிள்ளையை அந்தத் தாயும் சபித்துவிட்டாள். என்ன சாபம்? கிருச்சதமரே பயந்து நடுங்கும்படியான ஒரு பிள்ளை அவருக்குப் பிறக்க வேண்டும் என்பதுதான் அந்தச் சாபம்.

நெறிதவறிப் பிறந்த அவமானமும், தாயின் சாபமும் ஒருசேர, உயிரைத் துறப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்துவிட்டார் கிருச்சதமர். அப்படி, உயிர்த்தியாகம் செய்ய முடிவெடுத்த வேளையில், அசரீரி வழியாக அவர் இந்திரனுக்குப் பிறந்தவர் என்ற உண்மை தெரிய வந்தது.

அதனால் உள்ளம் மகிழ்ந்த கிருச்சதமர், மற்ற முனிவர்களிடையே தனக்கு ஏற்பட்ட அவப் பெயரை அகற்றி, அவர்களெல்லாம் தன்னைப் போற்றி மதிக்கும் நிலைக்கு தன்னை உயர்த்திக் கொள்ள நினைத்தார்.

அதன் பொருட்டு கடும் தவம் மேற்கொண்டார். தவத்தின் பலனாக கிருச்சதம முனிவர், ஸித்திபுத்தி சமேத கணேசப் பெருமானின் திவ்ய தரிசனமும் அவருடைய பேரருளும் பெற்றார். அதன் விளைவாக அனைத்து ரிஷிகளும், முனிவர்களும் மதித்துப் போற்றும் உயர்நிலை அடைந்தார் கிருச்சதமர்.

ஒரு நாள், நெடுநேரம் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். தியானம் கலைந்து கண் விழித்த வேளையில், அவருடைய பார்வை தீட்சண்யத்தின் விளைவாக, அகில உலகங்களும் அஞ்சும்படியாக ஓர் அரக்கன் தோன்றினான். அவனுடைய இடியோசை போன்ற சிரிப்பொலி கேட்டு நடுநடுங்கிப் போன கிருச்சதமர் அவனிடம்,



> ஓர் அந்தணராக வடிவம் கொண்டு, திரிபுரனின் அரண்மனைக்குச் சென்றார். அவரை வரவேற்று பூஜித்தவனிடம், அந்தணராக வந்த விநாயகர், திருக் கயிலையில் சிவபெருமான் வழிபட்டு வரும் சிந்தாமணி விநாயகர் திருவுருவம் தனக்குக் கிடைக்க வழிவகை செய்யும்படி கேட்டார்.

'யார் நீ?' எனக் கேட்டார்.

'உம் தாயின் சாபத்தின் காரணமாக உனக்குப் பிள்ளையாகப் பிறந்தவன். எனக்கு மாதா பிதா இருவரும் நீர் ஒருவரே. சில காலம் என்னை நீர் வளர்க்க வேண்டும். அதன்பின் நான் மூன்று உலகங்களையும் வென்று முடிசூடுவேன். தங்களுக்கு அப்போது தெரியும்... எனது வீரமும், பெருமையும்' என்றான்.

தப்பான சாபத்தின் பயனாகப் பிறந்தாலும் தன் பிள்ளை அல்லவா அவன்! எனவே, அவனுக்கு பலி (மகாபலி அல்ல; இவன் வேறு) என்று பெயரிட்டு, அவனிடம், ''மகனே! மூல முழுமுதற் பொருளான கணேசப் பெருமானின் மந்திரத்தை உனக்கு உபதேசிக்கின்றேன். அதை இடை விடாமல் ஜபித்து வந்தாயானால் உனக்கு சகலமும் ஸித்தியாகும்' என்று கூறி மந்திரோபதேசம் செய்தார். தந்தையிடம் மந்திரோபதேசம் பெற்ற பலி, கடும் தவம் புரிந்து விநாயகப் பெருமானின் தரிசனம் பெற்றான்.



அவரிடம், ''கருணைக் கடலே! மூவுலகங்களும் என் வசப்பட வேண்டும். உம்மிடம் என் பக்தி என்றும் மாறாதிருக்க வேண்டும். என் உடல் மறையும் வேளையில், என் ஆத்மா முக்தி நிலை அடைய வேண்டும்' என்றெல்லாம் வரங்கள் கேட்டான். அவனுக்கு வேண்டிய வரங்களை அளித்த விநாயகர், ''பலியே! அகில உலகங்களும் உனக்கு அடிபணிந்து நிற்கும். மேலும் இரும்பு, வெள்ளி, பொன்னாலான மூன்று கோட்டைகளையும் யாம் உனக்குத் தந்தோம். அம்மூன்றும் திரிபுரம் என்று அழைக்கப்படும். நீயும் திரிபுரன் என்றே அழைக்கப் பெறுவாய். சிவபெருமான் மட்டுமே உன்னை அழிக்கும் வல்லமை பெற்றவர்' என்று கூறி மறைந்தார்.

நாள்கள் நகர்ந்தன. வரத்தின் பலனாக முதலில் பூவுலகை வசப்படுத்தியவன். அடுத்தடுத்து பாதாள லோகம், தேவலோகம், பிரம்மலோகம், வைகுண்டம் என அனைத்துப் பகுதிகளையும் தன் ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்டான். நாள் தவறாமல் கணேசபூஜை செய்துகொண்டு பன்னெடுங் காலம் ஏகபோகமாக அரசு புரிந்து வந்தான்.

பலியின் கொடுமை காரணமாக ஒளிந்து மறைந்த தேவர்கள், ஒரு நாள் நாரதரிடம் சென்று, ''மஹரிஷியே! திரிபுரனால் எங்களுக்கு ஏற்பட்ட இந்த அவல நிலை என்று மாறும்?'' என்று கேட்டனர். அதற்கு நாரதர், ''தேவர்களே! கணேசப் பெருமானின் திருவருள் பெற்ற அந்த அசுரனை, சிவ பெருமானால் மட்டுமே வெற்றி கொள்ள முடியும். ஆனால், அதற்கும் விநாயகப் பெருமானின் திருவருள் வேண்டும். எனவே, நீங்கள் வெற்றிக்கு அதிபதியாம் கணபதியையே வணங்கி வழிபட வேண்டும்' என்று கூற, அதன்படியே

முப்பத்து முக்கோடி தேவர்களும் விநாயகப் பெருமானை வணங்கி வழிபட்டனர். விநாயகர், தேவர்களின் அவல நிலையை நீக்கத் திருவுளம் கொண்டார்.

ஓர் அந்தணராக வடிவம் கொண்டு, திரிபுரனின் அரண்மனைக்குச் சென்றார். அவரை வரவேற்று பூஜித்தவனிடம், அந்தணராக வந்த விநாயகர், திருக்கயிலையில் சிவபெருமான் வழிபட்டு வரும் சிந்தாமணி விநாயகர் திருவுருவம் தனக்குக் கிடைக்க வழிவகை செய்யும்படி கேட்டார்.

சிவபெருமான் தாமாக யாருடனும் போருக்குச் செல்ல மாட்டார் என்பதாலும், திரிபுரன் கேட்டனுப்பும் சிந்தாமணி விநாயகரைத் தர மறுப்பார் என்பது தெரிந்த காரணத்தாலும்தான் அப்படியொரு வேண்டுகோளை வைத்தார். திரிபுரன் தமக்கு வாக்களித்தபடி சிந்தாமணி விநாயகரை சிவபெருமானிடம் இருந்து பெற முடியாதபோது, திரிபுரன் சிவபெருமானுடன் போரிடத்தான் வேண்டும். சிவபெருமானால் மட்டுமே திரிபுரனை அழிக்க முடியும் என்ற நிலையில், திரிபுரன் சம்ஹாரம் செய்யப்படுவான்; தேவர்களின் துன்பமும் ஒரு முடிவுக்கு வரும் என்பதால்தான் விநாயகர் அப்படிக் கேட்டார்.

சிவபெருமான் சிந்தாமணி விநாயகர் திருவுருவத்தைத் தர மறுத்தார். திருக்கயிலையை நோக்கிப் போர் முழக்கம் செய்தான் திரிபுரன். சிவனார் போர்க்கோலம் கொண்டார். தேவர்கள் வடிவமைத்துக் கொடுத்த தேரில் அமர்ந்தவராகத் திரிபுரனுடன் போரிடச் சென்றார் சிவபெருமான்.

செல்லும் வழியில் தேரின் அச்சு முறிந்தது. காரணம் என்னவென்று கண்மூடித் தியானித்த சிவபெருமான், திரிபுரனை சம்ஹாரம் செய்யப் போகும் முன்பு தாம் விநாயகரை வழிபட மறந்ததுதான் காரணம் எனத் தெரிந்துகொண்டார். உடனே, விநாயகப் பெருமானை முறைப்படி பூஜித்துவிட்டு போருக்குச் சென்றார். திரிபுர சம்ஹாரமும் நிகழ்ந்தது. இந்த வகையில் சிவபெருமானின் வெற்றிக்குக் காரணம் கணபதிதானே!

திரிபுர சம்ஹாரம் நமக்கு ஒரு மெய்ஞ்ஞானப் பேருண்மையை உணர்த்துகின்றது. திரிபுரன் மனித ஆத்மா; திரிபுரங்கள் ஆணவம், கண்மம், மாயை ஆகிய மும்மலங்கள்; (சத்வம் தமஸ், ரஜஸ் என்ற முக்குணங்களாகவும் கொள்ளலாம்) சிவபெருமான் ஆத்ம முக்திக்குக் காரணகர்த்தா; கணபதி பரப்ரம்ம ஸ்வரூபம்.

நம்முடைய ஆத்மாவை பிறவாப் பேரின்ப நிலையில் திளைத்திருக்கச் செய்ய வேண்டுமானால், மும்மலங்களையும், ஐம்புலன்களையும் அடக்கும், முக்திக்கு காரண கர்த்தாவான சிவபெருமானின் மெய்ஞ்ஞான அமுதம் நமக்குக் கிடைத்திட வேண்டும்.

அந்த மெய்ஞ்ஞான அமுதமோ, பரப்ரம்ம ஸ்வரூபமான விநாயகப் பெருமானின் பேரருள் திறத்தால் மட்டுமே நமக்குக் கிடைக்கக்கூடியது. இப்படிப் பார்த்தாலும்கூட நம் ஆன்ம விடுதலை என்னும் முக்திநிலையை முடிவான வெற்றி நிலையை அடைய அருள்பவர் கணபதிதானே!

விநாயகப் பெருமான்தான் என்றும், எங்கும் எப்பொழுதும் நீங்காது நிலை பெற்றிருப்பவர்! இதை சிவபெருமானே கூறியுள்ளார். முருகப் பெருமான் ஒருமுறை சிவபெருமானிடம், ”தந்தையே! விரதங்களில் எல்லாம் சிறந்தது எது?” என்று கேட்டார். சிவபெருமான், ’சந்தேகமே இல்லாமல் கூறுகின்றேன். விநாயகர் சதுர்த்தி விரதம்தான் தலைசிறந்த விரதம்.’

கேட்ட முருகன் சற்றே குழம்பித்தான் போனார். காரணம் விநாயகரைப் பெற்றவரே சிவபெருமான்தானே? அப்படி இருக்க விநாயகரைக் குறித்த விரதம் எப்படி சிறப்புடையது ஆகும்?

முருகப்பெருமானின் குழப்பத்தை அவருடைய முகபாவத்திலிருந்தே தெரிந்துகொண்ட சிவபெருமான்,

''முருகா! மூலமுழுமுதற் பொருள் விநாயகர்தான். அவர்தான் மும்மூர்த்திகளாகிய எங்களையும், அகில உலகங்களையும் தோற்றுவித்தவர். அவர் இதற்கு முன்பும் பலமுறை பல காரண காரியங்களுக்காக அவதாரம் செய்திருக்கிறார். அப்படி ஒரு காரணத்தை முன்னிட்டே அவர் எனக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்கிறார். எனவே, அவரே சகலமும்.’

அறிவியல் என்ன கூறுகிறது?

ஒலியில் இருந்து ஒளியும், ஒளியில் இருந்து அனைத்தையும் இயக்கும் சக்தியும் தோன்றுவதாகத்தான் கூறுகிறது. வானில் மேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதும்போது முதலில் ஒலியும், அதனைத் தொடர்ந்து ஒளியும் தோன்றுகிறது. ஒலியின் வேகத்தை விட ஒளியின் வேகம் அதிகம் என்பதால் முதலில் மின்னல் பளிச்சிட தொடர்ந்து இடியோசை கேட்கிறது.

ஆக, இயக்கத்தின் காரணமான சக்திக்கும், சக்திக்குக் காரணமான ஒளிக்கும் மூலம், ஒலியாகத் திகழும் ஓங்காரம். மூலப் பொருளான அந்த ஓங்காரமே பிரளயத்துக்குப் பின்னும் பிரபஞ்சத்தில் எஞ்சி இருப்பது! எனில், அந்த ஓம்கார ஸ்வரூபனான கணபதிதானே அனைத்துக்கும் அதிபதி! அவரது திருவடியை அனுதினம் பணிவோம்!

●

நா.மகாலிங்கம்

தமிழர்களின் ஆதி தாயகம்



கபாடபுரத்தில் கடைசியில் ஆண்டவன் முடத்திருமாறன் - I. அவன் வழிவந்த முடத்திருமாறன்-II என்பவன் மணலூர்புரத்தில் இருந்துகொண்டு திருப்பரங்குன்றத்தில் தமிழ்ச் சங்கம் அமைத்துச் சீருடனும் சிறப்புடனும் பரிபாலனம் செய்து வந்தான். அப்போது மணலூர்புரத்திற்கும் திருப்பரங்குன்றத்திற்கும் இடையிலிருந்த பகுதி கடம்பவனமாக இருந்தது. இந்த வனத்தினிடையே ஒரு குளமும், சிறு சந்நிதியும் இருக்கக் கண்ட முடத்திருமாறான்-III வனத்தை அழித்து 'கோயில் எழுப்பித்து' இன்றைய சொக்கநாதர் கோயில் எழும்பக் காரணமானான். பிறகு இதுவே பெருநகராகி பண்டியர் தலைநகரமாயிற்று. இப்படி நான்மாடக்கூடல் தோன்றியது குலசேகர பாண்டியன் காலத்தில் என்கிறது திருவிளையாடற்புராணம்.

***

மேலே நான் சொன்ன செய்திகள் எல்லாவற்றுக்கும் தக்க ஆதாரம் இருக்கிறது. நமக்கு இன்று கிடைத்துள்ள பழந்தமிழ் நூல்களிலேயே அவை இருக்கின்றன. மதுரைக்காஞ்சி, 'நெடியோன்' என்று முதலாம் நிலந்தரு திருவிற்பாண்டியனைக் குறிப்பிடுகிறது. பல யாகசாலை முதுகுடுமியைப் பாட வந்த நெட்டிமையாரும் இவரைப் பலர் குடுமியின் முன்னோர் என்கிறார்.

'சீராறும் செங்கோ திறன் செங்கோ' என்று தமிழ் விடு தூது வர்ணிக்கிறது. சிலப்பதிகாரத்தில் பஃறுளி ஆறும், பனிமலை அடுக்கமும் கொண்ட ஆதித் தமிழ்நாட்டை கடல் கொண்ட செய்தி இருக்கிறது. ஒளிநாட்டு மக்களைப் பற்றிய செய்தி, 'ஒளியராவர் பிற மண்டலங்களை அரசாளுவதற்கு உரிய வேளாளர்' என்று கலித்தொகையில், நச்சினார் சொல்கிறார்.

விரிசடைப் பெருமானான, இறையனார், மகேந்திர மலையிலிருந்து தமிழ் வளர்த்த வரலாற்றுச் செய்தியை,


மன்னு மாமலை மகேந்திர மதனில் முன்

சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

என்று மாணிக்கவாசகர் வாக்கால் அறிகிறோம். திரிபுரமெரித்த கதை எல்லோருக்கும் தெரிந்ததே. பரமேச்வரன் இந்தப் போர் செய்ய திருவிற்கோலத் தேயிருந்து புறப்பட்டபோது, அவருடைய தேர் அச்சு முறிந்த இடமே அச்சிறுபாக்கம்.

கி.மு. 14,490-ம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த செங்கோவைப் பற்றிய செய்தி -





சக்தி களஞ்சியம்

’செங்கோவை ஒளிச்செம்மல்
திருக்கோவை மணிக்கோடு
தங்கு பெருவளநாட்டில்
தமிழிருந்து பிறன் காக்கும்
தமிழ் நாடியரங்கே–’

என்று கணியூர்சேந்தன் என்ற புலவர் பாடிய பாடல் கிடைத்திருக்கிறது. இவன் மகேந்திரமலையை விடுத்து மணிமலையைத் தலைநகராகக் கொண்ட செய்தி ’பேராற்றருகில் பிறங்கு மணிமலையில் சீராற்றும் செங்கோதிறன் செங்கோ நேராற்றும் பேர் அவையிலே நூற் பெருமக்கள் சூழ்ந்திருந்தப் பேராட்சி தமிழ்ப் பெருந்தேவி’ என்று தமிழ் விடு தூதில் சொல்லப்பட்டுள்ளது. முருகவேள் மாபெரும் தமிழ்ப் புலவராக இருந்த சிறப்பைப் பற்றி,


’சிவனை நிகர் பொதியவரை முனிவன் அகமகிழ
இருசெவி குளிர இனிய தமிழ் பகவானே!

என்ற திருச்செந்தூர் திருப்புகழ் சொல்கிறது. முருகவேள் தமிழ் எழுத்து சீர்திருத்தம் செய்ததை

’வழுதியர் தமிழின் ஒரு பொருள்
அதனை வழிபட மொழியும் குமரேசா’

என்று குன்றுதோறாடல் திருப்புகழ் சொல்வதைக் காண்கிறோம். பெருவளநாடு, ஒளிநாடு, மேருமலை, பஃறுளியாறு எல்லாம் இருந்தன என்பதற்கும் பல சான்றுகள் இருக்கின்றன. கன்னியாறு ஒளி நாட்டில் கடைசியில் ஓடிய நதி. இதைத் திருமூலர் ஈறான கன்னி என்று குறிப்பிடுகிறார். இவை எல்லாம் நம் நாட்டிலேயே உள்ள ஆதாரங்கள். இந்த மறைந்த ஆதித் தமிழர் தாயகத்தைப் பற்றிப் பல வெளிநாட்டினரும் ஆராய்ச்சி செய்து பல அரிய தகவல்களை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். பல புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. அவர்கள் இந்தப் பகுதியை லெமூரியா கண்டம் என்கிறார்கள்.

எச்.ஜி. வெல்ஸ் தம்முடைய ’வரலாற்றின் சுருக்கம்’ என்ற நூலில் பஞ்சாப், காஷ்மீர், காந்தாரம்




ஆகியவைகளை எதிர்க் கரையாகக் கொண்ட ஒரு நிலப்பிரதேசம், அரபிக்கடலிலிருந்து புறப்பட்டு வங்காளக் குடாக் கடல் வரை விரிந்து கிடந்ததை வரைபடம் போட்டுக் காட்டியிருக்கிறார். கங்கைப் பிரதேசம் கடலுக்கு அடியில் இருக்க இந்திய நாடு கடல் சூழ்ந்த தீவு போல் இருந்திருக்கிறது.

சென்னை ராஜதானி நிர்வாகக் குறிப்பு நூலில், குருக்ஸ், செயனி, மோரிஸ் என்கிற ஆய்வாளர்கள், தற்போது இந்துமாக் கடலினுள் உள்ள பகுதி ஒரு காலத்தில் ஒரு கண்டமாகவும் லுமேரிய என்று அழைக்கப்பட்டு வந்தது. சீனா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, காமரூபம் வரை நான்கு திசைகளிலும் நீண்டிருந்தது என்கிறார்கள்.

கடல் ஊழிகள் ஏற்பட்டு இந்தக் கண்டம் மறைந்ததை பல வரலாறுகள் தெளிவாகச் சொல்கின்றன. மகாவம்சத்தில் தென்மதுரையும் அங்கே தமிழ்ச் சங்கமிருந்ததும் கூறப்பட்டிருக்கிறது. அங்கேதான் இலங்கையின் விஜயனும் அவன் வம்சாவழியினரும் தங்கள் மணமகள்களைத் தேர்ந்தெடுத்தார்கள். பதினான்காம் நூற்றாண்டு சிங்கள இலக்கியங்களில் இதைக் காணலாம்.

இலங்கைத் தமிழறிஞர் இ.எல். தம்பித்துரை, 'சரித்திர முற்கால திராவிடம்' என்ற நூலில் கடல் கொந்தளிப்புத் தோன்றி, பாண்டிநாட்டு 'வல்மைரா' பகுதியை அழித்ததையும் பிறகு இன்னொரு கொந்தளிப்பில் இலங்கையும், இந்தியாவும் பிரிந்ததையும் குறிப்பிடுகிறார். 6,400 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கொந்தளிப்பு நேர்ந்ததாம். லெமூரியா கடலில் மூழ்கிய விதத்தைப் புவியியல் ரீதியாக அலெக்ஸாண்டர்



நடத்திய யுத்தம் பத்து நாள்கள் நடைபெற்றது. அதனாலே இன்று ஈசுவரன் கோயில்களில் நாம் பத்து நாள் உற்சவம் நடத்தி வருகிறோம். முருகவேள் செய்த யுத்தம் ஆறு நாள்கள். இது ஐப்பசி மாதத்து அமாவசைக்குப் பின் தொடங்கி நடந்தது. அதையே கந்தர் சஷ்டியாகக் கொண்டாடுகிறோம். இந்த இரண்டு உற்சவங்களும் தெய்வ சம்பந்தமுடையன அல்ல; தமிழர்களின் ஆதி ரட்சகர்களான மாபெரும் தமிழ்த் தலைவர்கள் வாழ்வில் நடந்த சிகரமான செய்தியை நினைவுகூரும் விழாக்களே!

இதுவரை நான் சொன்னது எல்லாம் பல ஆய்வாளர்கள் அப்போது இருந்த ஆதாரங்களை வைத்துக் கொண்டு நமது ஆதித் தமிழகத்தைப் பற்றி கண்ட உண்மைகள். இப்போது வானஇயல் நிபுணர்களும், பூமிஇயல் நிபுணர்களும், ஆழ்கடல் ஆய்வு நிபுணர்களும், இன்றைய விஞ்ஞானிகளும் பல்வேறு ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்தவர்களும் நமது புராணங்கள் ஆதி தமிழகத்தையும் இந்த உலகம் தோன்றிய கால அளவையும் பற்றிக் கூறி இருப்பதை ஏற்றுக் கொள்கின்றனர்.

நமது புராண இதிகாசங்கள் மூலமாக நமக்கு நம் ஆதித் தமிழகத்தின் ஒரு கோடி ஆண்டுகளுக்கு வேண்டிய வரலாற்று உண்மைகள் கிடைக்கின்றன.

நமது மதப் புலவர்கள் என்ன சொல்கிறார்கள்?

இப்போது நடைபெறுவது சுவேதவராக கல்பம் என்று சொல்கிறார்கள். ஒரு கல்பத்துக்கு 4 லட்சத்து 32 ஆயிரம் ஆண்டுகள் என்று ஆய்வாளர்கள் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

சுவேதவராக கல்பம் என்பது 38-வது கல்பம். அப்படியானால் நமது ஆதித் தமிழகத்துக்கு ஒரு கோடியே 64 லட்சத்து 16 ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன. வானஇயல்படி, ஏழாவது மன்வந்திரம் நடப்பதாகக் கூறுகிறார்கள்.

மன்வந்திரம் என்றால் என்ன?

அது ஒரு சூரிய மண்டல வட்டத்தைக் குறிப்பிடும் காலம். சூரிய மண்டலம் இடைவிடாமல் சுழன்றுகொண்டே இருக்கிறது. அந்த மண்டலம் வானத்தில் இருக்கும் இருபத்து ஏழு நட்சத்திரங்களையும் ஒருமுறை சுற்றி வருவதைத்தான் சூரியவட்டம் என்கிறார்கள்.

சூரிய மண்டலம் ஒவ்வொரு நட்சத்திரத்தையும்

கொண்டராடால் விவரித்திருக்கிறார். ராமாயணத்தில் தன் மகன் ராமனுக்குப் பட்டம் சூட்டுவது விஷயமாக தசரதன் கூட்டிய சபைக்குக் குலசேகரபாண்டியன் என்ற மன்னன் தெற்கே இருந்து வந்ததாகச் செய்தி இருக்கிறது.

சீதையைத் தேடி வர அனுமனை அனுப்பும்போது சுக்ரீவன், 'சில செய்யலாம், சில செய்யக் கூடாதது'களைச் சொல்கிறான். பாண்டிய நகர்களுக்குள் போகாதீர்கள்; இனிமையான தமிழ்மொழி பேசப்படுகிறது. அதில் மயங்கி நின்றுவிடாதீர்கள் என்று எச்சரிக்கிறான்.

தங்கத்தால் செய்த பெரிய கதவுகளையுடைய பாண்டிய தலைநகர் பற்றியும் அவன் சொல்கிறான். விரிசடைப் பெருமானான, பரமேச்வரன் என்கிற இறையனார் ஏழு புரங்களை எரித்து

கடப்பதற்கு ஆயிரம் வருடங்கள் ஆகின்றன. இருபத்து ஏழு நட்சத்திரங்களையும் சூரிய மண்டலம் கடப்பதற்கு 27,000 ஆண்டுகள் ஆகின்றன. இவ்வாறு சூரிய மண்டலம் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டே உள்ளது. மன்வந்திரக் கணக்குப்படிப் பார்த்தாலும் நமது ஆதித் தமிழகத்துக்கு ஒரு கோடி ஆண்டுகளுக்கு மேலான அசைக்க முடியாத வரலாறு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

யுகக் கணக்குப்படிப் பார்த்தாலும் நமது ஆதித் தமிழகத்தின் ஆண்டை மிகத் தெளிவாக நிர்ணயிக்க முடிகிறது. ஒரு துருவ வட்டம்தான் ஒரு யுகம். ஒரு துருவ வட்டத்துக்கு 2,700 ஆண்டுகள். இப்போது நடைபெறுவது 16-வது சதுர்யுகம் என்கின்றனர் ஆய்வாளர்கள். ஒரு சதுர் யுகத்திற்கு 10,800 வருடங்கள் ஆகின்றன.

இந்தக் கணக்குப்படிப் பார்த்தாலும் கிட்டத்தட்ட ஒரு கோடி ஆண்டுகளுக்கு நமது ஆதித் தாயகத்துக்கு வேண்டிய சான்றுகள் நமது புராணங்களில் இருந்தே கிடைக்கின்றன.

சப்தரிஷி பஞ்சாங்கம் ஒரு யுகத்திற்கு ஐந்து ஆண்டுகள் என்று நிர்ணயம் செய்து வைத்திருக் கிறது. எனவே யுகம் என்ற சொல்லாட்சியில் அது பயன்படும் இடத்துக்கு ஏற்ப ஆண்டுகளை நிர்ணயம் செய்ய வேண்டும். பரத கண்டம் என்றும் அதையே ஜம்புத் தீவு என்று சொல்வதை யும் பார்த்திருக்கிறோம். திருமணங்களிலும், மற்ற சுபகாரியங்களிலும் மந்திரங்களை உச்சரிக்கும்போது பாரதவர்ஷே, பரதகண்டே, ஜம்புத்தீவே என்ற சொல்லாட்சி வருவதைக் கேட்டிருக்கலாம். இதைப் பார்க்கும்போது நமது பாரத நாடு ஒரு காலத்தில் தீவாகத்தான் இருந்திருக்கிறது என்று யூகிக்க முடிகிறது.

நமது பாரத நாடு அந்த நாளில் இப்போதுள்ள பூமத்திய ரேகை இருந்த இடத்தில் நான்கு புறமும் கடல் சூழ்ந்த ஒரு தீவாகவே இருந்திருக்கிறது. அந்தத் தீவு மெதுவாக வடக்கு நோக்கிப் பிரயாணம் செய்திருக்கிறது என்பதை இன்றைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

நமது பரத கண்டமாகிய ஜம்புத் தீவு பூமத்திய ரேகையில் இருந்து 15,000 வருடத்துக்கு ஒரு மைல் வீதம் வடக்கு நோக்கிப் பிரயாணம் செய்திருக்கிறது. இப்போது நமது இந்தியா இருக்கும் இடத்துக்கும் பூமத்திய ரேகைக்கும் 1,200 மைல்களுக்கு மேல் இருக்கிறது.

இதை விஞ்ஞானிகள் கணக்குப்படி பார்த்தால், 15 ஆயிரம் வருடத்துக்கு ஒரு மைல் வீதம் இப்பொழுது இருக்கும் இடத்தை நமது பாரதநாடு வந்து அடைவதற்கு ஒரு கோடியே சொச்சம் ஆண்டுகள் ஆகி இருக்கின்றன.

எனவே, எப்படி பார்த்தாலும் நமது முன்னோர் கள் எழுதி இருக்கும் புராணங்களில் வரும் செய்திகள் எல்லாம் வரலாற்று உண்மைகளை வரையறுத்துக் குறிக்கக் கூடிய செய்திகள்தான்.

புராணங்களை எல்லாம் வெறும் கற்பனை என்றோ, மிகைப்படுத்திக் கூறுவது என்றோ ஒதுக்கிவிடலாம். அதன் அடிப்படையில் மீண்டும் நமது நாட்டின் வரலாற்றை ஆய்ந்து எழுத வேண்டும். நமது நாட்டிற்கு ஒரு கோடி ஆண்டுகளுக்கு மேல் வரலாற்றுப் பின்னணி மிகத் தெளிவாக இருக்கிறது. கடல் கோள்களிலும், மற்ற இயற்கை உற்பாதங்களிலும் நம்முடைய நாட்டின் பெரும்பகுதி அழிந்துபோனாலும், அதில் தமிழ் மக்கள் வளர்த்த நாகரிகம், பண்பாடு ஆகியவை பற்றி நமது புராணங்களில் கூறி இருக்கின்றன.

புராணங்களை விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ந்து ஆதித் தமிழகத்தின் புதிய சரித்திரத்தை எழுதும் முயற்சியில் ஈடுபட வேண்டும். இதை எழுதுவதற்குப் பூமிஇயல் ஆய்வுகளிலும், வான இயல் ஆய்வுகளிலும், ஆழ்கடல்இயல் ஆய்வுகளிலும், வரலாற்று ஆய்வுகளிலும், மொழிஇயலிலும் நிறைந்த அறிவு பெற்ற நிபுணர்கள் இணைந்து செயல்பட வேண்டும்.

அப்படி இணைந்து உருவாக்கப்படும் நூலானது, உலகில் மனித நாகரிகம் தோன்றியது ஒரு கோடி ஆண்டுகளுக்கு முன்பே என்றும், அதுவும் ஆதித் தமிழகத்தில்தான் என்றும் கூறும்.

நூறு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மிக உயர்ந்த பண்பாட்டையும் நாகரிகத்தையும் படைத்தவர்கள் ஆதித் தமிழகத்தில் வாழ்ந்த தமிழர்கள் என்பதை எண்ணி நாம் பெருமைப்படலாம். இதன் மூலம் இன்றைய தமிழ் மக்களுக்கு உலகத்தினர் மத்தியில் நல்ல மதிப்பும் மரியாதையும் ஏற்படும்.

நாம் மீண்டும் பழைய மகோன்னத நிலைக்குச் செல்வதற்கு வேண்டிய ஊக்கத்தையும் ஆர்வத்தையும் பெற்று உற்சாகத்துடன் உழைக்க முடியும்.

●

காயத்ரி கணேஷ்

ஓம்கார வடிவான ஆலயம். அதில் எழுந்தருளியிருக்கும் அவன் திருமுக தரிசனம் காண்பவரை பேரின்பப் பெருவெள்ளத்தில் ஆழ்த்தும். அடியார்களுக்கு, ஒரு கணமும் பிரிய விரும்பாத காதல் அவன் மேல் உருவாகிறது. தம் நிலை மறந்து செந்திலையே தியானிக்கிறார்கள்.

ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு குணம் மிகுந்திருக்க அருள் பாலிக்கும் கந்தன் இங்கு வீரம் மேவிட நிற்கிறான். அவனைக் கண்டாலே மனம் வலிமை பெறும். ‘செந்தில் நகர் வாழும் ஆண்மைக்காரன்’ என்றல்லவா அருணகிரி பாடுகிறார். ஆண்மை என்றால் இங்கு ஆளுமை. சகல உலகங்களையும் அடக்கி ஆளும் ஆண்மை. பார்க்கும் அனைவரும் ‘இவனே அடைக்கலம்’ என்று அறியத்தக்க ஆளுமை. அப்படிப்பட்ட முருகனின் முகம்பாடி முடித்துவிட்ட நக்கீரர் அவன் தோள்களையும் அதில் தவழும் பன்னிரு கரங்களையும் கண்டு சிலிர்க்கிறார். அதன் பெருமையைப் பாடிடத் துடிக்கிறார்.


இருகை உடைய மனிதர்களின் பிரதாபத்தையே போற்றிப் புகழ்வர் புலவர்கள். இவனோ பன்னிருகையன். வாரி வழங்குவதில் வள்ளல். வள்ளியின் மணாளன், தேவர் தலைவன் என்னும் இருக்கை பெற்றவன். அசுரர் குலத்தின் தருக்கை ஒழித்தவன். அவன் புகழைப் பாடாமல் வேறு எவன் புகழைப் பாடுவது... தோள்களிலிருந்து தொடங்கிக் கரங்களின் பெருமைகளைக் களிப்போடு பாடத் தொடங்கினார் நக்கீரர். முன்கை நீண்டால் முழங்கை நீள்வதுபோல் தமிழும் பக்தியும் சேர்ந்தே பொலிந்தன.

முருகனின் தோள்களில் மாலை தவழ்கிறது. அது அவன் அழகிய மார்பில் பொருந்துகிறது. அதில் மூன்று அழகுடைய கோடுகள் தோள்வரைக்கும் நீள்கின்றன. வலிமையுடைய அந்தத் தோள்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்கக்கூடிய பன்னிரு கரங்களைத் தாங்கி இருக்கின்றன.


பன்னிரு கரங்கள் எதற்கு? முகம் ஆறும் ஆறு பணிகளை மேற்கொள்கின்றன என்று கண்டோம். முகம் தனியே செயல்படமுடியுமா? யாசகர் ஒருவர் கையேந்தி நிற்கும்போது கனிவான முகத்தோடு பார்த்தால் போதுமா...



சூரனை ஆட்கொண்ட கருணை வள்ளல் (திருச்சீரலைவாய்)



சென்ற இதழின் தொடர்ச்சி...



அவருக்கு அள்ளி வழங்க வேண்டுமே! அதற்குத் தேவை திருக்கைகள் அல்லவா! முகம் காணும். மனம் நினைக்கும். கை செய்யும். மனம் நினைப்பதை கை செய்வதனால்தான் செயலுக்கே செய்கை என்னும் சொல் வந்தது.

வலியவனோடு மோதும் ஒருவன் அவனை ஒரு கை பார்க்காமல் விடப்போவதில்லை என்று தானே சொல்கிறான். கை பலத்தின் அடையாளம். முருகப்பெருமானுக்கோ பன்னிரு கரங்கள். இரண்டு இரண்டு கரங்களாக மொத்தம் ஆறு இணைகள். ஆறு முகங்களின் பணிகளைச் செய்யக் காத்திருக்கும் அற்புதப் படைகள்.

விண்செலன் மரபி னையர்க் கேந்திய

தொருகை உக்கஞ் சேர்த்திய தொருகை

மேல் இரு கைகளில் ஒரு கை தேவர்களைக் காக்க மேல் நோக்கி ஏந்திய நிலையில் உள்ளது. தேவர்கள் வானுலகில் சஞ்சரிப்பவர்கள். விண்ணில் இயங்குபவர்கள். தேவர்கள் மட்டுமா முனிவர்களும் ரிஷிகளும் வானில் சஞ்சாரம் செய்பவர்கள். தேவர்களைக்கூட அசுரர்கள் விட்டு வைப்பார்கள். ஆனால், முனிவர்களைத் தொந்தரவு செய்துகொண்டே இருப்பார்கள். காரணம் முனிவர்களின் தவம் அசுரர்களை அழிக்கும் வல்லமை கொண்டது. எனவே அவர்கள் எக்காலமும் முனிவர்கள் இருக்கும் இடம் அறிந்து அவர்களைத் தாக்குவார்கள். எனவே,

அழகன் முருகனின் ஆற்றுப்படை

முனிவருக்கும் தேவருக்கும் முருகப்பெருமான் தன் திருக்கையைக் காட்டி அபயம் அளித்து பயம் நீக்குகிறான். அவன் நிற்கும் கோலத்திலேயே நம் பயம் அகல வேண்டும். அவனின் ஒரு கையே நம் பகையைத் தீர்க்க வல்லது என்பதை உணர வேண்டும். அதற்குத்தான் இணையான மற்றொரு கையை இடுப்பில் ஊன்றி நிற்கிறார்.

இன்னல் தீர்க்கும் இரு கரங்கள்

நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின் மிசையசை இயதொருகை

அங்குசங் கடாவ வொருகை யிருகை

முருகப்பெருமானுக்கு மயில் வாகனம் போலவே யானையும் ஒரு வாகனம். இந்திரன் தேவர் குலம் காத்தருளியதற்காக ஐராவதத்தையே சீராகக் கொடுத்தானாம். முருகப்பெருமான் அந்த யானையின் மீது ஏறி அமர்ந்திருக்கிறார். யானையின் மீது அமர்ந்தாலும் அவன் எழில் மலைமேல் இருக்கும் சூரியனைப் போன்று பிரகாசிக்கிறது. செவ்வாயின் அதிபதி அல்லவா அவன்... சிவந்த நிற ஆடையை உடுத்தியிருக்கிறான். யானையின் மீது அமர்ந்து ஒரு கரத்தைத் தன் தொடைமேல் வைத்திருக்கிறான். மற்றொரு கரம் அங்குசம் ஏந்தியிருக்கிறது.

யானைமீது புதிதாக ஏறுபவர்களும் பயப்படுபவர்களும் இரு கைகளையும் யானையின் மத்தகத்தின் மீது வைத்துப் பிடித்துக்கொண்டிருப்பார்கள். யானையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள் தன் கரத்தைத் தொடைமேல் வைத்திருப்பார்கள்.

யானையைப் போன்றதுதான் மனமும். மனம் அடிக்கடி மாறும். மதம் பிடிப்பதைப்போல மனதுக்கு காமம், குரோதம் போன்ற மாயைகளால் மயக்கம் ஏற்படும். யானை தன் பாகனையே கவிழ்த்துவிடுவதுபோல இவை இறைநம்பிக்கையை அகற்றிவிடும். ஆனால், தேர்ந்த பாகன் யானையைக் கட்டுப்படுத்துவான். தன் கையில் இருக்கும் அங்குசத்தால் யானையை அடக்கி ஆள்வான். அதேபோன்று முருகனை நம் மன யானையில் அமர்த்திக் கொண்டால் அவன் தன் அருள் என்னும் அங்குசத்தால் நம்மைக் காப்பான்.

ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப வொருகை

மார்பொடு விளங்க வொருகை

வேல் முருகப்பெருமானின் திருக்கை ஆயுதம். வேலிருக்க வினையில்லை




நல்வாழ்த்துக்களுடன்!



ஜோதி ஜோதி ஜோதி சுயஞ் → ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி பரஞ் → ஜோதி ஜோதி ஜோதி சிவம்

ஏ.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

சக்தி பைனான்ஸ் பில்டிங், டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயமுத்தூர் - 641 018 போன் : 0422-2233982, 2233983



என்பதுதான் அடியார்களின் நம்பிக்கை. திருச்சீரலைவாயே போர்க்களம்தான். அங்கே ஒரு காலத்தில் சூரபத்மனோடு முருகன் போரிட்டான். அதில் வெற்றிபெற்றான். ஆனால், இந்தப் பிரபஞ்சத்தில் வினைகள் செயலாற்றிக் கொண்டேயிருக்கின்றன. அவற்றுள் தீவினைகளைக் கண்டு அவற்றின் மீது அசுர சக்திகள் ஏறிக்கொள்கின்றன. இப்போது அசுரன் தனி ஒருவனாக அடையாளம் கண்டுகொள்ளும்படி இல்லை. அப்படியானால் எல்லோரையும் சம்ஹாரம் செய்ய முடியுமா? அதற்குத்தான் முருகன் தன் திருக்கை வேலினை வைத்திருக்கிறான்.

அது மாமரமாகி நின்றாலும் இருகூறாய் மாற்றி வேலும் மயிலுமாகச் செய்யும் வேலையைச் செய்யும். அவன் முன் போய் நின்றால் வேல்கொண்டு நம் மனதைத் துளைத்து அதில் இருக்கும் தீவினையை நல்வினையாக மாற்றுவான். அதற்காகவே அவனின் கையில் இருக்கும் வேல் சுழன்றுகொண்டே இருக்கிறதாம். மற்றொரு கையில் கேடயம் ஏந்தி எப்போதும் பக்தர்களுக்காக யுத்தம் செய்யக் காத்திருக்கிறான். அடுத்த இருகைகள் ஞானத்தின் அடையாளம்.

மார்பொடு விளங்க வொருகை

தாரொடு பொலிய வொருகை

ஒரு கையை அவன் தன் மார்பில் வைத்திருக்கிறான். அவனுக்குள் எல்லாம் அடக்கம் என்பதை உபதேசிக்கும் அருள் சின்னம் அது. மனம் அவனுள் ஒடுங்க வேண்டியது. முருகனிடம் வேண்டி வருபவர்களின் வேண்டுதலுக்கு ஏற்ப வழங்குபவன் அவன். அவன் பிணி தீர்ப்பான். செல்வம் அருள்வான். தீவினை போக்குவான். ஆனால், இவை எல்லாம் விடுத்து ஞானம் வேண்டி வரும் நல்லவர்க்கு அதை உபதேசிப்பான். காரணம் அவன் ஞானஸ்கந்தன். அதை உணர்த்தும் திருக்கோலமே அவன் மார்பில் கை விளங்குவதும் மற்றொரு கரத்தில் மாலை தவழ்வதும்.


கீழ்வீழ் தொடியொடு மிமீசைக் கொட்ப வொருகை

பாடின் படுமணி யிரட்ட வொருகை

புராணங்களில் எத்தனையோ போர்கள் நடந்துள்ளன. அவற்றில் எல்லாம் மிகப் பெரிய போர் தேவாசுரப் போர் என்று போற்றப்படும் திருச்சீரலைவாயில் நடைபெற்ற போர். போர் என்றாலே அழிவு. பிணம் மட்டுமே மிஞ்சிக் கிடக்கும் அவலம். இலக்கியங்கள் மனிதர்கள் போரை வெறுக்க வேண்டும் என்று விரும்பின. அதனால்தான் கம்பன், 'யாரோடும் பகைகொள்ளலன் என்றபின் போர் ஒடுங்கும். ஆனால் புகழ் ஒடுங்காது' என்று பாடினான். பிற புலவர்களும் போர்க்களத்தின் கொடூரமான காட்சிகளைப் பதிவு செய்தனர். அதைப் படிக்கும்போதே அச்சமும் பீதியும் உண்டாக வேண்டும். மற்றுமொரு போரைத் தொடங்க மன்னன் எவனுக்கும் மனம் வரக்கூடாது என்று நினைத்தனர்.

போருக்குப் பின் கொற்றவைக்குப் படையல் போடுவதும், பிணங்களைப்

பேய்கள் தின்னும் கூத்தை எழுதிச் செல்வதும் அதற்காகத்தான். வெற்றியைத் தருபவள் சக்தி. அவளே கொற்றவை. போரில் பகைவர்களை வென்ற மன்னவன், அவளை வழிபாடு செய்வது வழக்கம். முருகனும் அவ்வாறு வழிபாடு செய்கிறான். அன்னையை வழிபடுவது எப்படி என்று மகனே வழிகாட்டும் பாவம் அது. களவேள்வி எனப்படும் வெற்றி வேள்வியைத் தொடங்க வேண்டும். முருகப் பெருமானின் ஒரு கை தரைநோக்கி இருக்கும்போது அதில் அணிந்திருக்கும் வளை ஓடிக் கீழே விழும். அவன் அதை சரி செய்வதுபோலவே கையை மேலே நோக்கி வேள்வி தொடங்கட்டும் என்று கட்டளையிடுகிறான். படையல் போடும் வேள்வி அல்லவா... படையல் என்றால் மணி ஒலிக்க வேண்டாவா... முருகன் தன் திருக்கை ஒன்றில் மணி தாங்கி அதை ஒலிக்கச் செய்கிறான். அந்த மணி இதுவரை இருந்த தீமைகள் ஒழிந்து நன்மைகள் தொடங்கி விட்டன என்று தேவர்களுக்கு ஒலித்தன. கொற்றவையைக் கொண்டாடிய பின் பேய்கள் எல்லாம் பல நாள்கள் அங்கு கிடந்த பிணங்களைத் தின்று தீர்த்தனவாம்.



நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை

வானர மகளிர்க்கு வதுவை சூட்ட வாங்கப்

பன்னிரு கையும் பாற்பட வியற்றி

இறையின் கொடையல்லவா மழை. பஞ்சபூதங்களில் ஒன்றான வான் பொய்த்தால் இந்த உலகம் என்ன ஆகும்? இதுவரை அக்கிரமங்கள் சூழ்ந்து மழைப்பொழிவு இல்லாமல் உலகம் வாடியது. அல்லது சூரபத்மனுக்கு பயந்து வருணன் தன்னை மறைத்துக்கொண்டு வாழ்ந்தானோ என்னவோ, முருகப்பெருமான் அவன் பயம் நீங்குமாறு வானை நோக்கி ஒரு கை காட்டி மழை பொழிய உத்தரவிடுகிறான். அதுகாறும் வாடியிருந்த நிலமகள் குளிர்கிறாள். இந்த உலகம் புத்தெழிலும் புத்துயிரும் பெறுகிறது.

அதேபோன்று அதற்கு இணையான மற்றொரு கை வான மகளிர்க்கு மணமாலை சூட்டியதாம். இதற்குப் பலரும் பல பொருள் சொல்வார்கள். தேவமகளிரின் மணமாலையை மீட்டுக் கொடுத்து அவர்களை நித்திய சுமங்கலிகளாக ஆசீர்வதித்தான் முருகப்பெருமான் என்பார்கள். இந்திராணியின் தாலியைக் காத்தவன் முருகன் என்கிறது கந்தரலங்காரம். இப்படி முருகனின் பன்னிரு கரங்களும் பன்னிரு தொழில் புரிய முருகப்பெருமான் திருச்செந்தூரில் எழுந்தருளி இருக்கிறான்.

அவன் சந்நிதியில் துந்துபி முழங்குகிறது. வைரம் போன்ற கொம்பு என்னும் இசைக்கருவி ஒலிக்கிறது. மங்கலமான வெண் சங்கு முழங்குகிறது. இடிபோல ஒலிக்கும் முரசத்தின் முழக்கத்துடன், நிறைய பீலிகளை உடைய மயில் வெற்றிக் கொடியில் இருந்து அகவுமாறு உலகம் புகழ்கிற, ஓங்கி உயர்ந்த, சிறந்த பெருமையுடைய திருச்செந்தூர் என்னும் பதியில் எப்போதும் எழுந்தருளியிருக்கிறான் முருகப்பெருமான்.

நக்கீரருக்குத் திருச்செந்தூரின் பெருமைகளைப் பாடி முடிக்க மனமேயில்லை. ஆனாலும் பிற படைவீடுகளையும் பாட வேண்டும் என்னும் ஆவலில் அடுத்த படைவீட்டைப் பாடத் தொடங்குகிறார்.

-அடுத்த இதழில்

இரா.பொன்னாண்டான்

ஆசிரியப் பணிக்கு கௌரவம் சேர்த்தவர் டாக்டர் ராதாகிருஷ்ணன்



ஆசிரியப் பணிக்கு மகிமை சேர்த்தவர் டாக்டர் ராதாகிருஷ்ணன். அவர் நல்ல ஆசார்யர்; தத்துவ மேதை; தலைசிறந்த நிர்வாகி; மக்கள் நலம் கருதும் அரசியல்வாதி; ஆளுமை மிக்க தலைவர் எனப் பன்முகத் திறமைகளை ஒருங்கே கொண்ட பண்பாளர்.


1888-ம் வருடம் திருத்தணிக்கு அருகிலுள்ள சர்வபள்ளி என்ற கிராமத்தில் ஏழ்மையான பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர் ராதாகிருஷ்ணன். அந்தக்கால வழக்கப்படி அவருடைய தந்தை அவர் புரோகிதராக வேண்டும் என்று விரும்பினார். ஆனால், ராதாகிருஷ்ணன் கல்வி கற்பதில் ஆர்வம் கொண்டிருந்தார்.

குடும்பம் வறுமையில் வாடினாலும், அரசு உதவித் தொகை மூலம் கல்வி பயின்றார். கல்வியில் ஆர்வம் மிகக் கொண்டிருந்த ராதாகிருஷ்ணன், தம்முடைய இளம் வயதிலேயே புத்தகங்கள் வாசிப்பதில் அதீத ஆர்வம் கொண்டிருந்தார். வேதாந்தம், தத்துவம், அரசியல் என்று பல்துறை நூல்களை வாசித்ததுடன் மட்டுமல்லாமல், தாம் படித்த நூல்களை ஆராய்ச்சி மனப்பான்மையுடன் தீவிரமாகச் சிந்திக்கவும் செய்தார்.

இந்துமத உபநிடதங்கள், பகவத் கீதை, பிரம்மசூத்ரா ஆகியவற்றையும், சங்கரர், ராமாநுஜர், மத்வர் போன்றோரின் தத்துவங்களையும் கற்றதுடன், மேற்கத்திய சிந்தனையாளர்கள் பலரின் தத்துவங்கள் மற்றும் ஆங்கில இலக்கியங்களையும் அவர் விட்டு வைக்கவில்லை.

சென்னை பிரசிடென்சி கல்லூரியில் உதவி விரிவுரையாளராகத் தம் பணியைத் தொடங்கிய ராதாகிருஷ்ணன், அன்றைய கல்கத்தா பல்கலைக்கழகத்தில் தத்துவப் பேராசிரியராக இருந்த காலத்தில் 1923-ல் அவருடைய எழுத்தாற்றலைப் பளிச்சிடச் செய்த 'இந்தியத் தத்துவம்' என்ற நூல் வெளியிடப்பட்டது.

மேலைநாட்டு ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக மேடைகளில் இந்துமதத் தத்துவங்கள் பற்றித் தாம் ஆற்றிய சொற்பொழிவுகளை இந்திய சுதந்திரத்துக்கான சொல்லாயுதமாகப் பயன்படுத்தினார். 'ராதாகிருஷ்ணனின் பார்வையில் பிறரை





வசீகரிக்கும் மாயாஜாலம் உள்ளது. முகத்தில் ஒளி வீசுகிறது. அவருடைய தேனினுமினிய சொற்பொழிவு இன்னிசையாக ஒலிக்கிறது' என்று ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகப் பேராசிரியர் இஃபர்ட் ஜோன்ஸ் புகழ்ந்திருக்கிறார்.

அவரிடம் பயின்ற மாணவர்கள், 'தெளிவான எண்ண ஓட்டம், தீர்க்கதரிசனம், தடுமாற்றமின்றி வரும் சொற்கள், அழகான மொழிநடை கொண்டவர்' என்று ராதாகிருஷ்ணனுக்குப் பாராட்டு மழை பொழிந்திருக்கிறார்கள்.

அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழகம் நடத்திய அனைத்துலக தத்துவ மாநாட்டில் எந்த ஒரு குறிப்பும் இல்லாமல் குற்றால அருவிபோல் ராதாகிருஷ்ணன் ஆற்றிய உரையில் மயங்கிப் போன ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம் அவருக்கு பேராசிரியர் பதவி கொடுத்து கௌரவித்தது. பிரிட்டிஷ் அகாடமியும் தன் பங்குக்கு 'ஃபெலோஷிப் விருது அளித்து ராதாகிருஷ்ணனை கௌரவித்தது. இந்திய அரசும் 1952-ம் வருடம் அவருக்கு 'பாரத ரத்னா' விருது அளித்தது.

சோவியத் யூனியனுக்கான இந்தியத் தூதராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே வலுவான நட்புறவை ஏற்படுத்தினார்.

1952 முதல் 1962 வரை இந்தியாவின் முதல் குடியரசுத் துணைத் தலைவராகவும், 1962 - 67 வரை குடியரசுத் தலைவராகவும் பொறுப்பேற்றார். அவர் குடியரசுத் தலைவராக இருந்த காலத்தில் சீனா, மற்றும் பாகிஸ்தானுடன் ஏற்பட்ட யுத்தங்களில் மிகச் சிறப்பான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். குடியரசுத் தலைவராக இருந்தபோது அவருடைய வருமானம் ரூ.10,000/-. அதில் தனக்குத் தேவையான ரூ.2,500/- மட்டும் எடுத்துக்கொண்டு மீதிப் பணத்தை பிரதமரின் நிவாரண நிதிக்குக் கொடுத்துவிட்டு மிக எளிமையான வாழ்வை மேற்கொண்டார்.

ஆசிரியர் தினம்
செப்டம்பர் - 5

மனதில் பட்டதை துணிந்து சொல்லும் நெஞ்சுறுதி கொண்டவர். 'நாடு போகும் போக்கு சரியில்லையே' என்று நேருவிடமே துணிச்சலாகத்




டாக்டர்.எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தியாவின் மிகச் சிறந்த தத்துவஞானி. அர்ஜுனனுக்கு கிருஷ்ணன் எப்படியோ அப்படி தனக்கு சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் என்று காந்தியால் போற்றப்பட்டவர். நகைச்சுவையாகப் பேசுவதிலும் வல்லவர். ஒருமுறை தன்னுடைய நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார். நண்பர்கள் கூட்டத்தில் ஓர் ஆங்கிலேயரும் இருந்தார். பேச்சுவாக்கில் அந்த ஆங்கிலேயர், கடவுள் தங்கள் அனைவரையும் ஒரே மாதிரியாகப் படைத்திருப்பதாகவும் இந்தியர்களை பல நிறங்களில் படைத்திருப்பதாகவும் ஏளனமாகப் பேசினார். டாக்டர்.ராதாகிருஷ்ணன் கோபமே கொள்ளாமல், ''நீங்கள் சொல்வது சரிதான். இறைவனின் படைப்பில் கழுதைகள் ஒரேமாதிரி யாகத்தான் இருக்கும்; குதிரைகள்தான் பல நிறங்களில் இருக்கும்'' என்று பதிலடி கொடுத்தார். ஏளனமாகப் பேசிய ஆங்கிலேயர் வெட்கித் தலைகுனிந்தார்.

தம் கவலையைத் தெரிவித்தவர். அதேபோல் இந்தி மொழி ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டபோது, அதை எதிர்த்து அப்போது மத்திய அமைச்சர்களாக இருந்த சி.சுப்பிரமணியம், ஓ.வி. அழகேசன் ஆகியோர் தங்கள் அமைச்சர் பதவிகளை ராஜினாமா செய்வதாகக் கடிதம் கொடுத்தனர். பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரி அவர்களுடைய ராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொள்ளும்படி கூறியும், திறமையாளர்களை விட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில் அவர்களின் ராஜினாமாவை ஏற்க மறுத்துவிட்டார். அந்த அளவுக்கு சுதந்திரமாகச் செயல்பட்ட குடியரசுத் தலைவர் அவர்.


தாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பகவத் கீதையை காந்திஜியிடம் கொடுத்தபோது, அதைப் பெற்றுக்கொண்ட காந்திஜி, 'நான் அர்ஜுனன்; தாங்கள் கிருஷ்ணர். எனவே தாங்கள் தவறாக எழுதியிருக்க முடியாது' என்று கூறினார். அந்த அளவுக்கு ராதாகிருஷ்ணனிடம் மதிப்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தார் காந்திஜி.

மாணவர்கள் எப்போது வேண்டுமானாலும் தன் வீட்டுக்கே வந்து சந்தேகம் கேட்பதை விரும்பிய பண்பாளர். மாணவர்களின் தோளில் கை போட்டு வாஞ்சையுடன் பழகும் கனிவு அவரிடம் இருந்தது. அவர்களுக்குத் தம் கையாலேயே தேநீர் போட்டுக் கொடுத்து உள்ளம் மகிழும் உபசரிப்புத் தன்மையும் இருந்தது. மொத்தத்தில் ஆசிரியர் என்பவர் இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதை வாழ்ந்து காட்டியவர்.

இவர் குடியரசுத் தலைவராக இருந்த போது, இவரிடம் பயின்ற மாணவர்கள், இவருடைய பிறந்த தினத்தைக் கொண்டாட விருப்பம் தெரிவித்தனர். ஆனால், பல உயரிய பதவிகளை வகித்திருந்தாலும் தமக்கு மகிழ்ச்சியையும், ஆத்ம திருப்தியையும் வழங்கிய ஆசிரியப் பணியைப் போற்றும் வகையில், தம்முடைய பிறந்த தினத்தை ஆசிரியர் தினமாகக் கொண்டாட வேண்டும் என்று கூறினார். அதன்படி அவருடைய பிறந்த தினம் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.



ராசிபலன்



மேஷம்

(அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்)

வெளி வட்டாரத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். பணப் புழக்கம் அதிகமாகும். சிலருக்கு கனரக வண்டி வாகனங்கள் வாங்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். உறவினர்களாலும் நண்பர்களாலும் நன்மை உண்டு. தந்தையுடன் சுமுகமான உறவு ஏற்படும். மாதத்தின் முற்பகுதியில் தந்தையால் அனுகூலம் உண்டு. மாதப் பிற்பகுதியில் குழந்தைகளின் உடல் நிலையிலும் தங்களின் உடல் நிலையிலும் சற்று கவனம் தேவை. ஆரோக்கியம் சற்றே பாதிக்கப்பட்டாலும் மருத்துவச் சிகிச்சை மூலம் நலம் பெறுவீர்கள். தாய்மாமன் வகையில் அனுகூலமான பலனை எதிர்பார்க்க லாம். மின்சார மின்னணு சாதனங்கள் வாங்கும் யோகம் ஏற்படும். தாய்மாமன் வழியில் அனுகூலமான பலனை எதிர்பார்க்கலாம். தம்பதியரிடையே மாத முற்பகுதியில் சிறு சச்சரவு கள் காணப்பட்டாலும் பிறகு சரியாகிவிடும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெற்று மகிழ்ச்சி யில் திளைக்கப் போகின்றீர்கள்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும் இருந்தாலும் உடன் வேலை பார்க்கும் ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வதால் எல்லா வற்றையும் சமாளித்து விடுவீர்கள். உயர் அதிகாரி களுடன் சற்று அனுசரித்துச் செல்லுங்கள்.

வியாபார சம்பந்தமாக சோர்வும் ஏற்படும். இருந்தாலும் மாதப் பிற்பகுதியில் லாபம் அதிகரிப்பதால் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

மாணவ மாணவியர் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். ஆன்லைன் வகுப்பில் ஆசிரிய ஆசிரியைகள் சொல்லிக் கொடுப்பதை கவனமுடன் கேட்டுபடித்தால்தான் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் எடுக்க முடியும்.

பெண்கள் குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நன்மை பயக்கும். மாதப் பிற்பகுதியில் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களால் நன்மை உண்டாகும்.

சாதகமான நாள்கள் : 2,4,7,10,16,19,23,27,29

சந்திராஷ்டமம் : 12,13,14

வணங்க வேண்டிய தெய்வம் : விநாயகருக்கு வெள்ளிக்கிழமை மற்றும் சங்கட ஹர சதுர்த்தி திதி அன்று விளக்கேற்றி அருகம்புல்லால் அர்ச்சனை செய்யவும்.



ரிஷபம்

(கார்த்திகை 2,3,4-ம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1,2-ம் பாதம்)

காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். இதுவரை வராமல் போய்விடுமோ என்று நினைத்து கவலைப்பட்டுக் கொண்டிருந்த கடன் பாக்கி திரும்பக் கிடைக்கும். மாதப் பிற்பகுதியில் குழந்தைகள் மிகுந்த மகிழ்ச்சியுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவார்கள். மாதப் பிற்பகுதியில் தங்களின் ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்பட்டாலும் சரியான மருந்துகள் எடுத்துக் கொள்வதன் மூலம் நிவாரணம் கிடைத்து விடும். உடன்பிறப்புகளுடன் ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியுடனும் காணப்படு வீர்கள். மறைமுக எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள். தம்பதியரிடையே சிறு சச்சரவுகள் ஏற்பட்டாலும் சிறிது நேரத்தில் சரியாகி விடும்.

அலுவலகத்தில் வேலைப்பளு அதிகமாக இருப்பதால் மனம் சோர்வடைந்தாலும் உடன் வேலை பார்க்கும் ஊழியர்களிடம் இருந்து தகுந்த உதவி கிடைப்பதன் மூலம் வேலைகளை சரியான நேரத்தில் முடிப்பீர்கள். சிலருக்கு வேலை மாற்றம் அல்லது இடமாற்றம் உண்டாகும்.

தொழில் மற்றும் வியாபாரம் சிறந்து விளங்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். எதிர்பாராத விதமாக கடன்கள் வசூலாகும். பெரிய அளவில் கடன் தருவதை தவிர்த்துக் கொள்ளவும்.

மாணவ மாணவியருக்கு இது கோவிட் காலம் என்பதால் ஆன்லைன் வகுப்புகள் நடைபெறு கின்றன. பாடங்களை கவனித்துப் படியுங்கள். சிலருக்கு தாங்கள் விரும்பிய கல்லூரியில் இடம் கிடைக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு வேலையில் சிறிது மன அழுத்தம் இருந்தாலும் சுறுசுறுப்புடன் அதனை சமாளித்து வேலைகளைக் கச்சிதமாக முடித்து விடுவீர்கள்.

அதிர்ஷ்டமான நாள்கள்: 3,7,11,18,21,24,26,28

சந்திராஷ்டமம்:14,15,16

வணங்க வேண்டிய தெய்வம்: ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரம் அன்றும் சஷ்டி அன்றும் விளக்கேற்றி செந்நிற மலர்களை அர்ச்சித்து முருகனை வழிபடுங்கள்.

மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிகளுக்கான ராசிபலன் அதிர்ஷ்டக் குறிப்புகள் மற்றும் எளிய பரிகாரங்களுடன் கணித்துத் தந்திருக்கிறார் ஜோதிடர் **பூமணி நாராயணன்,**
B.A. (Tamil) M.Sc (Astrology) ஜோதிடக் கலை பயிற்றுநர்



மிதுனம்

(மிருகசீரிடம் 3,4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ம் பாதம்)

மிதுனராசி அன்பர்களே! முயற்சிகளில் வெற்றி, காரிய அனுகூலம் ஏற்படும். உடன்பிறந்தோரின் உதவிகள் கிடைக்கும். அரசாங்க விஷயமாக பயணங்கள் ஏற்படலாம். குழந்தைகள் சம்பந்தமான சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் கரை புரண்டோடும். தேவைக்கேற்ற தனலாபம் ஏற்பட்டு பொருளாதாரம் சிறக்கும். தாங்கள் எதிர்பார்த்த வங்கிக் கடன் கிடைக்கும். வாழ்க்கைத் துணை நெடுநாள்களாய் கேட்டுக்கொண்டிருந்த நகைகளை வாங்கிக் கொடுத்து சந்தோஷப்படுத்தப் போகின்றீர்கள். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் பெரிதாக பாதிப்பு எதுவும் ஏற்படாது. வாழ்க்கைத் துணையிடம் பணம் விஷயமாக வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. தந்தையின் உடல் நிலையில் கவனம் தேவை. சிலருக்கு வெளி நாட்டில் இருந்து நல்ல செய்தி வந்து சேரும்.

உத்தியோகத்தில் ஓரளவு முன்னேற்றமான சூழ்நிலையே காணப்படுகிறது. மறைமுக எதிரிகளால் தொல்லைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கவனமாக இருப்பது நல்லது.

தொழில் மற்றும் வியாபாரத்தில் கூடுதலாக உழைக்க வேண்டி வரும். இருப்பினும் உழைப்புக் கேற்ற ஊதியம் கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட பிரச்சனை நீங்கும்.

மாணவ மாணவியர்க்கு புதன் சாதகமாகவும் வலுவாகவும் உள்ளதால் நல்ல முறையில் படிப்பீர்கள். ஆசிரியர்களிடம் சந்தேகத்தை அவ்வப் போது கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் முன்னேற்றமாக இருக்கும். அக்கம்பக்கத்து வீட்டாரிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு வேலையில் சற்று சிரமங்கள் ஏற்பட்டாலும் பெரிய பாதிப்புகள் எதுவும் ஏற்படாது.

அதிஷ்டமான நாள்கள்: 2,5,8,12,15,20,25,29

சந்திராஷ்டமம்:16,17,18

வணங்க வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மனை செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் தீபம் ஏற்றி வழிபடவும்.



கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்)

புதிய முயற்சிகள் அனைத்தும் மிக எளிதாக வெற்றி பெறும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலர் பழைய வாகனத்தை மாற்றி தங்களுக்குப் பிடித்த புதிய வாகனம் வாங்கி மகிழ்வீர்கள். குழந்தைகள் தைரியத்துடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவார்கள். நண்பர்களுடன் வாக்குவாதத்தைத் தவிர்த்தால் பிரச்னைகளைத் தவிர்க்கலாம். உடன்பிறப்பு உறவு பலப்படும். பணம் கொடுக்கல்–வாங்கல் சம்பந்தமான பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. கணவன் – மனைவி உறவில் சிறு சிறு சலசலப்புகள் காணப்பட்டாலும் குருவின் பார்வையினால் உடனே சரியாவதுடன். அந்நியோன்யமும் அதிகரிக்கும். பெற்றோரின் உடல் நலம் ஆரோக்கியமாக இருக்கும். அரசாங்கம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் சாதகமாக முடியும். உறவினருக்கோ நண்பருக்கோ பணம் கடன் கொடுக்கவோ அல்லது ஜாமீன் கொடுக்கவோ வேண்டாம். உறவினர் வருகையால் குடும்பம் மகிழ்ச்சியில் திளைக்கும். தங்கள் உடல்நலனில் மட்டும் சற்று கவனம் தேவை.

அலுவலகத்தில் வேலைச்சுமை சற்று அதிகரித்து காணப்பட்டாலும் மாதப் பிற்பகுதியில் செவ்வாய் பலமுடன் இருப்பதால் எல்லா வேலைகளையும் சுறுசுறுப்புடன் செய்து முடித்து விடுவீர்கள்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் சற்று அதிகமாக உழைக்க வேண்டி வரும். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனமாக ஈடுபடுவது நல்லது.

மாணவ மாணவியர்கள் சோம்பலை குறைத்துக் கொண்டு சற்று சுறுசுறுப்புடன் படிக்க வேண்டும். படிப்பு சம்பந்தமாக தாங்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சற்று சிரமம் இருந்தாலும் தாயாரின் உதவியுடன் அதனை சமாளித்து விடுவீர்கள். அலுவலகத்துக்கு செல்லும் பெண்களுக்கு பணிச்சுமை அதிகரிப்பதால் சற்று கவனமுடன் வேலை பார்க்க வேண்டும்.

அதிர்ஷ்டமான நாள்கள்: 3,6,9,11,15,21,25,28

சந்திராஷ்டமம்: 18,19,20

வணங்க வேண்டிய தெய்வம்: ஒவ்வொரு புதன்கிழமையும் நெய்விளக்கேற்றி திருப்பதி ஏழுமலையானை வணங்கிவர சுபிட்சம் உண்டாகும்.



சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்)

வெளி வட்டாரங்களில் செல்வாக்கு அதிகரிக்கும். தாங்கள் சென்ற இடமெல்லாம் சிறப்பும் பாராட்டும் பெறுவீர்கள். அரசாங்கத்திடம் இருந்து சந்தோஷப்படும்படியான அனுகூலமான செய்தி வந்து சேரும். பொருளாதாரம் சிறக்கும். தனவரவு அதிகரித்து குடும்பம் மகிழ்ச்சியில் திளைக்கும். தந்தையிடம் இருந்து உதவி கிடைக்கும். பிள்ளைகளால் தர்மசங்கடமான சூழ்நிலை ஏற்பட்டு அதை சமயோசித புத்தியால் சமாளிப்பீர்கள். புதிய வீடு,வாகனம் வாங்குவதை சற்று தள்ளிப் போடவும். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. கணவன்–மனைவி தேவையில்லாத வாக்குவாதத்தைத் தவிர்த்தால் குடும்பத்தில் பிரச்னை இல்லாமல் இருக்கலாம். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும். மாதப் பிற்பகுதியில் தம்பதியரிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும்போது கவனமுடனும் எச்சரிக்கையுடனும் இருப்பது நல்லது.

அலுவலகத்தில் சுமாரான சூழ்நிலையே காணப்படுகிறது ஆனால் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள். உங்கள் வேலைகளில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பு தருவார்கள்.

தொழில் மற்றும் வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். சக வியாபாரிகளால் மறைமுகப் போட்டி இருந்தாலும் முன்னேற்றமான சூழ்நிலை ஏற்பட்டு பொருளாதாரம் சிறக்கும்.

மாணவ மாணவியர் இப்போதிலிருந்தே கூடுதல் கவனத்துடன் படித்தால் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்களை பெற முடியும். சந்தேகங்களை உடனுக்குடன் ஆசிரியரிடம் கேட்டு தெளிவு படுத்திக் கொள்ளுங்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பச் சூழல் மிகவும் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். அலுவலகத்திற்குச் செல்லும் பெண்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

அதிர்ஷ்டமான நாள்கள்: 4,6,10,13,15,19,26,28,
சந்திராஷ்டமம்: 20, 21, 22

வணங்க வேண்டிய தெய்வம்: ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் துர்கையை நல்லெண்ணெய் தீபம் ஏற்றி அரளிப்பூ சாற்றி வழிபட தடங்கல்கள் நீங்கி தாங்கள் நினைத்தது நடக்கும்.



கன்னி

(உத்திரம் 2,3,4 -ம் பாதம் ஹஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்)

திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். பணவரவு அதிகமாகும். மிகவும் தைரியத்துடன் காணப் படுவீர்கள். குடும்பத்துடன் உறவினர்களின் வீட்டு சுபநிகழ்ச்சிகளுக்கு சென்று வருவீர்கள். உறவினர்களால் உதவியும் அதேசமயத்தில் உபத்திரவமும் ஏற்படும். வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் கௌரவமும் அதிகரிக்கும். பல மாதங்களாக பிரிந்திருந்த தம்பதியர்கள் ஒன்று சேரும் வாய்ப்பு ஏற்படும். மாதப் பிற்பகுதியில் தந்தை வழியில் செலவுகள் ஏற்படும். குடும்பம் மகிழ்ச்சியுடன் காணப்படும். குடும்பத்திற்குத் தேவையான மின்னணு மின்சார சாதனங்கள் வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். தங்களுக்கு அஜீரண பிரச்னை ஏற்பட வாய்ப்புள்ளதால் உணவு விஷயத்தில் கவனத்துடன் இருக்கவும். குடும்பத்தில் வாழ்க்கைத் துணையின் ஆலோசனையைக் கேட்டு செயல்படுவது நல்லது.

அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும் வேலைகளில் மகிழ்ச்சியுடன் ஈடுபடு வீர்கள் சிலருக்கு ஊதிய உயர்வுடன் சேர்ந்த பதவி உயர்வு கிடைக்கும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் மறைமுக எதிரிகளால் தொந்தரவு இருந்தபோதிலும் குருவின் பார்வையினால் எல்லாவற்றையும் சமாளித்து விடுவீர்கள். மாதப் பிற்பகுதியில் தன வரவு அதிகரித்து பொருளாதாரம் சிறக்கும்.

மாணவ மாணவியருக்கு புதன் சாதகமான சூழ்நிலையில் இருப்பதாலும், குருவின் பார்வையும் சிறப்பாக அமைந்திருப்பதாலும் படிப்பில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு புதிய ஆடை ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். அலுவலகத்துக்கு செல்லும் பெண்களுக்கு மிக அருமையான மாதம். நீங்கள் எதிர்பார்த்த ஊதிய உயர்வும் பதவி உயர்வும் கிடைக்கும்.

அதிர்ஷ்டமான நாள்கள்: 3,6,13,15,20,26,29,
சந்திராஷ்டமம்:22, 23, 24

வணங்க வேண்டிய தெய்வம்: சிவபெருமானுக்கு வீட்டிலேயோ கோயிலுக்கு சென்றோ பிரதோஷம் அன்றும் திங்கள்கிழமை அன்றும் விளக்கேற்றி வில்வ அர்ச்சனை செய்யவும்.

துலாம்

(சித்திரை 3,4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3-ம் பாதம்)

செல்வாக்கு அதிகரிக்கும் மாதம். எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்பட்டு எதிர்பாராத விதத்தில் பணவரவும் அதிகரிக்கும். குழந்தைகளால் இடைஞ்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால், அதை புத்திசாலித் தனமாக சமாளித்து விடுவீர்கள். மாத முற்பகுதியில் தந்தையால் உதவி உண்டு. தாயாரின் உடல் நிலையில் கவனம் தேவை. குடும்பத்தில் அனைத்து விஷயங்களிலும் பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது. எந்த ஒரு செயலையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்தால் பல மடங்கு நல்ல பலனை எதிர்பார்க்கலாம். தாய்மாமன் வகையில் திடீரென்று தாங்கள் எதிர்பார்க்காத அனுகூலப் பலன் ஏற்படப் போகிறது. கணவன் மனைவி உறவில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தங்கள் உடல்நலனில் அதிகப்படியான கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நன்மை பயக்கும்.

அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களுடன் அனுசரித்துச் செல்வதன் மூலம் நீங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ளலாம்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் மாதப் பிற்பகுதியில் வியாபாரம் பெருகி பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

மாணவ மாணவியர் கொஞ்சம் கூடுதல் கவனத்துடன்தான் படிக்க வேண்டும். பொழுதுபோக்குகளில் கவனத்தை குறைத்துக் கொண்டு படிப்பில் அதிக கவனம் செலுத்துங்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம் பக்கத்தாரிடம் பேசும் போது கவனம் தேவை. பணவரவு அதிகரித்து தாங்கள் நினைத்த ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு வேலைச்சுமை சற்று கூடுதலாகவே இருக்கும். சக ஊழியர்களிடம் அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

அதிர்ஷ்டமான நாள்கள்: 2,5,8,12,16,18,20,23,29

சந்திராஷ்டமம்:24, 25, 26

வணங்க வேண்டிய தெய்வம்: ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் ஆஞ்சநேயருக்கு வெண்ணெயும் வெற்றிலை மாலையும் சாத்தி வழிபட தடை தாமதங்கள் தவிடுபொடியாகும்.

விருச்சிகம்

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை)

மாதத் தொடக்கத்தில் அனைத்து காரியங்களும் வெற்றியாகும். பணவரவு அதிகரித்து மகிழ்ச்சி தருவதாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். குடும்பத்தில் உடன்பிறப்புகளுடன் சிறு வாக்குவாதம் ஏற்பட்டு பின்பு சரியாகி விடும். குடும்பத்தில் பேசும்பொது நிதானம் தேவை. உறவினர் வகையில் சிறு பிரச்னை ஏற்பட வாய்ப்புள்ளது. அடிப்படை வசதிகளை அதிகரித்துக் கொள்வீர்கள். பிற்பகுதியில் சகோதர சகோதரிகளுடன் ஒற்றுமை அதிகரிக்கும். தாங்கள் நினைத்த முக்கியமான விஷயங்களை சாதிக்கப் போகும் மாதமிது. அதோடு மட்டுமல்லாமல் மாதப் பிற்பகுதியில் தாய் மாமன் வகையில் திடீர் யோகம் ஏற்படும் வாய்ப்புள்ளது.

உத்தியோகத்தில் நல்ல சூழ்நிலையே காணப் படுகிறது. மேலதிகாரிகள் சொன்ன வேலைகளை உடனுக்குடன் முடித்து பாராட்டு பெறுவீர்கள். அலுவலகத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

வியாபாரம் வளர்ச்சி அடைந்து பன்மடங்கு பணவரவை அதிகரிக்க வாய்ப்புள்ளது. தங்கள் முயற்சிக்கு தடை போட மறைமுகமாக பல எதிரிகள் இருந்தாலும் குருவின் அருளால் எல்லாவற்றையும் முறியடித்து வெற்றி அடைவீர்கள்.

மாணவ மாணவியர் இரவு அதிக நேரம் கண் விழிப்பதைத் தவிர்த்து படிப்பில் அதிக கவனம் செலுத்தினால் படிப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு தைரியம் சற்று குறைந்தது போல் தோன்றினாலும் குருவின் பார்வையால் ஓரளவு தைரியமாகச் செயல்படுவீர்கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு குருவின் பார்வையினால் நல்ல சூழ்நிலையே உள்ளது. மகிழ்ச்சியுடன் வேலை பாா்ப் பீர்கள்.சிலருக்கு எதிர்பார்த்த இட மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

அதிர்ஷ்டமான நாள்கள்: 3,6,9,13,16,18,23,26,28

சந்திராஷ்டமம்:1, 2; 26, 27, 28

வணங்க வேண்டிய தெய்வம்: விநாயகரையும், தர்ம சாஸ்தாவையும் நெய் விளக்கேற்றி வழிபட சகல நன்மைகளும் உண்டாகும்.



தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்)

தாங்கள் மிகவும் தைரியத் துடன் இருக்கும் மாதம். தாங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். பணவரவு அதிகரிக்கும். எடுத்த காரியம் அனைத்தும் பலிதமாகி வெற்றி பெறும். சகோதர சகோதரிகளுடன் மாத முற்பகுதியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் பிற்பகுதியில் அவர்களிடமிருந்து உதவிகளைப் பெறுவீர்கள். கடன் கொடுப்பதைத் தவிர்த்தல் நல்லது தந்தையினால் அனுகூலம் ஏற்படும். தந்தையினால் உங்களுக்கும் உங்களால் தந்தைக்கும் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். உங்களுக்கும் உடன்பிறப்பு களுக்கும் இடையேயான கருத்து வேறுபாடுகளை பேசி சரி செய்து கொள்ளுங்கள். கணவன் – மனைவி உறவு இணக்கமாகவும் அந்நியோன்யத் துடனும் இருக்கும். பிள்ளைகள் வகையில் பெருமைகள் சேரும். மாதத்தின் பிற்பகுதியில் குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் உண்டாகும். லாபங்கள் அதிகரிக்கும். குடும்பத்திற்கு விருப்பமான ஆடம்பரப் பொருள்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

உத்தியோகத்தில் மேலதிகாரிகள் அனுசரணை யுடன் நடந்து கொள்வார்கள் சிலருக்கு பதவி உயர்வும் பாராட்டும் கிடைக்கும். மிகவும் தைரியத்துடன் எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள்.

தொழில் மற்றும் வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். தாங்கள் நினைத்ததை விட அதிகமான லாபங்களைப் பெறுவீர்கள். வியாபாரம் நிமித்தமாக வெளியூர்ப் பயணங்கள் போக நேரிடும்.

மாணவ மாணவியர் பாடங்களை கூடுதல் கவனத்துடன் படிக்கவும். ஆசிரியர்களின் அறிவுரையையும் பெற்றோரின் ஆலோசனையையும் கேட்டு நடப்பது நன்மை பயக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ள சில நபர்களின் தேவையற்ற சகவாசத்தை தவிர்த்துக் கொள்வது அவசியம். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்த்த ஊதியஉயர்வு கிடைக்கும்.

அதிர்ஷ்டமான நாள்கள்: 2,6,9,13,17,21,24,26,29

சந்திராஷ்டமம்: 2, 3, 4; 29, 30

வணங்க வேண்டிய தெய்வம்: புதன் கிழமைகளில் விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்து பெருமாளுக்கு அர்ச்சனை செய்யவும்.



மகரம்

(உத்திராடம் 2,3,4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதம்)

எதிர்பாராத தனவரவு ஏற்பட வாய்ப்புண்டு. முன்னேற்றத் திற்குத் தடையாக இருந்தவர்கள் தாங்களாகவே விலகிச் செல்வார்கள். அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். புதிய ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். குடும்பத்தில் வீண் விவாதங்களைத் தவிர்த்து அனுசரித்துச் செல் வது நல்லது. உடன்பிறந்தவர்களின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சியைத் தரும். தந்தை மற்றும் அரசாங்கவழியில் மாதப் பிற்பகுதியில் திடீர் அதிர்ஷ்டம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. பெண் குழந்தைகளால் பெருமை ஏற்படும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். தாயின் உடல் நிலை யில் கவனம் தேவை. தாய்மாமன் வகை உறவுகளால் அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மாதத்தின் பிற்பகுதியில் குடும்பத்தில் நிம்மதியும் சந்தோஷமும் உண்டாகும்.

அலுவலகத்தில் உங்கள் வேலைகளில் மட்டுமே கவனமாக இருக்கவும். சக ஊழியர்களின் உதவியுடன் வேலைகளை உற்சாகமாக செய்து முடிப்பீர்கள்.

தொழில் வியாபாரம் அமோகமாக இருக்கும். தாங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து லாபங் கள் வந்து சேரும். பழைய பாக்கிகளும் வசூலாகும். புதிய முயற்சிகள் வெற்றியடையும்.

மாணவ மாணவியருக்கு தாங்கள் எதிர்பார்த்த பள்ளி, கல்லூரியில் இடம் கிடைக்கும். சிலருக்கு தங்கள் எதிர்பார்த்த பாடப்பிரிவுகளில் இடம் கிடைக்கும். தாங்கள் எதிர்பார்த்த விஷயங்கள் நடப்பதால் மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகள் உறவினர்களுடன் கூடி மகிழ்வீர்கள் வெகுநாள்களாக பேசாமல் இருந்த தோழிகளுடன் பேசும் வாய்ப்பு ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு பணிச்சுமை இருக்காது. உடன் பணிபுரிபவர்கள் ஒத்துழைப்பு தருவார்கள்.

அதிர்ஷ்டமான நாள்கள்: 2,8,11,15,18,20,24,28,29

சந்திராஷ்டமம்: 4, 5, 6

வணங்க வேண்டிய தெய்வம்: பிரதோஷம் அன்று வில்வம் சாத்தி சிவபெருமானை விளகேற்றி வழிபட நினைத்த காரியம் நிறைவேறும்.

கும்பம்

(அவிட்டம் 3,4-ம் பாதம், சதயம், புரட்டாதி 1,2,3-ம் பாதம்)

பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும். புதிய ஆடை ஆபரணங்கள் வாங்கும் யோகம் ஏற்படும். சுப விரயங்கள் ஏற்படும். உடன்பிறப்புகள் உறவு பலப்படும். பெற்றோர் உடல்நலம் ஆரோக்கியமாக இருக்கும். உறவினர்களின் வீட்டு சுப நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும். மாதப் பிற்பகுதியில் எதிரிகள் பணிந்து போவர். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பம் முன்னேறுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். எதிர்பாராத விதமாக கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். கணவன் – மனைவிக்கி டையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். கடன்கள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். புதிய பொருள்களின் சேர்க்கை உண்டாகும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையாக இருக்கவும். மொத்தத்தில் சந்தோஷமான மாதம்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணிச்சுமை சற்று அதிகமாகவே இருக்கும். மறைமுக எதிரிகளால் பிரச்னை உண்டாக வாய்ப்புண்டு. பணவரவிற்கு குறைவிருக்காது.

தொழில் மற்றும் வியாபார ஸ்தானத்தில் கேது அமர்ந்திருப்பதால் சற்று எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய காலம். குருவின் பார்வையினால் தனவரவு அதிகரித்து பொருளாதாரம் செழிக்கும். வியாபாரம் விரிவுபடுத்தும் எண்ணம் இருந்தால் அதை சற்று தள்ளிப் போடவும்.

மாணவ மாணவியருக்கு புதன் சாதகமற்ற சூழலில் இருப்பதால் சற்று கவனமுடன் படியுங்கள். ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதை கவனமுடன் கேட்கவும். இந்த கோவிட் சமயத்தில் உடல்நிலையில் சற்று கவனத்துடன் இருக்கவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு சற்று சிரமங்கள் இருக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களின் உதவியால் உற்சாகம் பெறுவீர்கள். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு பணிச்சுமை அதிகரிப்பதால் சோர்வு உண்டாகும்.

அதிர்ஷ்டமான நாள்கள்: 4,5,8,12,15,18,20,22,26

சந்திராஷ்டமம்: 6, 7, 8

வணங்க வேண்டிய தெய்வம்: தேய்பிறை அஷ்டமி நாளில் கால பைரவருக்கு அரளிப்பூ சாத்தி தேன் நைவேத்தியம் செய்து வழிபடுங்கள்.

மீனம்

(பூரட்டாதி 4 – ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

காரிய அனுகூலம் உண்டாகும். பணவரவு அதிகரிக்கும். முயற்சிகள் அனைத்தும் பலிதமாகும். மாதப் பிற்பகுதியில் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். தங்களின் தைரியமும் செல்வாக்கும் ஓங்குவதால் மாதப் பிற்பகுதியில் எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் போய்விடுவர். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திரும்பக் கிடைக்காது என்று நினைத்திருந்த கடன் தொகை கைக்கு வந்து சேரும். வாழ்க்கைத்துணையால் சிறு பிரச்னைகள் ஏற்பட வாய்ப்பிருந்தாலும் தங்களின் அனுசரணையான பேச்சினால் சமாளித்து விடுவீர்கள். பண விஷயத்திலும் நகை விஷயத்திலும் சற்று கவனமுடன் இருப்பது நல்லது.

அலுவலகத்தில் வேலை சுறுசுறுப்பாக நடைபெறும். அதிகமாக அலைச்சல்கள் ஏற்படும் தருணம் என்பதால் உடல் நலத்தில் சற்று கவனம் கொள்வது நல்லது. மாதத்தின் பிற்பகுதியில் சக ஊழியர்களால் அனுகூலம் உண்டு.

தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து பொருளாதார உதவி கிடைக்கும். புதிய முயற்சிகள் வெற்றி தரும்.

மாணவ மாணவியருக்கு மாதத்தின் பிற்பகுதியில் புதன் சாதகமான சூழ்நிலையில் நிலவுவதால் நன்கு படிப்பீர்கள். ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் ஆன்லைன் வகுப்பில் சந்தேகங்கள் இருப்பின் உடனடியாக கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான மாதம். புதிய ஆடை ஆபரணங்கள் வாங்கும் சூழ்நிலை ஏற்படும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு தங்கள் பணிகளிலும் உடல்நிலையிலும் சற்று கவனம் தேவை.

அதிர்ஷ்டமான நாள்கள்: 1,4,7,14,16,19, 24,27,29,30

சந்திராஷ்டமம்:9, 10, 11

வணங்க வேண்டிய தெய்வம்: அம்பிகை. லலிதா சகஸ்ரநாமமும், அபிராமி அந்தாதியும் பாராயணம் செய்யுங்கள்.

பத்ம.கிருஷ்ணசாமி | படங்கள்: கே.எம்.பிரசன்னா

‘விண்ணகரம்’ என்று சிறப்பிக்கப்படும் வைணவத் தலங்களில் ஒன்று உப்பிலியப்பன் கோயில். ஆகாச நகரம், வைகுண்ட நகரம், ஒப்பிலியப்பன் சந்நிதி, உப்பிலியப்பன் சந்நிதி ஆகிய பெயர்களாலும் இந்தத் தலம் வழங்கப்படுகிறது.

தேவசிற்பி விஸ்வகர்மாவால் எழுப்பப்பட்டதாகக் கருதப்படும் இந்த ஆலயத்தில், சுத்தானந்த விமானத்தின் கீழ் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார் ஒப்பிலியப்பன். அருகில் நாச்சியார் வடக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்திலும் மார்க்கண்டேயர் தெற்கு நோக்கி அமர்ந்து, கன்னிகாதானம் செய்யும் கோலத்திலும் காட்சி தருகின்றனர். ஒப்பாக எவரும் இல்லாதவர் ஆதலால், ஒப்பிலியப்பன் என்று பெயர்.

’திருமகளை நெஞ்சில் தரித்தது போல, என்னையும் தாங்கள் தரிக்கவேண்டும்!’ என்று திருமாலிடம் வேண்டினாள் துளசிதேவி. திருமால், “நீ திருவிண்ணகரம் சென்று அங்கு துளசிச் செடியாகத் தோன்றி தவம் செய். மார்க்கண்டேய மகரிஷியின் தவத்தினால், அங்கே குழந்தையாக அவதரிக்கும் திருமகளை அவர் எடுத்து வளர்ப்பார். அவளை மணம் புரிய அங்கு நான் வரும் போது, உங்கள் எல்லோருக்கும் சகல மரியாதைகளும் ஏற்படும்” என்று அருளினார்.

அதன்படியே சகலமும் நடந்தன. பூமியி லிருந்து தோன்றியதால் மார்க்கண்டேயரின் குழந்தை பூமாதேவி எனப்பட்டாள். அற்புதமாக வளர்ந்து வந்தாள் குழந்தை. ஒருநாள், முதியவர் வேடத்தில் மார்க்கண்டேய



உப்பின்றி நைவேத்தியம்

முனிவரைச் சோதிக்க வந்த திருமால், “உங்கள் மகளை மணம் செய்ய விரும்புகிறேன்” என்றார் முனிவரிடம்.

வந்திருப்பவர் திருமால் என்று அறியாத மார்க்கண்டேயர், “அவள் குழந்தை. சமையலில் எவ்வளவு உப்பு போடவேண்டும் என்று கூடத் தெரியாது. அப்படிப்பட்ட குழந்தையை மணம் செய்வதால், உமக்கு ஆகப் போவது என்ன” என்று கேட்டார். ஆனால், அவளே தனக்கு மனைவியாக வேண்டும் என்று அடம்பிடித்தார் முதியவர். மார்க்கண்டேயர் யோசனையில் ஆழ்ந்தார். அப்போது முதியவர் அவருக்கு ஸ்ரீமந் நாராயணனாகக் காட்சி தந்தார்.

“முதியவராக வந்தது யாமே. மகாலட்சுமியான இவளை மணம் புரியவே வந்தோம்” என்று சங்கு- சக்ரதாரியாக கன்னி ஒருத்தியை கரம் பிடிக்கும் பாவனையில் நாராயணன் காட்சியளித்தார். அதைக் கண்ட மார்க்கண்டேயர் மகிழ்ச்சியுடன் திருமணத்துக்குச் சம்மதித்தார்.

‘‘உங்கள் குழந்தை உப்பில்லாது சமைத்தாலும் யாம் ஏற்றுக்கொள்வோம். கவலை வேண்டாம்!’’ என்று ஸ்ரீமந்நாராயணன் அருளினார். அதனால் மகிழ்ந்த மார்க்கண்டேயர், உடனே அந்தத் திருமணத்தை விமர்சையாக நடத்தினார். அதனால் இன்று வரை அருள்மிகு ஒப்பிலியப்பன் கோயிலில் உப்பில்லாத பண்டங்களே படைக்கப்படுகின்றன. எனவே, இங்குள்ள பெருமாள் ‘உப்பிலியப்பன்’ என்றும் அழைக்கப்படுகிறார்!

பெருமாளுக்கு நிவேதனம் செய்யப்படும் நைவேத்தியங்கள் அனைத்திலும் உப்பில்லா விட்டாலும் அந்தப் பிரசாதங்கள் ருசியாகவே இருக்கின்றன.


அதை விளக்கும் வகையில் உப்பிலியப்பன் கோயில் தலவரலாற்றில் மற்றுமொரு சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

முற்காலத்தில் ஓர் ஊரில் தந்தையும் அவருடைய மகளும் வசித்து வந்தனர். தாயில்லாத மகளை அன்புடன் சீராட்டி பாராட்டி வளர்த்து வந்தார். மகளும் திருமண



ஏற்கும் ஒப்பிலியப்பன்!





வயதை அடைந்தாள். நல்ல இடத்தில் மகள் வாழ்க்கைப்பட வேண்டும் என்பதற்காக இரவும் பகலும் இறைவனைப் பிரார்த்தித்து வந்தார்.

ஒருநாள் மதிய உணவுக்குப் பிறகு ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். அப்போது, வயது முதிர்ந்த தாய் தந்தையருடன் அவர்களின் இளம் வயது மகனும் அவருடைய வீட்டுக்கு வந்தனர்.

”நாங்கள் நீண்ட தூரம் வெயிலில் நடந்து களைத்துப் போய்விட்டோம். தங்கள் வீட்டில் சற்று இளைப்பாறிச் செல்லலாமா?” என்று கேட்டனர்.

பெண்ணின் தந்தையும், ”அதற்கென்ன, தாராளமாக இளைப்பாறிச் செல்லுங்கள்” என்று கூறியவர், தன் மகளை அழைத்து, வந்தவர்



களுக்குக் குளிர்ந்த மோர் கொடுக்கும்படிக் கூறினார். தங்களுக்கு மோர் கொண்டு வந்து கொடுத்த பெண்ணின் அழகும், அமைதியான குணமும் வந்தவர்களுக்குப் பிடித்துப் போனது.

எனவே, பிள்ளையின் பெற்றோர் பெண்ணின் தந்தையிடம், ''உங்கள் பெண்ணை எங்களுக்கு மிகவும் பிடித்துவிட்டது. அவளை எங்கள் மகனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்புகிறோம். உங்களுக்குச் சம்மதம்தானே?'' என்று கேட்டனர்.

பெண்ணின் தந்தையும், தன் கவலையைப் போக்க தெய்வமே அவர்களை அனுப்பி வைத்ததாக நினைத்து, உடனே சம்மதம் தெரிவித்தார். மேலும், அவர்கள் அன்றிரவு தங்கள் வீட்டில் உணவு அருந்திவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். பெண்ணை அழைத்து சுவையான விருந்துக்கு ஏற்பாடு செய்யும்படிக் கூறினார்.

மகளும் விருந்தினை சமைத்து முடித்தாள். வந்தவர்கள் உண்பதற்கு முன்பு. தான் அந்த உணவினை ருசி பார்ப்பது நல்லது என்று எண்ணிய பெண்ணின் தந்தை, உள்ளே சென்று உணவை சுவைத்துப் பார்த்தார். எந்த உணவிலும் உப்பில்லை!

அதற்குள் மாப்பிள்ளை வீட்டார் சாப்பிட அமர்ந்துவிட்டனர். வேறு வழியில்லாமல் உப்பில்லாத பண்டத்தை அவர்களுக்குப் பரிமாறி, அவர்கள் அதை உண்பதைத் தயக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் அவரும், அவரின் மகளும் அதிசயிக்கும் வகையில் மாப்பிள்ளையும், அவரின் பெற்றோரும் உணவினை ரசித்து, ருசித்து உண்டதோடு அல்லாமல், 'இவளே எங்கள் வீட்டுக்கு ஏற்ற மருமகள்' என்று கூறியும் சென்றனர்.

இதைக் கேட்ட தந்தையும் மகளும், ஆச்சர்யம் அடைந்தனர். அன்றிரவு தந்தையின் கனவில் ஸ்ரீமந்நாராயணன் தோன்றினார். அவரின் பெண் திருமகளின் அவதாரமே என்றும் கூறினார் தொடர்ந்து, சனிக்கிழமையில் உப்பில்லாத உணவினை உண்டு விரதமிருந்து தன்னை வேண்டினால் சிறப்பான கணவர் அமைவார் என்பதை உணர்த்தவே இந்த லீலையை நிகழ்த்தினோம் என்றும் கூறி மறைந்தார்.

திருமணத்தடை உள்ள பெண்கள், சனிக்கிழமைகளில் உப்பில்லாத உணவருந்தி, விரதமிருந்து உப்பிலியப்பனை மனதார நினைத்து பிரார்த்தித்தால், நல்ல மணவாழ்க்கை அமையும்.

●

புவனா தியாகராஜன்

“கங்கையைப் போல் தூய்மையானவர் அன்னை”

சகோதரி நிவேதிதா



பாபுராம் என்பவர் ஐந்தாறு சப்பாத்திகளைக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டதை கவனித்துவிட்ட ராமகிருஷ்ண பரமஹம்சர் நேராக அன்னையிடம் போய் சற்றே கோபமாக, “நீ அவர்களுக்கு இஷ்டப்படி உணவு கொடுத்துக் கொண்டிருக்கிறாய். சோம்பேறித்தனம் வந்து விடும்!” என்று கடிந்து கொண்டார். அன்னையோ புன்சிரிப்புடன், “நான் தாய் அல்லவா? குழந்தையின் பசி எனக்குத் தெரியாதா? எல்லாவற்றையும் அளவறிந்துதான் கொடுப்பேன். கவலைப்படாதீர்கள்!” என்று சொல்லி விட்டார்.

ஒருமுறை சாரதாமணியின் அன்னையார் அவரிடம், “மகளே! உன்னை ஒரு துறவியிடம் ஒப்படைத்து விட்டேனே? உனக்கு ஆசைக்கு ஒரு குழந்தை கூட இல்லாமற் போய் விடும்போல் இருக்கிறதே?” என்று கூறி வருத்தப்பட்டாராம். இதைக் கேட்டுக் கொண்டே வந்த ராம கிருஷ்ணர், “கவலைப்படாதீர்கள்! உங்கள் பெண்ணுக்கு ஏராளமான குழந்தைகள் இருக்கப் போகிறார்கள். அவர்கள் ‘அம்மா’……. ‘அம்மா’ என்று கூப்பிட்டுத் தொந்தரவு செய்வதை, அவளால் தாங்க முடியாத அளவுக்குப் போய்விடும். நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்!” என்றாராம். அவருடைய சத்தியமான சீடர்கள் சாரதாமணியை அன்னையாகவே கருதி, அவ்வாறே அழைத்து, அன்பு காட்டத் தொடங்கினார்கள்.

ஒருநாள் ராமகிருஷ்ணர் சாரதா என்ற இளைஞரை (பின்னர் சுவாமி திரிகுணாதீ தானந்தர்) அன்னையிடம் அனுப்பினார். “அவனுக்கு நீயே குருவாக இருந்து தீட்சை அளிக்க வேண்டும்” என்று கூறினார். “சுவாமி! நானா? அதுவும் தாங்கள் இருக்கும்போதா?” என்று வியப்புடன் கேட்டார் அன்னை. “உனக்குத் தெரியாதா? ஸ்ரீகிருஷ்ணரைவிட ராதாவிற்கே மகத்துவம் அதிகம்!” என்று வைணவர்கள் குறிப்பிடும் சுலோகம் ஒன்றைக் கூறினார் ராமகிருஷ்ணர்.

ஜூன் மாதம் 1885-ம் ஆண்டு, ராமகிருஷ்ணருக்குத் தொண்டையில் புற்றுநோய் ஏற்பட்டது. சீடர்கள் அக்டோபர் மாதம் அவரைச் சிகிச்சைக்காகக் கல்கத்தாவில் உள்ள சியாம்புகூருக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள். பலரும் உடன் இருந்து மருத்துவ வசதிகளையும், மற்ற வசதிகளையும் கவனித்துக் கொண்டார்கள். ஆனால், வேளாவேளைக்கு இதமறிந்து உணவு கொடுக்க அன்னையே தேவைப்பட்டார். இதை தட்சிணேசுவரத்தில் இருந்த அன்னைக்குச் சொல்லி அனுப்பினார்கள்.

அன்னை கல்கத்தா வந்து சேர்ந்தார். கணவர் அருகிலேயே இருந்து அவரைக் குழந்தையைப் போல கவனித்துக் கொண்டார். தனது சுக சௌக்கியங்களை மறந்து அவருடைய தொண்டிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ராமகிருஷ்ணர் உடல் நலம் தேறி முன்போல் ஆகவேண்டும் என்று எப்போதும் பிரார்த்தனை செய்த வண்ணம் இருந்தார்.

பகவான் ராமகிருஷ்ணரின் உடல் நலம் குன்றிக் கொண்டே வந்தது. அவர் விரைவில் மகா சமாதியை அடைந்து விடுவார் என்ற எண்ணம் அன்னையின் மனதில் தோன்றி விட்டது. ஆயினும் அவர் உயிர் பிழைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்யாத நாளில்லை. 1886-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினாறாம் நாள் அவர் மகாசமாதி நிலையை அடைந்து விட்டார். சீடர்கள் மீளாத் துயரில் ஆழ்ந்தார்கள்.

மறுநாள் அன்னை நீராடிவிட்டு வெண்ணிற ஆடை உடுத்திக் கொள்ளத் தயாரானார். அவர்



இந்திய பெண்மணிகள் 5

தொடங்கி விட்டார். சோகமே உருவமாக நின்ற அவரை, பகவான் ராமகிருஷ்ணர் கனவில் வந்து பேசி ஆறுதல் கூறினார். அதன்பின் அவருடைய மனம் தெளிவடைந்தது. அங்கே ராதாராமன் ஆலயத்தில் கண்களை மூடித் தியானத்தில் அமர்ந்து, ‘‘யாரிடமும் எந்தக் குறையையும் காணாத அன்புள்ளம் எனக்கு வேண்டும்!” என்று கேட்டுக் கொண்டார். அது முதல் ஒரு தாயின் பரிவு அவருடைய இயல்பான குணமாக ஆகிவிட்டது.

புனிதப் பயணத்தின் முடிவில் அவர் கமார்புகூருக்குத் திரும்பினார். அந்த எளிய கிராமத்தில் அவரை கவனிப்பவர் யார்? ஏழ்மையில் வாடும் தாய்க்கு யார்தாம் எந்த விதத்தில் துணை? ஆயினும் அவர் தனது கஷ்டங்களைச் சகித்துக் கொண்டாலும், வறுமையால் ஏற்படும் வேதனை வெளிப்படையாகவே தெரிந்தது. அதற்காக அவர் கல்கத்தாவுக்குத் திரும்பவும் ஒப்புக்கொள்ளவில்லை.

விஷயமறிந்த சீடர்கள் அங்கு சென்று வற்புறுத்தி அழைத்து வந்தார்கள். அங்கும் இங்கும் அலையாமல், நிரந்தரமாக ஓரிடத்தில் அன்னை இருப்பது நல்லது என்று கருதி, பேலூரில் மடம் நிறுவ முயற்சி எடுத்துக் கொண்டார்கள். இதுவே பின்பு ராமகிருஷ்ண மடங்களின் தலைமைப் பீடம் ஆயிற்று.

1910-ம் ஆண்டு அன்னை தென்னிந்தியாவுக்கு ஏழு சீடர்களின் துணையுடன் வந்தார். சென்னை ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி ராமகிருஷ்ணாநந்தர் அன்னை

உடை அணிய அறைக்கு வந்தபோது அங்கே பகவான் ராமகிருஷ்ணர் இருப்பதை உணர முடிந்தது. “என்ன காரியம் செய்கிறாய்? நான் உன்னுடன்தானே இருக்கிறேன்? எங்கும் போய்விடவில்லையே! ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்குப் போவது போன்ற ஒன்றுதானே இது? மனம் வருந்தாதே!” என்று கூறித் தேற்றினார் அவர். அதற்குப் பின் தனது வளையலைத் துறக்க முயன்றபோதும் அவர் இதேபோலக் குறுக்கிட்டுத் தடுத்தார். அன்னை அதன்பின் எளிமையாக உடை அணிந்து கையில் ஒரு வளையல் மட்டும் போட்டுக் கொண்டு வாழத் தொடங்கினார். ஊரார் என்ன சொல்வார்களோ என்ற பயம் அவருடைய மனதை விட்டு அறவே நீங்கிவிட்டது.

அன்னை தனது துக்கத்தை மறக்கப் புனிதப் பயணம் தொடங்கினார். காசி, விருந்தாவன் ஆகிய தலங்களுக்குச் சென்றார். விருந்தாவனில் யோகின்மாவைக் கண்டதும் அன்னை ஒரு குழந்தையைப் போல விம்மி விம்மி அழத்

தென்னிந்தியாவில் புனிதப் பயணம் மேற்கொள்ள எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். மதுரை, ராமேசுவரம் போன்ற தலங்களுக்குச் சென்றார். ராமேசுவரத்தில் ராமநாதபுரம் ராஜா அவரை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றார். ஆலயத்தின் விலை உயர்ந்த ஆபரணங்களைக் காட்டி, அவற்றில் எதை வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார். அதனால் மிகுந்த கலக்கமடைந்த சாரதாமணிதேவி, தனது மருமகள் ராதாவிடம், "உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்!' என்று கலங்கியபடியே கூறினார். ராது தனக்கு ஒரு பென்சில் மட்டுமே வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அதைக் கேட்ட அன்னையின் மனம் அமைதி அடைந்தது.

கல்கத்தா திரும்பிய பின் அவர் ஐந்து அக்னி குண்டங்களுக்கு நடுவில் அமர்ந்து செய்யும் பஞ்ச தபம் என்ற விரதத்தை மேற்கொண்டார். ஏழு நாள்கள் அவ்விதம் செய்தபோது, கங்கையில் பகவான் ராமகிருஷ்ணரின் தோற்றம் தோன்றி மறைவது அவருக்குத் தெரிந்தது. அதன்பின் அவர் கங்கையில் நீராடுவதையே விட்டுவிட்டார். "அவ்வளவு புனிதமான நீரில் எனது சரீரத்தைக் கழுவிக் கொள்ள மாட்டேன்!" என்று மிகுந்த எளிமையுடன் கூறிவிட்டார் அன்னை.

அன்னை ஏராளமான சீடர்களுக்கு ஆசி கூறி தீட்சையும் கொடுத்தார். இதனால் அவருக்கு உடல் வருத்தமும் நோயும் ஏற்பட்டது. சீடர்களின் பாவங்களை ஏற்கும் குரு அதற்கான வருத்தத்தை ஏற்கவேண்டும் என்பது விதி. அதனால் அன்னையும் வருந்த நேரிட்டது. ஆனால், அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. பலருக்கும் உடல் நோயையும் உள்ளக் கவலைகளையும் நீக்கினார். சுவாமி விவேகானந்தரும்கூட அன்னையின் ஆசியைப் பெற்ற பின்னரே கடல்கடந்து பயணம் செய்து, இந்துமதத்தின் மேன்மைகளைப் பற்றி உலகறியச் செய்தார்.

அன்னை யாவரையும் சமமாகவே பாவித்தார். தனது ஊரில் எளியவர்களிடம் அன்புடன் பழகியது போலவே, ஆசிரமத்திலும் யாவருடனும் மனம் கலந்து பழகினார். தீண்டாதவர் என்று யாரையும் அவர் ஒதுக்கியதில்லை. அனைவரையும் கடவுளின் சிருஷ்டியாகவே மதித்து அன்பு காட்டினார். சகோதரி நிவேதிதா இந்தியாவுக்கு வந்தபோது விவேகானந்தர் அவரை எங்கே தங்க வைப்பது என்று தயங்கினார். அன்னை தம்முடைய அறையிலேயே தங்க வைத்துக் கொண்டார்.

அன்னையுடன் பேசினாலும், அவர் கரம் பட்டாலுமே மக்களுக்கு ஆன்மிக விழிப்பு ஏற்பட்டது. "தண்ணீரில் இறங்கிவிட்டால் நம்மை அறியாமலே நனைந்து போய்விடுவோம் அல்லவா?" என்று அதைப் பற்றி அன்னை வெகு எளிமையாகக் கூறுவது வழக்கம். ஒரு பெண்மணி அவரிடம், ''தங்களை எவ்வாறு கருதி நான் பழக வேண்டும்? '' என்று கேட்டபோது, "நான் உனக்கு அம்மா அல்லவா? அப்படியே நினைத்துக் கொள்!" என்று கூறினார் அன்னை ஒரு புன்முறுவலோடு.

அன்னையின் உடல்நலம் குன்றியது. அடிக்கடி ஜுரம் வர ஆரம்பித்தது. சீடர்கள் மனக்கவலை கொண்டார்கள். கல்கத்தாவில் டாக்டர்கள் அன்னையை குணப்படுத்தப் பெரிதும் முயன்றார்கள். ஆயினும் உடல் தளர்ந்து பலவீனம் அடைந்தது. படுக்கையின் அருகில் அமர்ந்து கண்ணீர் உகுத்த ஒரு பெண்மணியிடம் அவர் சொன்னார்.... "ஏன் இந்த பயம்? நான் எங்கே போய்விடுவேன்? உலகம் அன்பு மயமானது அல்லவா? அதில் எங்குமே எனது நாதர் நிறைந்து நிற்கிறார். அவருடன் நானும் இருப்பேன்!" என்றார். அதுவே அவர் கடைசியாகக் கூறிய உபதேசம்.

நந்தாவிளக்கு அணைந்தது. 1920-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் தேதி, அன்னை மகாசமாதி அடைந்தார். இயற்கையோடும், அதன் அமைதியோடும் அவரும் கலந்து விட்டார்.

அன்னைக்குச் சகோதரி நிவேதிதா எழுதியுள்ள ஒரு கடிதத்தில்-,

'நீங்கள் அமைதியே வடிவானவர். இயற்கையாகவே எளிமை நிறைந்தவர். கங்கையைப் போலத் தூய்மையானவர். நந்தவன மலர்களைப் போல அழகையும், மணத்தையும் மௌனமாக எல்லோருக்கும் அளிப்பவர். இவை எதுவுமே பேசுவதில்லை. ஆயினும் உலகம் அவற்றை உணராத நாளில்லை. நீங்களும் அப்படிப்பட்டவர்தாம்!' என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

அழகு ததும்பும் இயற்கையும், அமைதியும் உள்ளவரை அப்படியே நம்முடன் என்றும் இருப்பார் அன்னை!

●



உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
4,4,4
FORCE
GURKHA E.O.V.
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

மு.அரி

நொச்சி வளர்ந்தால் நூறு நன்மை!




உங்கள் வீட்டின் அருகே நொச்சி வளர்ந்து இருந்தால் சந்தோஷப்படுங்கள்! அது தரும் பலன்கள் நூறு நூறு வகையானவை என்கின்றன சித்த வைத்திய நூல்கள். 'போகர் கற்ப மூலிகைகள்' என்ற நூல் 45 உயிர் காக்கும் மூலிகைகளை அடையாளம் காட்டுகிறது. இதில் மூன்றாவதாக உள்ள கற்ப மூலிகை நொச்சி. வெண் நொச்சி, கரு நொச்சி, நீர் நொச்சி என மூவகை நொச்சி பரவலாக அறியப்பட்டாலும் இதில் 32 வகைகள் இருந்தன என்கிறார்கள் பெரியவர்கள். கபத்தால் வரக்கூடிய பல நோய்களுக்கு நொச்சி நல்ல தீர்வாகும். கபம் மட்டுமல்ல, வாதத்தால் வரக்கூடிய உறுப்புகள் செயல்படாமையைக் கூட நொச்சியிலைத் தைலம் சரி செய்துவிடும். உடல் பலம் இழந்த குழந்தைகளுக்கு நொச்சி கஷாயம் நல்ல மருந்து. நொச்சி இலைகளை தலைக்கு அடியில் வைத்துப் படுக்க தலைவலி நீங்கும்.

இந்த கொரோனா காலத்தில் இந்த நொச்சி இலைகள் புகை போடவும் ஆவி பிடிக்கவும் பெரும்பாலும் பயன்பட்டதை நீங்கள் அறிந்திருக்கலாம்.

புதர்ச் செடியாக மானாவாரியாக வளரும் இந்த நொச்சியால் அந்தப் பகுதிக்கே பல நன்மைகள் உருவாகும் என்கிறது சித்த வைத்திய முறை. வெண்மையான நொச்சியே பல இடங்களில் வளரும் தன்மை கொண்டது. கசப்பு, துவர்ப்பு மற்றும் காரச் சுவை கொண்ட நொச்சியால் சுமார் 360 வகை நோய்கள் தீரும் என்று வைத்திய வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

இது மழைக்காலம், கொசுக்களும் நுண்ணுயிர்களும் வீட்டுக்கு அதிகம் வரும் காலம். இந்த ஆபத்துக்களில் இருந்து உங்களைப் பாதுகாக்கும் அற்புத நிவாரணி நொச்சி. நொச்சி இலைகளால் தூபம் போட்டால் கொசுத் தொல்லை, நுண் கிருமிகள் தொல்லை நீங்கும் என்கின்றன சித்த நூல்கள். நொச்சி இலைகளை சுடுநீரில் போட்டு குளித்தால் உடலில் உண்டாகும் வலி, தசைப் பிடிப்பு, கீல் வாதம், முக வாதம், உடல் சோர்வு நீங்கி உற்சாகம் பிறக்கும். நொச்சி இலையால் ஆவி பிடித்தால் சுவாசக் கோளாறுகள் நீங்கும். மேலும் ஜலதோஷம், மூக்கடைப்பு, சுவாசப் பிரச்னைகள், சைனஸ் தலைவலி, இரைப்பு நோய், ஒற்றைத் தலைவலி, மூக்கடைப்பு, நீர்க்கோர்வையாவும் நீங்கும். இது தேமலுக்கு நல்ல மருந்து. நொச்சி இலையை மிளகு, பூண்டு சேர்த்து மென்று தின்றால் ஆரம்பக் கால ஆஸ்துமா பிரச்னை சரியாகும். கவனிக்கவும் ஆஸ்துமா, நுரையீரல் பிரச்னை தீவிரமாகக் கொண்டவர்கள் நொச்சி

தெய்வ மூலிகைகள் 4




இலையை பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். நீராவிக் குளியல் முறையிலும் நொச்சி பெரிதும் பயன்படுகிறது. இதனால் உடலில் உள்ள அசுத்தங்கள் வியர்வை வழியே நீங்கும்.

நொச்சி இலைச்சாறு மூட்டுவலியை குணப்படுத்தும். புண்களையும் குணப்படுத்தும். உடலில் கட்டி, வீக்கம் இருப்பவர்கள் நொச்சி இலைகளை வதக்கி அந்த இடத்தில் கட்ட குணமாகும். நொச்சி இலைகள் சேர்ந்த சுடுநீரில் குளித்தால் பிரசவித்த பெண்களின் உடல் உபாதைகள் நீங்கும் என்பது இன்னும் கிராமங்களில் உள்ள நடைமுறை.

கத்திரிப் பூ நிறத்தில் பூக்கும் நொச்சியின் மலர்களால் உருவாகும் தேன், உடல் வலியை நீக்கி அதிக சக்தி தரும். நொச்சியின் மலர்கள் காலரா, வயிற்றுப்போக்கு, காய்ச்சல், கல்லீரல் நோய், தோல் வியாதி போன்றவற்றுக்கு மருந்தாகிறது. நொச்சியின் கனிகள் நரம்புகளுக்கு வலுவேற்றுகின்றன. காய்ந்த கனிகள் கிருமி நாசினியாக உதவுகின்றன, மாதவிடாய்க் கோளாறுகளையும் சரி செய்கிறது.

மாதங்கி பச்சிலை, ராஜாளிப் பச்சிலை என்று அழைக்கப்படும் கருநொச்சி அற்புதமான பலன்கள் கொண்டது. கருநொச்சியின் வேர், பட்டை, விதை, பூக்கள் என சமூலமாக (முழுவதுமாக) மருத்துவப் பயன்கள் நிறைந்தவை. நொச்சியின் வேருக்கு பாம்பு விஷத்தை முறிக்கும் வல்லமை உள்ளது. கருநொச்சி இலைச்சாறு சீதபேதி, உடல் பலவீனம், குடல்வலி, கணைய வீக்கம், பசியின்மை, பெருவியாதி, குடல் பூச்சி, செரிமானப் பிரச்னை, மந்தமாகச் செயல்படும் ஈரல், நரம்பு வலி போன்றவற்றையும் சரிசெய்யும். கருநொச்சி தைலம் ஜுரம், வாய் குழறுதல், மார்புச் சளி, நீரிழிவு நோய், மேக வெட்டை, தலைப்பாரம், கண்டமாலை, கைவிரல், கால்விரல் கணுக்களின் வீக்கங்களுக்கு நல்ல மருந்தாகும்.





ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்க நொச்சி இலை தைலம் பெரிதும் பயன்பட்டது. இதனால் 'ஓலைகளைக் காக்கும் உயர் வாணி' என்று கூட புலவர்கள் போற்றி உள்ளார்கள். தானியங்களை புழு, பூச்சிகளில் இருந்து பாதுகாக்கும் நல்ல உபாயமாக நொச்சி இலைகள் இருந்து வருகின்றன. மாட்டுச் சாணத்துடன் நொச்சி இலை விழுதைச் சேர்த்து வீட்டைச் சுற்றி தெளிக்க பூச்சிகள், ஊர்வன வகைகள் வீட்டுக்குள் வராது. மண் அரிப்பைத் தடுக்கவும், வேகமாக வீசும் காற்றை தடுத்து நிறுத்தவும் நொச்சி பயன்படுகிறது. இதனால் மண்ணும் மக்களும் பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதும் விசேஷம்.

நொச்சியை புகை போடவோ, ஆவி பிடிக்கவோ, நொச்சி தைலம், நொச்சி கஷாயம் போன்றவற்றை பயன்படுத்தவோ செய்யும் முன்னர் தகுந்த மருத்துவர்களை ஆலோசித்த பிறகே பயன்படுத்தவும். நல்லதே ஆனாலும் உங்கள் உடல் அதை ஏற்றுக் கொள்ளுமா என்பதை உறுதி செய்த பிறகு பயன்படுத்துவது நல்லது.

மரிய பெல்சின்



மலச்சிக்கலைப் போக்கும் வழிமுறைகள்..!

மலச்சிக்கல்... இன்னைக்கி சூழல்ல இந்தப் பிரச்னை பலபேருக்கு இருக்கு. ஆனா, வெளிய சொன்னா வெக்கம்னு பலபேர் இந்தப் பிரச்னையை உள்ளுக்குள்ளேயே அடக்கிக்கிடுவாங்க. மலச்சிக்கல் பல சிக்கல்களுக்கு வழிவகுக்கும்கிறதால அதுல கொஞ்சம் கவனமா இருக்கணும். நாம சாப்பிடுற சாப்பாட்டுல எவ்வளவு ஆர்வம் காட்டுறமோ அதேபோல மலத்தை வெளியேத்துறதுல அக்கறையில்லாம இருக்கோம். அதனாலயே பல நோய்கள்ல சிக்கி சிரமப்பட்டுட்டு இருக்கோம். குறிப்பா தோல் நோய்கள் வர்றதுக்கு அடிப்படைக் காரணம் மலச்சிக்கல்தான்ங்கிறது பலபேருக்கு தெரியாத உண்மை.

உணவுமுறை நிறையவே மாறிப்போய்ட்டு. கூடவே உடல் உழைப்பும் குறைஞ்சுபோய்ட்டு. நேரம் காலம் பார்க்காம நொறுக்குத்தீனிகளை சாப்பிடுறது அதிகரிச்சிட்டு. இதனால பலபேர் மலச்சிக்கலால அவதிப்படுறாங்க. நம்ம முன்னோர் என்ன சாப்பிட்டாங்க, நாம இப்போ என்ன சாப்பிடுறோம்னு யோசிச்சி பாருங்க. அப்பிடியே சாப்பிட்டாலும் அந்த உணவு செரிமானமாகுற மாதிரி நாம என்ன செய்றோம்?

காலை உணவு, பகல் உணவு என்னல்லாம் சாப்பிடுறோம்? கூழ், இட்லி, இடியாப்பம், பொங்கல்னு எளிமையான சாப்பாடு சாப்பிடுறதை விட்டுட்டு பூரி, சப்பாத்தி, தோசையைத்தான் பலபேர் சாப்பிடுறோம். இன்னும் சிலபேர் பிரெட் ஆம்லெட் சாப்பிட்டு அவசர அவசரமா வேலைக்குக் கிளம்புறாங்க. அதுமட்டுமில்ல நாம சாப்பிடுற சாப்பாட்டுக்கேத்த அளவு தண்ணி குடிக்கணும். இத்தனை லிட்டர் குடிக்கணும்கிறது அவசியம் இல்லன்னாலும் அப்பப்போ தண்ணி குடிக்கவேண்டியது அவசியம். ஆனா, பலபேர் தண்ணி குடிக்கிறதை மறந்திடுறோம். மழைக்காலங்கள்ல சுற்றுப்புறச் சூழல் குளிர்ச்சியா இருக்கிறதால நம்மையும் அறியாம தண்ணி குடிக்கிறதை குறைச்சிருவோம். அதேமாதிரி வெயில் காலத்துல நம்ம உடம்புல இருந்து அதிகப் படியான நீர் வெளியேறுறது பத்தி தெரியாததால வழக்கம்போல தண்ணி குடிப்போம். வெயில் காலத்துல தண்ணி அதிகமா குடிக்க வேண்டியது அவசியம். இதையெல்லாம் கவனிக்காம இருந்தா அது மலச்சிக்கல்ல கொண்டு விட்டுடும்.

பொதுவா மூணுவேளை சாப்பாடு எப்பிடி இருக்கணும்கிறது முக்கியம். அரை வயிறு உணவு, கால் வயிறு தண்ணி, மீதமுள்ள கால் வயிறு காத்து இருக்கணும்கிறதுதான் சரி. காலை, மதியம், இரவு வேளை உணவு வித்தியாசப்படலாம்னாலும் இது அடிப்படையான ஒண்ணு. ஆனா பலபேர் இந்த விதிகளை கண்டுகொள்வதே இல்லை. மூக்கு முட்ட வயிறு நிறைய சாப்பிடுறதையே வழக்கமா வச்சிருப்போம். இதனாலயும் மலச்சிக்கல் உண்டாகலாம். சாயங்கால வேளைல சுக்கு காபி சாப்பிடுறதை வழக்கமா வச்சிருந்தோம். ஆனா இப்போல்லாம் டீ சாப்பிடுற பழக்கம்தான் நம்மக்கிட்ட இருக்கு. அந்த நேரத்துல போண்டா, பஜ்ஜின்னு எண்ணெய்ப்பலகாரங்களை சாப்பிடுறோம். அதேபோல ராத்திரி நேரத்துலயும் பலபேர் நான்வெஜ் சாப்பிடுவாங்க. அதுவும் 10 மணிக்கு மேல சாப்பிட்டா என்னாகும்? அதோட பரோட்டா, சப்பாத்தின்னு சாப்பிட்டா வயிறு என்ன பாடுபடும்?



வெத்திலையை கழிவகற்றின்னு சொல்றது ரொம்பச் சரியா இருக்கும்.

சாப்பாட்டோட பழம் சேர்த்துச் சாப்பிடலாமா, பழம் சாப்பிட்ட பிறகு சாப்பிடலாமா, சாப்பிட்ட பிறகு பழம் சாப்பிடலாமாங்கிற கேள்வி பலபேர் முன்னாடி இருக்கு. இதுல எந்த முறையும் சரியில்ல. வெந்த உணவுகளை தனியாவும், பழத்தை தனியாவும் சாப்பிடணும். குறைஞ்சது ஒரு மணி நேர இடைவெளியில பழம் சாப்பிட்டா மலச்சிக்கல்ங்கிற பேச்சுக்கே இடமில்லை. ஒருவேளை சாப்பாட்டுக்கு பதிலா பழ உணவை எடுத்துக்கிட்டா மலச்சிக்கல் பிரச்னை வராம இருக்கிறதோட உடல் ஆரோக்கியமும் பாதுகாக்கப்படும். பழங்கள்ல உள்ள சத்துகள் உள்ளது உள்ளபடி உடல்ல சேர்ந்துடும். உலர் திராட்சை... அதாவது காய்ஞ்ச திராட்சை பழம், பேரீச்சம் பழத்தை சாப்பிட்டாகூட மலச்சிக்கல் வராம பார்த்துக்கிடலாம். மலச்சிக்கல் வந்தா கைப்பிடி அளவு திராட்சைப்பழத்தை ராத்திரி நேரத்துல சாப்பிட்டா மறுநாள் காலை பிரச்னையில்லாம மலம் வெளியேறும்.

பொதுவா காலை உணவு ரொம்ப சீக்கிரம் செரிமானமாகுற மாதிரி இருந்தா நல்லது. இன்னைக்கி உள்ள அவசர சூழல்ல பழங்கள் சாப்பிடுறது நல்லது. மதியம் கீரை, பச்சைக் காய்கறிகள், முளைகட்டுன பயறுகளை சேர்த்துக்கிடலாம். ராத்திரிவேளைல இட்லி, இடியாப்பம்னு ஆவியில வெந்த உணவுகளா இருந்தா நல்லது. போதுமான அளவு தண்ணி குடிக்கணும். சீரகத்தண்ணி, இஞ்சி டீ, சுக்கு மல்லி காபி, பிரண்டைத் துவையல், பூண்டுக் குழம்புன்னு அடிக்கடி உணவுல சேர்த்துட்டு வந்தா நாம சாப்பிடுறதெல்லாம் செரிமானமாகும். அந்தந்த நேரத்துல சாப்பிடணும், பசி எடுத்தா சாப்பிடுறது நல்லது. சாப்பிட்ட உடனே படுக்கிறது நல்லதில்ல. குறுநடை போடுறது நல்லது. வயிறு ஊதுன மாதிரி இருந்தா புதினா ஜூஸ், ஓம வாட்டர், ஓமத்தை வறுத்து கருப்பட்டி சேர்த்து சாப்பிடலாம். மலச்சிக்கல் பிரச்னை இருந்தா விளக்கெண்ணை குடிக்கலாம். இல்லைன்னா திரிபலா சூரணம், கடுக்காய் கஷாயம் குடிச்சி இயற்கை முறையில மலத்தை வெளியேத்த வழி செய்யணும்.

இன்னும் நிறைய வழிமுறைகள் இருக்கு. இதெல்லாம் அடிப்படை. இதை சரியா பின்பற்றினாலே நீங்க சாப்பிட்டதெல்லாம் செரிமானமாகும். வாய்வுக்கோளாறு, மலச்சிக்கல் ஏற்படாமப் பார்த்துக்கிடலாம். ●

முன்னாடியெல்லாம் தாம்பூலம் தரித்தல்ங்கிற பழக்கம் இருந்திச்சி. வெத்திலை, பாக்கு, சுண்ணாம்பு சேர்த்து சாப்பிடுறதைத்தான் தாம்பூலம் தரித்தல்னு சொல்வோம். நம்ம முன்னோர் பின்பற்றுன பழக்கவழக்கங்கள்ல இதுவும் ஒண்ணு. முக்கியமா நாம சாப்பிட்ட சாப்பாடு செரிமானமாகுறதுக்கு ரொம்பவும் உதவியா இருந்திச்சி. ஆனா வெத்திலை போடுற வயதான சிலபேர்... முக்கியமா பாட்டிமார் புகையிலையையும் சேர்த்துக்கிட்டதால தான் வெத்திலைன்னாலே அதை வெறுத்து ஒதுக்குறதோட அது ஒரு கெட்ட பழக்கம்னு பலபேர் நினைக்கிறாங்க.

வெத்திலையோட பாக்கு, சுண்ணாம்பு சேர்த்துச் சாப்பிடுறது மட்டுமில்லாம மிளகு சேர்த்து காலையும், சாயங்கால நேரமும் சாப்பிட்டு வந்தாலே மலச்சிக்கல் வராது. சாப்பாடு சரியா செரிமானமாகலைன்னாலோ, வயித்துக்கு ஒத்துக்கிடலைன்னாலோ வெத்திலை, மிளகு சாப்பிட்டாலே போதும்.

பிரேம்நாத்.பி


mirakle™ Wellness Clinic
Live happy Live Healthy







ஓம்சக்தி சென்ற இதழில் பாரம்பர்ய மருத்துவமும் நவீன மருத்துவமும் இணைந்த ஒருங்கிணைந்த மருத்துவத்துக்காக பொள்ளாச்சியில் தொடங்கப்பட்ட மிராக்கிள் வெல்னெஸ் கிளினிக் பற்றியும், அதன் பின்னணியில் சக்தி குழுமங்களின் தலைவர் மாணிக்கம் அவர்களின் நீண்ட பயணத்துடன் கூடிய பதினெட்டு வருட முயற்சியும் இருந்ததைக் கண்டோம். இந்தப் பயணத்தின் ஒரு கட்டத்தில் அவருடன் இணைந்துகொண்டவர் தான் டாக்டர் அருள்.



டாக்டர்.அருள்

சென்னை மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்ற டாக்டர் அருள், பொள்ளாச்சியில் மருத்துவப் பணியைத் தொடங்கினார். சில ஆண்டுகளில் அவருடைய தந்தை மாரடைப்பால் உயிரிழந்தார். தந்தையின் மரணம், அவருடைய தலையில் இடி இறங்கியது போன்ற பெருத்த வேதனையை ஏற்படுத்தியது. மன அமைதிக்காக சில காலம் ஓய்வெடுத்துவிட்டு, மறுபடியும் சென்னைக்கு வந்து பொது மருத்துவராகத் தன் மருத்துவப் பணியைத் தொடர்ந்தார்.

சென்னைக்கு வந்த பிறகு அவருக்கு மற்றொரு சோதனை அவருடைய அம்மாவின் மூலம் ஏற்பட்டது. அவருடைய அன்னைக்கு உணவுக்குழாயில் புற்றுநோய் ஏற்பட்டுவிட்டது. கதிரியக்க சிகிச்சை அளித்தும்கூட அதன் வீரியம் தாங்காமல் நாளுக்கு நாள் உடல்நலம் குன்றி இறுதியில் இறைவனடி சேர்ந்துவிட்டார். இது அவருக்கு ஏற்பட்ட இரண்டாவது பெருந்துன்பம். இதற்குப் பிறகுதான் வழக்கமான மருத்துவம் மற்றும் நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட



ஒருங்கிணைந்த மருத்துவத்துக்கு மிராக்கிள் வெல்னெஸ் மருத்துவ மையம்!



மாணிக்கம்

மக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் மீதும் அவருக்குள் சில கேள்விகளை எழுப்பின. அதே நேரம் வெறும் மருந்து, மாத்திரைகளும் மட்டுமே ஒரு நோயை குணப்படுத்த முடியாது, உடலில் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதன் மூலம் மட்டுமே நோய்களின் தாக்குதல்களில் இருந்து விடுபட முடியும் என்றும் அவருக்குத் தோன்றியது.

எனவே ஒருங்கிணைந்த மருத்துவத்தின் நுணுக்கங்களை அறிந்து கொள்ளவும், அந்தத் துறையில் பயிற்சி பெறவும் அமெரிக்கா, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, கிரீஸ், ஜப்பான், மெக்ஸிகோ மற்றும் மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று பயிற்சி பெற்றார். அதன் மூலம் தான் பெற்ற அனுபவங்களை



நம்முடன் பகிர்ந்துகொண்டார்.

''ஒருங்கிணைந்த மருத்துவம் என்பது நோயின் மூலக் காரணத்தை அறிந்து அதற்கேற்ற உணவுப் பழக்கம், வாழ்க்கை நடைமுறை இவற்றைச் சரிவரப் பின்பற்றி நோயிலிருந்து மீண்டு வருவதே. வெறும் மருந்து மாத்திரையினால் மட்டுமே அல்ல. ஒருங்கிணைந்த மருத்துவத்துக்கான இந்த பயணம், ஊட்டச்சத்துகளின் முக்கியத்துவத்தையும், ஆரோக்கியமான உடலை பராமரிப்பதையும் எனக்குக் கற்பித்தது.

கடுமையான அறிகுறிகளுடன் கூடிய நோய்களுக்கு வழக்கமான மருத்துவச் சிகிச்சையே சிறந்தது. ஆனால், நாள்பட்ட நோய்களை வழக்கமான மருத்துவச் சிகிச்சையின் மூலம் மட்டுமே குணப்படுத்துவது என்பது நிச்சயமல்ல. கடந்த பதினைந்து வருடங்களாக ஒருங்கிணைந்த மருத்துவச் சிகிச்சை முறைகள் பற்றிப் பயின்றதிலிருந்து, நாள்பட்ட நோய்களுக்கான சிகிச்சைக்கு ஒருங்கிணைந்த மருத்துவச் சிகிச்சையே உகந்தது என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

வைட்டமின் சி மற்றும் ஓசோன் சிகிச்சையின் சில அமர்வுகளுக்குள் புற்றுநோயினால் ஏற்படும் கடுமையான வலி மற்றும் சோர்வு உள்ள நோயாளிகள் குணமடைவதை நான் அனுபவத்தில் பார்த்திருக்கிறேன். மார்பு வலி மற்றும் மூச்சுத்திணறல் இல்லாமல் படிக்கட்டுகளில் ஏற முடியாத நோயாளிகள் இப்போது சில கிலோமீட்டர்கள் நடப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். நீரிழிவு நோயாளிகளின் ரத்த சர்க்கரை அளவு எப்போதும் எவ்வித மருந்துகளின் துணையுமின்றி கட்டுப்பாட்டில் இருக்கிறது. பல வருடங்களாக இருந்த நாள்பட்ட தோல்நோய்கள்கூட சில மாதங்களுக்குள்ளேயே குணமடைவதையும் பார்த்திருக்கிறேன். கடுமையான செரிமான பிரச்னைகள் உள்ள நோயாளிகள், கவலைப்படாமல் உணவை ருசித்து சாப்பிடுவதையும் நான் பார்த்திருக்கிறேன். இத்தகைய அற்புதங்களுக்கெல்லாம் காரணம் ஒருங்கிணைந்த மருத்துவம்தான் என்பதை நான் அறிந்துகொண்டேன்.

இந்தியாவின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் துன்பப்படும் நோயாளிகளுக்கு குறைந்த செலவிலேயே நோயை குணப்படுத்தும் ஒருங்கிணைந்த மருத்துவத்தை நடைமுறைப் படுத்தவேண்டும் என்பது என் நீண்டநாள் கனவாக இருந்தது.

2018-ம் ஆண்டின் தொடக்கத்தில் ஒரு நாள் சக்தி குழுமங்களின் தலைவர் மாணிக்கம் மகாலிங்கத்தை சந்தித்தேன். எனக்கு முன்பாகவே ஒருங்கிணைந்த மருத்துவம் பற்றிய தெளிவு அவருக்கு ஏற்பட்டிருந்ததைத் தெரிந்து கொண்டேன். எங்கள் இருவருக்கும் ஒருங்கிணைந்த மருத்துவத்தில் ஒத்திசைவான கருத்து இருந்ததால், ஒருங்கிணைந்த மருத்துவ மையம் ஒன்றைத் தொடங்கவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டது. அந்த எண்ணத்தின் செயல் வடிவமே பொள்ளாச்சியில் அமைந்திருக்கும் 'மிராக்கிள் வெல்னெஸ் கிளினிக்'. என்னுடைய இந்த முயற்சி செயல் வடிவம் பெற்றதன் பின்னணியில், மாணிக்கம் மகாலிங்கம் அவர்கள்தான் பெரும் தூண்டுதலாகவும் உந்து சக்தியாகவும் இருக்கிறார். அவருக்கு என் நன்றிகள்" என்று கூறினார்.

எஸ்.கண்ணன்கோபாலன்

ஆபரணங்களில் இருந்து தோன்றிய அழகின் திருவே

அபிராமி!

விதித்த விதியை மாற்ற முடியுமா..?

இயற்கை நியதியைத்தான் மாற்ற முடியுமா..?

காலம் காலமாகவே மனிதர்களைக் குழப்பும் கேள்விகள் இவை... நம்முடைய இந்தக் குழப்பத்தைத் தெளிவிப்பது போல் அருளாடல் புரிய திருவுள்ளம் கொண்டனர் ஐயனும் அம்பிகையும். அப்படி அவர்கள் அருளாடல் புரிந்த தலம்தான் திருக்கடவூர் என்றும் திருக்கடையூர் என்றும் போற்றப்படும்



திருத்தலம்!

இந்தத் தலத்தில் அவர்களின் தோற்றம் கூட தனிச்சிறப்பு கொண்டதாக அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

ஆம், இருவருமே சுயம்புவாகத் தோன்றியவர்கள் என்பதுதான் அந்தத் தனிச்சிறப்பு

ஜீவன்களை எல்லாம் கடைத்தேற்றும் ஊர் என்பதாலேயே அந்தத் திருத்தலம் திருக்கடையூர் என்று சிறப்புப் பெற்றது போலும்!

அந்தத் திருத்தலத்தில்தான் பிரம்மதேவர் தவம் இருந்து, படைக்கும் ஞானம் கைவரப் பெற்றார்;

அந்தத் தலத்தில்தான் மார்க்கண்டேயர் சிரஞ்சீவித்துவம் பெற்றார்;

அந்த அற்புதத் தலத்தில்தான் அம்பிகையும் சுயம்புவாகத் தோன்றினாள்.

திருக்கடவூர் என்னும் அந்தத் திருத்தலத்தில் ஐயனும், அம்பிகையும் நிகழ்த்திய அருளாடல்கள்தான் எத்தனை எத்தனை?

ஒரு பிரளய காலத்துக்குப் பிறகு மீண்டும் படைப்புத் தொழிலைத் தொடங்க விரும்பிய பிரம்மதேவர் அதற்கு முன்பாக சிவபெருமானிடம் ஞானோபதேசம் பெற விரும்பினார். சிவபெருமான் அவரிடம் வில்வ விதை ஒன்றைக் கொடுத்து, "இந்த விதையை இட்ட ஒரு முகூர்த்த நேரத்துக்குள் எந்த இடத்தில் முளைத்து வருகிறதோ அந்த இடத்தில் தங்கி இருந்து எம்மை வழிபடுவாயாக" என்று கூறினார்.


பிரம்மதேவர் அதன்படியே ஒவ்வொரு தலமாக வில்வ விதையை இட்டபடி திருக்கடவூர்த் தலத்துக்கு வந்தார். இந்தத் தலத்தில் அவர் மண்ணில் இட்ட வில்வ விதை ஒரு முகூர்த்தத்துக்குள் முளைத்து வர, பிரம்மதேவர் அந்தத் தலத்திலேயே தங்கி இருந்து, சிவபெருமானை வழிபட்டு ஞானோபதேசம் பெற்றார். அதன் காரணமாக திருக்கடவூர் தலத்துக்கு வில்வவனம் என்றும் இறைவனுக்கு வில்வவனேசுவரர் என்றும் திருப்பெயர்கள் ஏற்பட்டதாகத் தல வரலாறு கூறுகிறது.

ஒருமுறை தேவேந்திரன் சபையில் மந்திராலோசனை நடைபெற்றது. சபையில் இருந்தவர்களைப் பார்த்து, "தேவர்களே, அசுரர்களால் நமக்கு எப்போதும் அழிவு ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. எனவே, நமக்கு அழிவு என்பதே யாராலும் வரக்கூடாது. இதற்கு நாம் என்ன செய்யலாம்?" என்று இந்திரன் கேடான்.

தேவகுருவாகிய பிரகஸ்பதியின் ஆலோசனைப்படி தேவர்கள் அனைவரும் மகாவிஷ்ணுவிடம் சென்று தங்களின் விருப்பத்தைத் தெரிவித்தனர். தேவர்களிடம் இரக்கம் கொண்ட மகாவிஷ்ணு, "நீங்கள் பாற்கடல் கடையுங்கள். அப்போது அதில் இருந்து அமிர்தம் வெளிப்படும். அந்த அமிர்தத்தை அருந்தினால் உங்களை யாராலும் அழிக்க முடியாது" என்று கூறினார்.

தேவர்களும் அப்படியே செய்து பாற்கடலில் இருந்து அமிர்தம் பெற்றனர். அந்த அமிர்தத்தை தேவர்கள் பருக ஒரு புனிதமான இடம் வேண்டுமே! அப்போது சிவபெருமான் தேவர்களுக்கு திருக்கடவூர் தலத்தைப் பற்றிச் சொல்லி, அங்கே சென்று அமிர்தத்தைப் பருகுமாறு கூறினார். சிவபெருமானின் கட்டளைப்படி தேவர்கள் திருக்கடவூர்த் தலத்துக்கு வந்தனர். அங்கே அமிர்த கலசத்தை ஓர் இடத்தில் வைத்துவிட்டு நீராடச் சென்றனர். திரும்பி வந்து பார்த்தபோது அங்கே அமிர்த கலசத்தைக் காணவில்லை. அதற்குப் பதிலாக எண்ணற்ற வில்வ கலசங்கள்தான் அங்கே காணப்பட்டன. பாற்கடலில் தோன்றிய அமிர்த கலசத்தை எடுப்பதற்கு முன்பாக தேவர்கள் விநாயகரை வழிபட மறந்துவிட்டதால், விநாயகப்பெருமான் அமிர்த கலசத்தை எடுத்து மறைத்து வைத்துவிட்டார். பின்னர், தேவர்கள் விநாயகப் பெருமானை வழிபட்டு அவரிடம் இருந்து அமிர்த கலசத்தை திரும்பப் பெற்றனர். அமிர்த கலசத்தை மறைத்து வைத்ததால், இங்கே அருள்புரியும் விநாயகர் கள்ளவாரண விநாயகர் என்ற திருப்பெயர் கொண்டார்.

விநாயகப் பெருமானிடம் இருந்து அமிர்த கலசத்தைப் பெற்ற தேவர்கள், தாங்கள் அமிர்தத்தை அருந்துவதற்கு முன்பாக, பாற்கடல் கடைந்தபோது அமிர்தத்துக்கு முன்பாகத் தோன்றிய ஆலகால விஷத்தின் கொடுமையில் இருந்து தங்களைக் காப்பாற்றிய சிவபெருமானை வழிபட விரும்பினர். மகாவிஷ்ணுவும் அதுதான் சரி என்று நினைத்தவராக சிவபெருமானை


ஓம்சக்தி

தியானித்தார்.

அப்போது அந்த அமிர்தகலசத்தில் இருந்து சிவபெருமான் சுயம்புலிங்கமாக வெளிப்பட்டார். சிவபெருமானை தேவியுடன் சேர்த்து பூஜிக்க வேண்டும் என்பதால், மகாவிஷ்ணு தம்முடைய ஆபரணங்களைக் கழற்றி வைத்து அம்பிகையை தியானித்தார். அந்த ஆபரணங்களில் இருந்து சுயம்புவாக அபிராமி அம்பிகை தோன்றினாள். அபிராமி என்றால் இணையற்ற அழகு உடையவள் என்று பொருள். அண்ணனின் அழகழகான ஆபரணங்களில் இருந்து தோன்றியவள் அல்லவா அம்பிகை அபிராமி! அவளுடைய அழகுக்குக் கேட்கவா வேண்டும்? இணையற்ற அழகும் அருளும் கொண்டவளாகத் திருக்காட்சி தருகிறாள் அன்னை அபிராமி! சுயம்புவாகத் தோன்றிய அமுதகடேசரையும் அபிராமி அன்னையையும் தியானித்து பூஜை செய்த பிறகு, மகாவிஷ்ணு தேவர்களுக்கு அமிர்தத்தைப் பரிமாறினார்.

அமரர்களுக்கு அமிர்தம் அருளிய ஐயனையும் அண்ணனின் அழகழகான ஆபரணங்களில் இருந்து தோன்றிய அழகின் வடிவாகிய அபிராமி அம்பிகையையும் தரிசிக்க நாம் உண்மையிலேயே கொடுத்துத்தான் வைத்திருக்க வேண்டும்.

மேற்கு நோக்கி திருக்காட்சி தரும் ஐயன் அமிர்தகடேசரின் ஆலயத்துக்குள் செல்கிறோம். முதலில் அமைந்துள்ள பெரிய மண்டபத்தின் முடிவில் வலப்புறம்

அமரர்களுக்கு அமிர்தம் அருளிய ஐயனையும் அண்ணனின் அழகழகான ஆபரணங்களில் இருந்து தோன்றிய அழகின் வடிவாகிய அபிராமி அம்பிகையையும் தரிசிக்க நாம் உண்மையிலேயே கொடுத்துத்தான் வைத்திருக்க வேண்டும்.



அமைந்துள்ள அபிராமி அம்பிகையின் சந்நிதிக்குச் செல்கிறோம். அம்பிகையின் சந்நிதியில் ஏராளமான பக்தர்களின் கூட்டம். அம்பிகையை தரிசித்த பிறகும் யாரும் சந்நிதியை விட்டு சுலபத்தில் நகர்வதாகத் தெரியவில்லை. அதற்கான காரணம் நமக்குப் புரியவில்லை. நாமும் பொறுமையாக வரிசையில் காத்திருந்து அம்பிகையின் சந்நிதியை அடைந்தோம்

சந்நிதியில், அண்ணன் மகாவிஷ்ணுவின் ஆபரணங்களில் இருந்து சுயம்புவாகத் தோன்றிய அன்னை அபிராமி பேரழகு வடிவினளாய், பேரருள் பெட்டகமாக அருட்காட்சி தருகிறாள். அவளுடைய அந்த அழகு திருக்கோலத்தை தரிசித்த எவருக்கும் உடனே அங்கிருந்து செல்ல மனம் வராது என்பது உண்மைதானே!

அவளுடைய அருள் திறத்தினைப் போற்றும் விதமாக அவள் நிகழ்த்திய ஓர் அருளாடல்...

அப்போதைய தஞ்சைப் பகுதியை சரபோஜி மன்னர் ஆண்டுவந்த காலம். திருக்கடவூரில் சுப்பிரமணிய பட்டர் என்னும் அபிராமி பட்டர் என்பவர் அபிராமி அம்பிகையிடம் ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தார். சதா சர்வ காலமும் அவருக்கு அபிராமி அன்னையின் நினைவுதான். அதுமட்டுமல்ல, காணும் பெண்களை எல்லாம் அபிராமியாகவே கண்டு போற்றும் பரிபக்குவ நிலை பெற்றவர். நாளின் பெரும்பொழுது அபிராமியின் சந்நிதியிலேயே இருப்பவர். தன்னுடைய பக்தனின் மாசற்ற பக்தியின் மகிமையை உலகத்தவர்க்கு உணர்த்த அபிராமி திருவுள்ளம் கொண்டாள்.

அதன்படி முதலில் கோயில் பணியாளர்கள் அபிராமி பட்டரிடம் துவேஷம் கொள்ளும்படிச் செய்தாள். அவர்கள் வருவோர் போவோரிடம் எல்லாம் அபிராமி பட்டரைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி அவரிடம் நெருங்கிவிடாதபடி செய்தனர்.

இந்நிலையில் ஒருநாள் சரபோஜி மன்னர் ஆலயத்துக்கு வந்திருந்தார். அபிராமி பட்டரை ஆலயத்தில் இருந்து எப்படியாவது வெளியேற்றிவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த பணியாளர்கள் தக்க தருணத்துக்குக் காத்திருந்தனர். அபிராமி அம்பிகையின் சந்நிதிக்கு வந்த சரபோஜி மன்னர், அங்கே அம்பிகையின் தியானத்தில் தம்மை மறந்து லயித்திருந்த அபிராமி பட்டரைக் கண்டார். உடன் வந்த பரிவாரங் களின் ஆரவாரம் எதுவும் கேளாதவர்போல் தியானத்தில் இருந்த அபிராமி பட்டரைக் கண்ட மன்னர், உடன் வந்த கோயில் பணியாளர்களிடம் அவரைப் பற்றி விசாரித்தார்.

பட்டரை எப்படியாவது கோயிலில் இருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த கோயில் பணியாளர்கள், அவர் பெண்பித்து பிடித்தவர் என்றும் சதாகாலமும் கள்ளுண்டது போன்ற மயக்கத்தில் மூழ்கிக் கிடப்பவர் என்றும், இல்லாததும் பொல்லாததும் கூறினார்கள். அதைக் கேட்டுக்கொண்ட மன்னர், எதையும் தீர விசாரித்தே அறிய வேண்டும் என்று நினைத்து





பட்டரிடம், "ஐயா, இன்றைக்கு என்ன திதி?" என்று கேட்டார். 'மாசற்ற முழு நிலவின் முகம் போல்' பிரகாசித்த அம்பிகையின் திருமுக தரிசனத்தில் தம்மை மறந்து லயித்திருந்த அபிராமி பட்டர், "இன்றைக்கு பௌர்ணமி திதி" என்று கூறினார். அதைக் கேட்ட மன்னர், கோயில் பணியாளர்கள் அவரைப் பற்றிக் கூறியது உண்மைதான் என்ற முடிவுக்கு வந்தவராக பட்டரிடம், "நீர் சொல்வது போல் இன்று பௌர்ணமி என்றால், முழுநிலவு தோன்றவேண்டும். அப்படித் தோன்றவில்லை என்றால் உமக்கு மரண தண்டனை விதிக்கப்படும்" என்று சொல்லிச் சென்றுவிட்டார்.

பின்னர் சுயநினைவுக்கு வந்த அபிராமி பட்டரிடம் அங்கிருந்தவர்கள் நடந்ததைக் கூறினார்கள். அதைக் கேட்ட பட்டர் கொஞ்சமும் பதற்றமோ கவலையோ கொள்ளவில்லை. தம்மை அப்படி சொல்லச் செய்தவள் அபிராமிதான் என்றும், அவளே அதற்கு ஒரு முடிவு செய்வாள் என்றும் கூறிய அபிராமி பட்டர், ஓர் இடத்தில் மேலே நூறு பிரிகளைக் கொண்ட ஊஞ்சலைக் கட்டி அதன் கீழே அக்னி வளர்க்கச் செய்தார். பின்னர் அந்த ஊஞ்சலில் ஏறிக்கொண்டு அம்பிகையின் பேரில் அந்தாதி பாடினார். ஒவ்வொரு பாடல் முடிந்ததும். ஒரு பிரியைத் தம் கையில் இருந்த வாளால் அறுத்துக் கொண்டு வந்தார். 78 பாடல்கள் முடிந்து 78 பிரிகளும் அறுக்கப்பட்டன. இன்னும் இருப்பது 22 பிரிகள்தான். சந்தியா காலமும் வந்து மெல்ல மெல்ல மறைந்து இருள் கவியத் தொடங்கியது.

பட்டர் 79-வது பாடலைப் பாடத் தொடங்கினார்.



விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றும் வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்மோடு என்ன கூட்டினியே

என்று அபிராமி பட்டர் பாடி முடித்ததுதான் தாமதம், இணையற்ற தன் பக்தனை இனியும் சோதிக்க விரும்பாத அன்னை அபிராமி, தன் திருச்செவியினை அலங்கரித்த தாடங்கத்தைக் கழற்றி வானில் வீச, கோடி சந்திரன்கள் ஒருசேரத் தோன்றியதுபோல் வானில் முழு நிலவாகப் பிரகாசித்தது.

அபிராமி பட்டரை எச்சரித்து விட்டுச் சென்ற சரபோஜி மன்னர், கீழ்வானில் முழுநிலவு தோன்றிய அதிசயத்தைக் கண்ட உடனே வேக வேகமாக திருக்கடவூருக்கு வந்தார். அபிராமி பட்டரிடம், தன்னை மன்னித்து அருளுமாறு பிரார்த்தித்துக் கொண்டு, அவருக்கு ஏராளமான மானியங்களையும் வழங்கினார்.

இங்கேதான் நாம் அபிராமி அம்பிகையின் அருளாடல் நமக்கு உணர்த்தும் தத்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அபிராமி பட்டரின் பக்திக்கு இரங்கிய அம்பிகை, அவருக்காக அன்று அமாவாசை என்ற இயற்கை நியதியை மாற்ற திருவுள்ளம் கொண்டு, வானில் முழு நிலவை உதிக்கச் செய்யவில்லை. மாறாக, தன் அழகிய செவிக்கு அழகு சேர்த்த தாடங்கத்தைக் கழற்றி வானில் வீசி, அந்தத் தாடங்கத்தையே முழு நிலவாகப் பிரகாசிக்கச் செய்தாள். அபிராமி அம்பிகையின் இந்த அருளாடலில் ஓர் அறிவியல் உண்மையும் பொதிந்திருக்கிறது. அந்த உண்மை..?

அடுத்த இதழில்

'சிவோஹம்' சுவாமி விஜயானந்த சரஸ்வதி (யு.எஸ்.ஏ)

விநாயகர்



நம்முடைய சனாதன தர்மமாகிய இந்து தர்மத்தில் இறைவழிபாடு என்பது உருவ வழிபாடு, அருவ வழிபாடு, அருவுருவ வழிபாடு என்று மூன்று வகையான வழிபாட்டு முறைகள் சொல்லப் பட்டிருக்கின்றன. உருவ வழிபாட்டில் பல தெய்வ வடிவங்கள் உள்ளன. அவற்றுள் விநாயகரின் வடிவம் சற்று வித்தியாசமானது. யானை முகத்துடனும் தொந்தி வயிற்றுடனும் காட்சி அருள்பவர். மற்ற அனைத்து தெய்வங்களும் அழகிய திருமுகத்துடன் காட்சி தர, விநாயகர் மட்டும் ஏன் யானைமுகத்துடன் காட்சி தரவேண்டும்? இதற்குப் புராணங்களில் பல நிகழ்ச்சிகள் சொல்லப்பட்டுள்ளன.

விநாயகரின் யானை முகம் ஓம் எனும் பிரணவத்தின் வடிவம். அனைத்து மந்திரங்களும் ஓம்காரத்தை முதற்கொண்டே தொடங்குகின்றன. நிறைவும் பெறுகின்றன. அதேபோல் அனைத்து தெய்வங்களும் ஓம்கார வடிவினராய் விளங்கும் விநாயகருக்குள் ஐக்கியமாகி இருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் விநாயகப் பெருமானை, 'மூலமுழுமுதற் கடவுள்' என்று போற்றுகிறோம். விநாயகர் என்றாலே, 'தனக்கு மேலே வேறு ஒரு தலைவர் இல்லாதவர்' என்று பொருள்.

விநாயகரின் இரண்டு திருவடிகளும், 'பரஞானம்', அபரஞானம்' என்று அழைக்கப்படு கின்றன. அபரஞானம் என்பது, இந்த உலகத்தில் மனிதன் நல்வாழ்வு வாழ்வதற்குத் தேவையான அறிவாற் றலைக் குறிக்கிறது. பரஞானம் என்பது, ஆன்மிக வாழ்க்கையில் மனிதன் பெற வேண்டிய பூரண ஞானத்தைக் குறிக்கிறது. விநாயகரின் இரண்டு கால்களும், மனிதர்களின் கால்களைப் போன்றே அமைந்துள்ளன. இது அவர், மனிதர்களுக்குத் தலைவர் என்பதை உணர்த்துவதாகும். அதே போல் விநாயகரின் நான்கு கரங்களும், தேவர்களின்

தத்துவம்





கரங்கள் போல் காணப்படும். இது, தேவர்களுக்கும் அவரே தலைவர் என்பதை குறிப்பதாகும். விநாயகர், யானை முகம் கொண்டவர். இது அவர், விலங்குகளுக்கும் தலைவராக இருக்கிறார் என்பதை எடுத்துரைக்கின்றது.

விநாயகப் பெருமானின் பேழை வயிற்றில், ஸ்தூலமாகவும் (கண்ணுக்குத் தெரிவது), சூட்சுமமாகவும் (கண்ணுக்கு புலப்படாதது) உள்ள அண்டசராசரங்களும், அவற்றில் வாழும் உயிர்களும் அடங்கியிருக்கின்றன. இப்படி சகல புவனங்களையும் தன்னுடைய வயிற்றில் வைத்து பாதுகாத்து வருகிறார். அவரது பெருவயிறானது, எல்லையற்ற ஆனந்தம், எல்லையற்ற ஆற்றல், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தன்மை ஆகியவற்றுக்கு அடையாளமாக விளங்குகிறது.

விநாயகரின் நாபி (தொப்புள்) பிரம்மனின் சொரூபம், முகம் விஷ்ணுவின் சொரூபம், மூன்று கண்கள் சிவபெருமானின் சொரூபம். அதேபோல் அவரது உடலில் இட பாகம் சக்தியின் சொரூபமாகவும், வல பாகம் சூரியனின் அம்சமாகவும் விளங்குவதாக ஐதிகம். விநாயகரின் ஓம்கார ஒலி சாமவேதம் என்றும், நாக்கை சரஸ்வதி என்றும், மார்பை லட்சுமி என்றும், கைகளை கங்கை உள்ளிட்ட நதிகள் என்றும் கூறப்படுகிறது. பிரம்மன், விஷ்ணு, ருத்திரன், ஈஸ்வரன், சதாசிவம் ஆகிய ஐந்து வடிவங்களைக் கொண்டு விநாயகர் ஐந்து தொழில்களையும் இயற்றுகிறார் என்று ரிக் வேதத்தில் இடம் பெற்றிருக்கும் 'ப்ரஹ்மணஸ்பதி சூக்தம்' கூறுகிறது.

விநாயகருக்கு நான்கு கரங்களுடன், தும்பிக்கையையும் சேர்த்து ஐந்து கரங்கள் உண்டு. இதனால் அவர் 'ஐங்கரன்' என்று பெயர் பெற்றார். ஐந்து கரங்களும் ஐந்து தொழில்களைச் செய்கின்றன. அமிர்த கலசம் ஏந்திய கை உலகைப் படைத்தலையும் (சிருஷ்டி), மோதகம் தாங்கிய கை உலகை பாதுகாத்தலையும் (ஸ்திதி), அங்குசம் பற்றிய கை உலகை அழித்தலையும் (சம்ஹாரம்), பாசம் உள்ள கை ஆன்மாக்களை பக்குவப்படுத்தும் பொருட்டு மறைத்தலையும் (திரோதானம்), தந்தம் வைத்திருக்கும் கை அருளலையும் (அனுகிரகம்) குறிக்கிறது.

'பிடித்து வைத்தால் பிள்ளையார்' என்றபடி களிமண், சாணம், மஞ்சள் என்று எதையும் பிடித்து வைத்தால் பிள்ளையார் ஆகிவிடுவார். அந்த அளவுக்கு எளிமையான கடவுள். அவருக்கு பிரமாண்ட கோபுரங்களுடன் கூடிய ஆலயங்கள் தேவையில்லை; குளக்கரை அரசமரத்தின் அடியிலும், தெருமுனையிலும்கூட சிறிய மேடையில் அமர்ந்து அருள்புரிவார். எளிமையின் வடிவான விநாயகப் பெருமானை மிக எளிமையாக வழிபட்டே அவருடைய பேரருளைப் பெறலாம். ●

நேர்காணல்: சக்தி காமராஜ் | படங்கள்: ஸ்ரீனிவாசன்

‘சோர்வு ஏற்படும் போதெல்லாம் கிருஷ்ணர் கனவில் வந்து உற்சாகப்படுத்துவார்’

சங்கரலிங்கம்







ஆவணி மாதம் வந்துவிட்டாலே கோகுலாஷ்டமி, விநாயக சதுர்த்தி, நவராத்திரி என்று விழாக்கள் களைகட்டும். இந்த மூன்று விழாக்களிலும் பொம்மைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. குறிப்பாக நவராத்திரி வைபவத்துக்குதான் எத்தனை எத்தனை விதமான பொம்மைகள்! நம் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் காட்சி தரும் பொம்மைகளைச் செய்யும் கலைஞர்களின் தொழில் மற்றும் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று தெரிந்துகொள்ள கோவையில் இருந்து சுமார் 20 கி.மீ. தொலைவிலுள்ள மாதம்பட்டி என்ற கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக பொம்மைகள் தயாரிக்கும் குடும்பத்தைச் சேர்ந்த சங்கரலிங்கம் என்பவருடன் நம் நிருபர் நிகழ்த்திய நேர்காணல்...







● உங்கள் குடும்பத்தைப் பற்றி...

என் பெயர் சங்கரலிங்கம். மனைவி ரங்கநாயகி. எனக்கு இரண்டு பிள்ளைகள். ஒருவர் ஜெய்சூர்யா, எஞ்சினியரிங் பட்டதாரி. அடுத்தவர் ஜெய் ஹரீஸ். பிளஸ் டு படித்துள்ளார். எனக்கு சொந்த ஊர் சென்னைதான். ஆனால், நான் 36 வருடங்களுக்கு முன்பே மாதம்பட்டி வந்துவிட்டேன். இங்கே 'சங்கரலிங்கம் ஆர்ட்ஸ் அண்ட் கிராப்ட்' என்ற பெயரில் களிமண் பொம்மைகள் தயாரித்து வருகிறேன்.

● எத்தனை தலைமுறையாக இந்தத் தொழிலில் இருக்கிறீர்கள்?

எனது தகப்பனார் பெயர் முத்து சச்சிதானந்தம். அவருடைய தகப்பனார் முத்துசாமி பத்தர். நாங்கள் மூன்று தலைமுறையாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறோம். இக்களிமண் பொம்மைத் தயாரிப்புக் கலை எங்களோடு அழிந்துவிடக் கூடாது என்ற நோக்கத்தில், தற்போது நான்காவது தலைமுறையாக எனது இரு மகன்களும் இத்தொழிலுக்கு வந்திருக்கிறார்கள். பரம்பரை பரம்பரையாக களிமண் பொம்மைத் தொழிலில் எங்கள் குடும்பம் மிகுந்த ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் ஈடுபட்டு வருவது உண்மையிலேயே எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

● பொம்மைகள் செய்ய என்ன மூலப்பொருள்கள் தேவை? அவற்றை எங்கிருந்து பெறுகிறீர்கள்?

கிராமப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியின் ஒப்புதல் பெற்று, எங்கு களிமண் கிடைக்கிறதோ, அங்கு போய் களிமண் வெட்டியெடுத்து வருகிறோம். காகிதக் கூழ், லைம்ஸ்டோன் பவுடர், சார்க் பவுடர், மரவள்ளிக்கிழங்கு, இயற்கை மற்றும் செயற்கை வர்ணங்கள் முதலியவை பொம்மைகள் தயாரிக்கத் தேவைப்படுகின்றன. பொம்மைகளை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு மேலும் ஒரு சில இயந்திரங்களையும் பயன்படுத்தி வருகிறோம். காகிதக்கூழ் அரைப்பதற்கு, களிமண் பிசைவதற்கு, வர்ணங்கள் விரைவாகக் கொடுப்பதற்கு நாங்கள் இயந்திரங்களைப் பயன்படுத்தி வருகின்றோம்.

● பொம்மைகளுக்குத் தேவையான அச்சுகள் ஏற்கனவே தயாரித்து வைத்திருப்பீர்களா?

ஆமாம். மேற்கூறிய மூலப்பொருள்களுடன் மரவள்ளிக்கிழங்கு மாவைக் கலந்து நன்றாகப் பிசைந்து, உருட்டி உருவ அச்சில் வைத்து அழுத்தி, அதற்குமேல் காகிதப் பசையால் ஒட்டி காயவைக்க வேண்டும். அதன் பிறகு முன்அச்சு, பின்அச்சு இரண்டையும் ஒன்றாக இணைத்தால் முழுஉருவ பொம்மைகள் தயாராகிவிடுகிறது. பிறகு அந்த பொம்மைகளுக்குத் தேவையன வர்ணங்களைக் கொடுத்து காண்போர் கண்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் அழகாகச் செய்து விடுவோம்.

● யாராவது புகைப்படம் கொடுத்து இது மாதிரி ஓர் உருவ பொம்மை வேண்டுமென்று கேட்டால்..?

எந்தப் புகைப்படம் கொடுத்தாலும் சரி, முதலில் அந்தப் படத்திற்கான முக அளவுகள் எடுத்துக் கொண்டு களிமண்ணால் வடிவம் தயார் செய்துவிடுவோம். அதற்குப் பிறகுதான் அதனை அச்சாக வார்ப்பெடுப்போம். எந்த உருவமாக இருந்தாலும் கையால் செய்தால்தான், அது அச்சுக்குப் போகும்.

● பொம்மைகளுக்குத் தீட்ட என்ன மாதிரியான நிறங்களைப் பயன்படுத்துகிறீர்கள்?

மூன்றுவிதமான வர்ணங்களைப் பயன்படுத்தி வருகிறோம். வந்துகல் வைத்து இழைத்து நிறங்களை உருவாக்கி பொம்மைகளுக்குத் தீட்டுவது ஒரு வகை. ஹார்ட்வேர் கடைகளில் கிடைக்கும் கெமிக்கல் கலந்த வண்ணங்களைப்





பயன்படுத்துவது மற்றொரு வகை. மூன்றாவது ரசாயனக் கலப்பில்லாத, இயற்கையாகக் கிடைக்கும் 'கல்வக் கலர்' என்ற வர்ண முறையும் உள்ளது. இந்த முறையில் செடி மற்றும் அதன் இலைகளில் உள்ள வர்ணத்தை எடுத்து, அதை ஊறவைத்து பாடம் பண்ணி, பிறகு வர்ணங்களாகப் பிரித்து, கண்களைக் கவரும் வண்ணம் பொம்மைகளுக்கு வர்ணம் தீட்டுவோம். கல்வக் கலர் முறையில் ஏழு வர்ணங்களையும் கொண்டு வரலாம். வாடிக்கையாளர்கள் விரும்பும் வர்ணங்களையும் தீட்டிக் கொடுக்கிறோம். மரபுகள் மாறாத புராதனமாகக் கேட்பவர்களுக்கு, இயற்கையான வர்ணங்களைத் தீட்டி விற்பனை செய்கிறோம். இந்த வகையான பொம்மைகளின் விலை சற்றுக் கூடுதலாக இருந்தாலும், அதையும் விரும்பி வாங்கிச் செல்லும் வாடிக்கையாளர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

● பொம்மைகள் விற்பனைக்கான வாய்ப்பு, லாபம் எப்படி...?

பூம்புகார், சர்வோதய சங்கம், காதி கிராப்ட் மற்றும் விற்பனை இடைத்தரகர்கள் மூலமாக நாங்கள் தயாரிக்கின்ற பொம்மைகளை சந்தைப்படுத்தி வருகிறோம். மேற்கூறிய நிறுவனங்களைத் தவிர, கேரளா, ஆந்திரா, கர்நாடகம், மகாராஷ்டிரா, டெல்லி முதலிய மாநிலங்களிலும் எங்களுக்கு நிறைய விற்பனை முகவர்கள் இருக்கிறார்கள். அந்தந்த மாநில முகவர்கள் முதலில் நேரடியாகவே இங்கு வந்து தங்களுக்குத் தேவையான பொம்மைகள் ஆர்டர் கொடுத்து வருகிறார்கள். ஆனால், தற்போதுள்ள நவீன டிஜிட்டல் பண பரிவர்த்தனை மூலமாக ஆர்டர் தருகிறார்கள். அவர்கள் விரும்பும் அளவுகள், நிறங்கள் கொண்ட உருவ பொம்மைகள் அனைத்தும் அவர்களுக்கு லாரி டிரான்ஸ்போர்ட் மூலமாகப் பாதுகாப்பாக அனுப்பிவைக்கிறோம். இந்தத் தொழிலில் மனநிறைவுத் தரக்கூடிய வகையில் லாபம் கிடைக்கவே செய்கிறது.

● இந்தத் தொழிலில் வர்த்தகப் போட்டி உண்டா...?

போட்டியில்லாமலா... இந்தத் தொழிலிலும் போட்டி இருக்கத்தான் செய்கிறது. களிமண் பொம்மைகள் உற்பத்தி செய்வதில் போட்டிகள் மிகக் குறைவு. ஆனால், எல்லோரும் பொம்மைகளை வாங்கி விற்பனை செய்வதில்தான் அதிக அக்கறை காட்டுகிறார்களே தவிர, களிமண் பொம்மைகளைச் சொந்தமாக உற்பத்தி செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை என்றே நினைக்கிறேன். நாங்களே களிமண் பொம்மைகளை உற்பத்தி செய்து விற்பனையும் செய்வதால், விற்பனையாளர்கள் மத்தியில் வர்த்தகப் போட்டி சற்று அதிகரித்துள்ளது.

● தனித்தனி பொம்மைகள் தவிர, ராமாயணம், தசாவதாரம், அஷ்டலட்சுமி, கிரிக்கெட், விவசாயம், திருமணம் முதலிய செட் பொம்மைகளையும் செய்கிறீர்களா?

எல்லா வகையான செட் பொம்மைகளும் தயாரிக்கிறோம். கல்யாண செட், கல்யாண ஊர்வலம் செட், வளைகாப்பு செட், மஞ்சள் நீராட்டு விழா செட், கபடி செட், டென்னிஸ் விளையாட்டு செட், கால்பந்து விளையாட்டு செட், ஹாக்கி செட் இதுவல்லாமல், தற்போது குறுகிய காலத்தில் மக்கள் மத்தியில் அதிகமாக தொலைக்காட்சியில் விளம்பரப்படுத்தப்படும் அனைத்தையும் நாங்கள் பொம்மைகளாகத் தயாரித்து சந்தைக்கு அனுப்பிவிடுவோம்.

சொன்னால் ஆச்சர்யப்படுவீர்கள். இப்போதுதான் நான்கு கொரோனா பொம்மைகள் செய்து கொடுத்திருக்கிறோம். ஆனால், இந்தக் கொரோனா பொம்மை யாருக்கும் எவ்விதத் தொற்றும் ஏற்படுத்தாது. இதற்கு மருந்து, மாத்திரை, மாஸ்க் எதுவும் தேவைப்படாது. (இதைச் சொல்லும் போது நகைச்சுவை மேலிட

லேசாக சிரித்துக்கொண்டார்) தசரா, விநாயகர் சதுர்த்தி முதலிய பண்டிகைக் காலங்களில் அதிகமாக தயாரிக்கும் பொம்மைகள் எல்லாம் நேரடியாகவே விற்பனை செய்து வருகிறோம். கேரளாவில் சித்திரைக்கனி விழாக் கொண்டாட்டத்தின் போது, கிருஷ்ணர் பொம்மை இல்லாத வீடே இருக்காது. நம்முடைய தமிழ்நாட்டில் கிருஷ்ண ஜயந்தி முதலில் வரும். கிருஷ்ணர் தவழ்வதிலிருந்து திருக்கல்யாணம் வரை அனைத்து பொம்மைகளையும் வைத்திருக்கிறோம். அடுத்தது விநாயகர் சதுர்த்தி. முக்கியமாக பாரம்பர்ய முறையில் சுத்தமான களிமண் கொண்டு வந்து அதைப் பாடம்செய்து அதில் எந்த நச்சுப் பொருளும் சேர்க்காமல், விநாயகர் பொம்மைகள் தயாரித்துக் கொடுக்கிறோம்.

● என்ன மாதிரியான பொம்மைகளை மக்கள் விரும்பி வாங்கிச் செல்கிறார்கள்

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான வாடிக்கையாளர்கள் விநாயகர், முருகன், சக்தி மாரியம்மன், தேசத் தலைவர்கள், மதகுருமார்களான ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் மற்றும் பறவை





இனங்கள், விலங்கினங்கள் முதலிய உருவ பொம்மைகளை விரும்பி வாங்கிச் செல்கிறார்கள். வடஇந்திய மக்கள் விநாயகர், கிருஷ்ணர், லட்சுமி, சரஸ்வதி, துர்கை, காளி போன்ற உருவ பொம்மைகள் அதிகமாக வாங்குகிறார்கள். கேரளாவில் கிருஷ்ணர், முருகன் களிமண் பொம்மைகளை வாங்குகிறார்கள். இதேபோல ஆந்திராவில் திருப்பதி வேங்கடாசலபதி, பத்மாவதி தாயார், முருகன், விநாயகர் பொம்மைகளை வாங்கி மகிழ்ச்சியடைகிறார்கள். தலையாட்டும் தஞ்சாவூர் பொம்மைகளை தமிழ்நாடு மட்டுமல்லாமல், மற்ற அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்புகிறோம், ஏன் அண்டை நாடுகளுக்கும்கூட அனுப்பி வைக்கிறோம். தஞ்சாவூர் பொம்மை மற்ற பொம்மைகளுக்கெல்லாம் முன்னோடி என்றால் அது மிகையல்ல.

● இந்தத் தொழில் தொடங்க எவ்வளவு முதலீடு தேவைப்படும்?

சிறிய அளவில் இந்தத் தொழிலை கைத்தொழிலாகச் செய்ய விரும்புபவர்களுக்கு ரூ. 1 லட்சம் முதல் 2 லட்சம் வரை தேவைப்படும். இதையே கொஞ்சம் பெரிய அளவில் இயந்திரங்களின் துணை கொண்டு செய்ய விரும்புபவர்களுக்கு குறைந்தது ரூ. 5 லட்சம் முதல் ரூ. 25 லட்சம் வரை செலவாகும்.

● களிமண் பொம்மை கலையைக் கற்க விரும்புகிறவர்களுக்குப் பயிற்சி கொடுப்பீர்களா?

நிச்சயமாகக் கொடுத்து வருகிறோம். கிராம விடியல், கை கொடுக்கும் கை, இலங்கையிலிருந்து வந்த நமது சகோதர, சகோதரிகளுக்கும் நாங்கள் பயிற்சி அளித்திருக்கிறோம். தற்போது அவர்கள் சுயமாகவே தொழில் செய்து லாபமும் ஈட்டி வருகிறார்கள். இன்னும் சிலர் உற்பத்தி செய்த பொம்மைகளை எங்களிடம் கொடுத்து அதற்குண்டான வருவாயைப் பெற்று சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறார்கள். பயிற்சி பெற விரும்பும் இளைஞர்கள், இல்லத்தரசிகள், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் எங்களை அணுகினால் அவர்களுக்கு இரண்டு வருட காலப் பயிற்சிக் கொடுத்து, திறம்பட தொழில் தொடங்க ஆலோசனையும் வழங்கத் தயாராகவே உள்ளோம்.

எங்கள் நிறுவனத்தில் தற்போது சுமார் 30 பேர் வேலை செய்கிறார்கள். இங்கு ஒருசிலர் பயிற்சியோடு வேலை செய்து வருகிறார்கள். இப்போது கொரோனா காலக்கட்டமாக இருப்பதால், வீட்டிலிருந்தே பொம்மைகளைத் தயார் செய்து எங்களிடம் கொடுத்து அதற்கான ஊதியத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

● பொம்மைகளுக்கான விலை நிர்ணயம் எப்படிச் செய்கிறீர்கள்?

காலச்சூழலுக்கு ஏற்பவும், மூலப்பொருள்களின் விலையைப் பெறுத்தும் நாங்கள் விலை நிர்ணயம்

செய்கிறோம். நாங்கள் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு 1 1/2 அடி விநாயர் பொம்மை 50 பைசாவுக்கு விற்பனை செய்தோம். தற்போது அதேஅளவு பொம்மை 300 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். சந்தையில் சற்றுக் கூடுதலான விலை வைத்து விற்பனை செய்கிறார்கள்.

● நவராத்திரி கொலுவில் வைக்கப்படும் பொம்மைகளை எப்படிப் பராமரிப்பது?

ஒவ்வொரு பொம்மையையும் தனித்தனியாக வெள்ளைக் காகிதத்தில் சுற்றி, அதன்பிறகு பிளாஸ்டிக் கவர் அதன்மேல் சுற்றி, அதற்கும் மேல் பபுள்ரேப் எனும் பாலிதீனைச் சுற்றி, ஒரு பெட்டியில் முறையாக அடுக்கி, காற்றுப் புகாத வண்ணம் சுற்றி பாதுகாத்து வந்தால், குறைந்தது 15 வருடமாவது வர்ணங்கள் மங்காமல் அப்படியே புதுப்பொலிவுடன் பொம்மைகள் இருக்கும். எல்லா பொம்மைகளையும் ஒன்றாக வைத்துத் துண்டுக் காகிதம், வைக்கோல் முதலியவற்றைப் பயன்படுத்தி வெறுமனே சுற்றி வைத்தால், அதிகப் பணத்தைச் செலவழித்து வாங்கிய பொம்மைகள் வர்ணங்கள் மங்கி, பொலிவு இழந்து வீணாகிப் போய்விடும்.

● நிறங்கள் மங்கி பொலிவிழந்த பழைய பொம்மைகளைப் புதுப்பித்துத் தருவீர்களா...?

எத்தனை ஆண்டுக் காலப் பழைமையான சிதில மடைந்த பொம்மைகளாக இருந்தாலும், அதன் மரபு கொஞ்சமும் மாறாமல் அழகான புது பொம்மைகளாக மாற்றி குறித்தக் காலத்தில் தருகிறோம்.

● களிமண் பொம்மைகள் எல்லாமே இந்துமதம் சார்ந்த விநாயகர், முருகர், தேசத் தலைவர்கள், மகரிஷிகள், குருமார்கள் முதலிய பொம்மைகளாகவே இருக்கிறதே? மாற்று மதத்தினருக்கும் நீங்கள் பொம்மைகள் செய்து கொடுத்திருக்கிறீர்களா?

இஸ்லாமியிர்களின் புனிதத் தலமான மெக்கா, மதினா பள்ளிவாசல் உருவ பொம்மைகள் செய்து கொடுத்திருக்கிறோம். இஸ்லாம் மார்க்கத்தில் உருவ வழிபாடு முறை இல்லை. ஆனாலும் ஒருசில இஸ்லாமியர்கள் இத்தகைய பொம்மைகளை விரும்பி வாங்கித் தங்கள் வீட்டில் வைத்துக் கொள்கிறார்கள்.

கிறிஸ்துமஸ் விழாவின்போது அதிக அளவில் குடில் செட் ஆர்டர் கிடைக்கிறது. கிறிஸ்துமஸ் தாத்தா பொம்மைகளை ஒரு சில வியாபாரிகள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்து இங்கு விற்பனை செய்கிறார்கள்.

● இந்தத் தொழிலில் உங்களுக்கு வருடம் முழுவதும் ஆர்டர் கிடைக்கிறதா?

கொரோனா காலத்திற்கு முன்பாகவே நாங்கள் மூன்று வருடங்களுக்கான ஆர்டர்களைப் பெற்றுள் ளோம். மலேசியா, சிங்கப்பூர், கனடா முதலிய





வெளிநாடுகளுக்கும் இங்கிருந்து பொம்மைகள் ஏற்றுமதி செய்கிறோம்.

● வெளிநாட்டினர் எந்த வகையான பொம்மைகளை விரும்புகிறார்கள்?

நம் இந்து மக்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் குபேரன், டான்சிங் டால், தஞ்சாவூர் பொம்மை, செட்டியார் பாட்டி, பசு, காமதேனு இந்த மாதிரி பொம்மைகளை விரும்புகிறார்கள். அதேபோல நவராத்திரி கொலு வைக்கிற வழிபாடும் எல்லா நாட்டிலேயும் இருப்பதால், அங்கேயும் இந்த வகை பொம்மைகள் அனுப்பி வைக்கிறோம். நிறைவாக, 'களிமண் கொண்டு பொம்மைகள் தயாரிக்கும் குடிசைத்தொழில் அடுத்தடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு நேர்காணல் நிகழ்த்திய 'ஓம்சக்தி' இதழுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்றார். சங்கரலிங்கம் மற்றும் அங்கு இந்தக் கலைப்பணியை அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்து வரும் மற்ற கலைஞர்களுக்கும் ஓம்சக்தி சார்பில் வாழ்த்து தெரிவித்து விடைபெற்றோம். ●

சிறுகதை

ஓவியம்: **பிரபா**



"கமலம்! அந்தக் கூஜாவிலே தண்ணீர் எடுத்தா! வெற்றிலைச் செல்லம் எங்கே? வச்சது வச்ச இடத்தில் இருந்தால்தானே?" என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

கையில் இருக்கும் கோரைப் பாயை விரிப்பதே ஒரு ஜாலவித்தை. நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்ஷன் கொடுக்கப் படாததால் அது நடு மத்தியில் இரண்டாகக் கிழிந்து ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக் கொண்டிருந்தது. அதை விரிப்பது என்றால் முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டு, கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருத்தி வைக்கவேண்டும். அதுதான் பூர்வாங்க வேலை. பின்பு, விடுதலை பெற முயற்சிக்கும் அதன் கோரைக் கீற்றுகள் முதுகில் குத்தாமல்



புதுமைப்பித்தன்

ஒருநாள் கழிந்தது

ஓர் எழுத்தாளரின் அன்றைய வாழ்க்கையைச்
சித்திரிக்கும் புதுமைப்பித்தனின் சிறுகதை

இருக்க ஒரு துண்டையோ அல்லது மனைவியின் புடைவையையோ அல்லது குழந்தையின் பாவாடையையோ எதையாவது எடுத்து மேலே விரிக்க வேண்டும்.

முருகதாசரைப் பொறுத்தவரை (அது அவரது புனைப் பெயர்) அது இரண்டு பேர் செய்ய வேண்டிய காரியம்.

மறுபடியும், "கமலா!" என்று கூப்பிட்டார்.

சமையல் + உக்ராண + ஸ்நான அறை மூன்று நான்கு கட்டுகள் தாண்டி, துண்டாக, அலாதியாக இருப்பதால் இவருடைய பாய் விரிப்புக் கஷ்டங்கள் அந்த அம்மையாருக்கு எட்டவில்லை.

சென்னையில் 'ஒட்டுக் குடித்தனம்' என்பது ஒரு ரசமான விஷயம். வீட்டுச் சொந்தக்காரன்,

இடைவழியில், குழாயடியில் உள்ள வழுக்குப் பிரதேசம். அடுத்த பகுதிக்காரர் விறகுக் கொட்டில் முதலிய விபத்துக்கள் உள்ள 'பிராட்வே' யை எல்லாம் பொருட்படுத்தாது, ஒருவாறு வந்து சேர்ந்தார். சமையல் அறை வாசலில் ஒரே புகைமயம் "கமலம்!" என்று கம்மிய குரலில் கூப்பிட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தார்.

உள்ளே புகைத் திரைக்கு அப்பாலிருந்து, "வீடோ லட்சணமோ! விறகைத்தான் பார்த்துப் பார்த்து வாங்கிக் கொண்டு வந்தியளே! ஒங்களுக்குண்ணு தண்ணீலே முக்கிக் கொடுத்தானா? எரியவே மாட்டுதில்லை? இங்கே என்ன இப்போ? விறகு வாங்கின சீரைப் பாத்து மகிழ வந்திட்டியளாக்கும்?" என்று வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

உள்ளே வீட்டின் பாக வசதிதான் விசித்திரமாக இருந்தது. முன்பக்கம், ஒற்றைச் சன்னல் படைத்த ஒரு சிற்றறை. அதற்கப்புறம் எங்கோ பல கட்டுகள் தாண்டி மற்றொரு அறை. அதுதான் சமையல் வகையறாவுக்கு. முதல் அறை படிக்க, படுக்க, நாலு பேர் வந்தால் பேச இவை எல்லாவற்றிற்கும் பொது இடம்.

குடியிருக்க வருகிறவர்கள் எல்லாரும் 'திருக்கழுக் குன்றத்துக் கழுகு' என்று நினைத்துக் கொள்ளுவானோ என்னமோ!

'குடித்தனக்காரர் குடியிருக்க இரண்டு ரூம் காலி' என்று வெளியில் போட்டிருந்த போர்டை நம்பித்தான் முருகதாசர் வீடு வேட்டையின் போது அங்கே நுழைந்தார்.

உள்ளே வீட்டின் பாக வசதிதான் விசித்திரமாக இருந்தது. முன்பக்கம், ஒற்றைச் சன்னல் படைத்த ஒரு சிற்றறை. அதற்கப்புறம் எங்கோ பல கட்டுகள் தாண்டி மற்றொரு அறை. அதுதான் சமையல் வகையறாவுக்கு. முதல் அறை படிக்க, படுக்க, நாலு பேர் வந்தால் பேச இவை எல்லாவற்றிற்கும் பொது இடம். முதலில், முருகதாசர் பொருளாதாரச் சலுகையை உத்தேசித்தே அதில் குடியிருக்கலாம் என்று துணிந்தார். அதனால், தமக்கும் தம் சகதர்மிணிக்கும் இப்படி நிரந்தரமான 'பிளவு' இருக்கும் என்று சிறிதும் எட்டி யோசிக்கவில்லை; மேலும் அவர் யோசிக்கக் கூடியவரும் அல்லர்.

பக்கத்தில் இருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு அவர் சமையல் பகுதியை நோக்கிப் பிரயாணமானார்.

"தீப்பெட்டியை இப்படி எடு! அதுக்காகத்தான் வந்தேன்!" என்று நடைப் பக்கமாகப் பின் நோக்கி நடந்தார்.

"இங்கே குச்சியுமில்லை, கிச்சியுமில்லை! அலமுவெ தீப்பெட்டி வாங்க அனுப்பிச்சேன். மண்ணெண்ணெய் விளக்கே நீங்கதான் துடைச்சிக் கொள்ளணும்!" என்றாள் கமலம்.

"குழந்தையை அந்தியிலே வெளியிலே அனுப்பிச்சையே, நான் வந்த பிறகு வாங்கிக் கொள்ளப் படாதா?" என்று அதட்டினார் முருகதாசர்.

"ஆமாம், சொல்ல மறந்தே போயிட்டுதே... செட்டியார் வந்து விட்டுப் போனார், நாளை விடியன்னை வருவாராம்!" என்றாள் கமலா.

முருகதாசர் இந்தப் பாசுபதாஸ்திரத்தை எதிர்பார்க்கவில்லை.

"வந்தா, வெறுங்கையை வீசிக்கிட்டுப் போக வேண்டியதுதான்! வர்றத்துக்கு நேரம் காலம் இல்லை?" என்று முணுமுணுத்துக் கொண்டே வெளியேற முயற்சித்தார்.

"அங்கே, எங்கே போயிட்டிக, ஒங்களைத்தானே! கொஞ்சம் நல்லெண்ணை வாங்கிட்டு வாருங்

களேன்!"

"எங்கிட்ட இப்போ துட்டுமில்லே, காசுமில்லே!" என்று திரும்பி நின்று பதிலளித்தார் முருகதாசர்.

"அதுவும் அப்படியா! இன்னா, இந்த மிளவொட்டியிலே(*மிளகுப் பெட்டி – ஐந்தரைப் பெட்டி) மூணு துட்டு (*ஓர் அணா; ஒரு துட்டு – நான்கு பாண்டி நாட்டு தம்பிடி) இருக்கு. அதெ எடுத்துகிட்டுப் போங்க!"

"வந்ததுக்கு ஒரு வேலையா? அங்கே ஒரு பாடு எழுதித் தொலைக்கணும். இங்கே உனக்கு இப்பத் தான் எண்ணெ புண்ணாக்கு – பகலெல்லாம் என்ன செய்துகிட்டு இருந்தே? இருட்ன பொறவா எண்ணை வாங்குறது! எல்லாம் நாளைக்குப் பார்த்துக்கலாம்!"

"சோம்பல் வந்தா சாத்திரமும் வரும். எல்லாம் வரும். ஏன் அன்னைக்குப் போய் வாங்கிட்டு வரலியா? எல்லாம் உங்களுக்குத்தான். இப்பத்தான் அப்பளக்காரன் வந்து கொடுத்துட்டுப் போனான்; பிரியமா சாப்பிடுவேளென்னு சொன்னேன். பின்னே அந்தச் சின்னக் கொரங்கே என்ன இன்னும் காணலே! போனா போனதுதான்; நீங்கதான் சித்த பாருங்களேன்!"

இவ்வளவிற்கும் அவர் இருந்தால்தானே! விறகுப் பிரதேசத்தைத் தாண்டி வழுக்குப் பிரதேசத்தை எட்டிவிட்டார். புகையையும் பேச்சையும் தப்பி வந்தால் போதும் என்றாகி விட்டது. முருகதாசரின் ஆஸ்தான அறையின் ஒரு விசித்திரம் என்னவென்றால் சென்னையில் 'லைட்டிங் டைம்' அட்டவணையைக் கூட மதிக்காமல் அது இருண்டுவிடும்.

இம்மாதிரி மண்ணெண்ணெய் நெருக்கடி ஏற்படாத காலங்களில் அந்த அறைக்குத்தான் முதலில் ராத்திரி. ஆனால் எண்ணெய் நெருக்கடிக் காலங்களில் சிவபெருமானின் ஒற்றைக் கண் போன்ற அந்த அறையின் சன்னல், எதிர்ப்பக்கம் நிற்கும் மின்சார விளக்குக் கம்பத்திலிருந்து கொஞ்சம் வெளிச்சத்தைப் பிச்சை வாங்கும். கார்ப்பொரேஷன் தயவு வரும் வரை, ஸ்ரீமுருகதாசர் வேறு வழியில்லாமல் தெரு நடையில் நின்று அலமுவின் வருகையை எதிர்நோக்கியிருக்க வேண்டியதாயிற்று.

முருகதாசர் வானத்தை அளக்கும் கதைகளைக் கட்டுவதில் மிகவும் சமர்த்தர்; 'சாகாவரம் பெற்ற' கதைகளும் எழுதுவார். அந்தத் திறமையை உத்தேசித்து, ஒரு விளம்பரக் கம்பெனி மாதம் முப்பது ரூபாய்க்கு வானத்தையளக்கும் அவரது கற்பனைத் திறமையைக் குத்தகை எடுத்துக் கொண்டது. அதனால் அவர் வீர புருஷர்களையும், அழியாத சித்திரங்களையும் எழுத்தோவியமாகத் தீட்டுவதை விட்டு விட்டு, சோயாபீன் முதல் மெழுகுவர்த்தி வரையிலும் வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் பண்டங்களின் காவியங்களை இயற்றிக் கொண்டிருக்கிறார். 'டபாஸா' வீரிய மாத்திரையின் மீது பாடிய பரணியும், தேயிலைப் பானத்தின் சுயசரிதையும், அந்தத் தமிழ் தெரியாத வெள்ளைக்காரனையும் இவர்மீது அனுதாபம் காட்டும்படி செய்துவிட்டன. அதற்காகத்தான் அந்த முப்பது ரூபாய்!



வீட்டு எதிரில் நிற்கும் மின்சார விளக்கின் உதவியைக் கொண்டும் பிள்ளையவர்களால் அலமுவைக் கண்டுபிடிக்க இயலவில்லை. வெற்றிலை, வேலை, குழந்தை வராத காரணம். எல்லாம் அவரது மனத்தில் கவலையைக் கொண்டு கொட்டின. நடையிலிருந்து கீழே இறங்கிச் சந்தின் மூலை வரை சென்று பார்த்து வரலாமா என்று புறப்பட்டார்.

பக்தி மார்க்கத்தில் ஏகாக்கிரக சிந்தையைப் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கிறார்கள். மனம் ஒரே விஷயத்தில் லயித்துவிட்டால் போதுமாம். பிள்ளையவர்களைப் பொறுத்தவரை அவர் இந்தப் 'பணம்' என்ற மூன்றெழுத்து மந்திரத்தில் தீவிர

சிந்தை செலுத்துபவர். பணத்தை வாரிச் சேர்த்து குபேரனாகி விட வேண்டும் என்ற எண்ணம் ஒன்றுமில்லை. கவலையில்லாமல் ஏதோ சாப்பிட்டோம், வேலை பார்த்தோம் வந்தோம் என்று இருக்கவேண்டும் என்பதற்காக எத்தனையோ வித்தைகளையெல்லாம் செய்துவிட்டார். அவருடைய குடும்பத்தின் வரவு செலவு திட்டத்தை மட்டிலும் அவரால் எப்பொழுதும் சமன் செய்ய முடியவில்லை. நிதி மந்திரியாக இருந்தால் பட்ஜெட்டில் துண்டுவிழுவதற்குப் பொருளாதாரக் காரணங்கள் காட்டிவிட்டு, உபமான்யங்களைத் தைரியமாகக் கேட்கலாம். கவலையில்லாமல், கொஞ்சமும் உடம்பில் பிடிக்காமல் கடன் கேட்டுப் புறப்படுவதற்கு முடியுமா? குடும்பச் செலவு என்றால், சர்க்கார் செலவாகுமா?

கவலை இருக்கப்படாது என்ற உறுதியின் பேரில்தான் நம்பிக்கை என்ற லட்சியத்தை மட்டும் திருப்தி செய்விக்க, 'சாகாவரம் பெற்ற' கதைகளை எழுதுவதைக் கொஞ்சம் கட்டி வைத்துவிட்டு, இந்த லிப்டன் தேயிலை, காப்பி, கொக்கோ ஆகியவற்றின் மான்மியங்களை அவர் எழுத ஆரம்பித்தார். ஒரு பெரிய நாவல் மட்டிலும் எழுதிவிட்டால் அது ஒரு பொன் காய்க்கும் மரமாகிவிடும் என்று அவர் நெஞ்சழுத்தத்துடன் நினைத்த காலங்களும் உண்டு. இப்பொழுது அது ஒரு நெடுந்தூர லட்சியமாகவே மாறிவிட்டது.

முன்பாவது, அதாவது நம்பிக்கைக் காலத்தில், ஏதோ நினைத்ததைக் கிறுக்கி வைக்கக் காகிதப் பஞ்சமாவது இல்லாமல் இருந்தது. அப்பொழுது ஒரு பத்திரிகை ஆபீஸில் வேலை. ஆனால், இப்பொழுது காசு கொடுத்து வாங்காவிட்டால் முதுகில்தான் எழுதிக் கொள்ள வேண்டும். முருகதாசர் நல்ல புத்திசாலி. அதனால்தான் முதுகில் எழுதிக் கொள்ளவில்லை. யாராவது ஒரு நண்பரைக் கண்டுவிட்டால் போதும், தமது தூர லட்சியத்தைப் பற்றி அவரிடம் ஐந்து நிமிஷமாவது பேசாமல் அவரை விடமாட்டார். நண்பர்கள் எஸ். பி.ஸி.ஏ (ஜீவஹிம்சை நிவாரண சங்கம்) யின் அங்கத்தினர்களோ என்னவோ, அத்தனையும் சகித்துக் கொண்டிருப்பார்கள்.

சந்தில் திரும்பிப் பார்த்தால் அலமுவின் ராஜ்யம் நடந்து கொண்டிருந்தது.

"ஏட்டி என்ன! நீயோ, உன் லட்சணமோ?" என்று ஆரம்பித்தார் முருகதாசர்.

ஒரு ரிக்ஷா வண்டி ஏர்க்கால் பக்கத்தில் வண்டிக்காரன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அலமு, ஒரு சுண்டெலி மாதிரி ஜம்மென்று மெத்தையில் உட்கார்ந்திருக்கிறாள். ரிக்ஷாக்காரனுடன் ஏதோ நீண்ட சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது போலும்!

"ஏட்டி!" என்றார் முருகதாசர் மறுபடியும்.

"இல்லையப்பா? நீ இனிமே என்னை அலமுன்னு கூப்பிடுவேன்னியே!" என்று சொல்லிக் கொண்டே வண்டியிலிருந்து இறங்கப் பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள்.

"தீப்பெட்டி எங்கடீ?" என்றார் முருகதாசர்.

"கடைக்காரன் குடுக்கமாட்டேங்கறான். அப்பா!"

"குடுக்காதெ போனா நேரே வீட்டுக்கு வாரது! இங்கே என்ன இருப்பு?"

"அப்படிக் கேளுங்க சாமி! நம்ம கொளந்தென்னு மெரட்டாமே சொல்லிப் பாத்தேனுங்க. வீட்டுக்கு வண்டியிலே கொண்டாந்து வுடணுமுண்ணு மொண்டி பண்ணுதுங்க. எனக்குக் காலுலே சுளுக்கு. அந்தச் சின்னாம்பயலே காணும்..." என்று நீட்டிக் கொண்டே போனான் ரிக்ஷாக்காரன்.

"அப்பா, அவன் பங்கஜத்தே மாத்ரம் கூட்டிக்கிட்டே போறானே!" என்றாள் அலமு. பங்கஜம் எதிர்வீட்டு சப்ரிஜிஸ்திரார் குழந்தை. அது ரிக்ஷாவிலும் போகும், மோட்டாரிலும் போகும்! அந்த விஷயம் ரிக்ஷாவுக்குத்தான் புரியுமா, குழந்தைக்குத்தான் புரியுமா?

"அலமு! ராத்திரிலே கொழந்தைகள் ரிக்ஷாவிலே போகப்படாதுடீ! எறங்கி வா!" என்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு வாடிக்கைக் கடைக்காரனிடம் சென்றார் முருகதாசர்.

பிள்ளையவர்கள் கடையை எட்டு முன்பே கடைக்காரன், "சாமி! இந்த மாதிரியிருந்தா கட்டுமா? போன மாசத்திலே தீர்க்கலியே! நானும் சொல்லிச் சொல்லிப் பார்த்தாச்சு. பாக்கியை முடிச்சு, கணக்கெத் தீர்த்துடுங்க! எனக்குக் குடுத்துக் கட்டாது. நான் பொளைக்க வந்தவன்!" என்றான்.

"நானும் பிழைக்க வந்தவன்தான். எல்லாரும் சாகவா வருகிறார்கள்! மின்னே பின்னேதான் இருக்கும். நான் என்ன கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகிறேனா?"

"போங்க சாமி! அது ஒண்ணுதான் பாக்கி! ரூ.2.5.4 ஆச்சு. எப்ப வரும்?"

"தீப்பெட்டியெக் குடு, சொல்றேன்!"

"பெட்டிக்கென்ன பிரமாதம்! இந்தாருங்க, எப்ப வரும்?"

"எப்பவா? சம்பளம் நாளைக்குப் போட்ருவாங்கன்னு நினைக்கிறேன்; நாளை இல்லாவிட்டால் திங்கள்கிழமை."

"திங்கள்கிழமை நிச்சயந்தானே? நான் சீட்டுக் கட்டணும்!" என்றான்.

"சரி, பார்க்கிறேன்!" என்று திரும்பினார் தாசர்.

"பார்க்கிறேன்னு சொல்ல வேண்டாம். நிச்சயமாக வேண்டும்!"

ஒரு கவலை தீர்ந்தது... அதாவது திங்கள்கிழமை வரை.

பாதி வழியில் போகையில், "அப்பா!" என்றது குழந்தை.

அவர் எதையோ நினைத்துக் கொண்டிருந்ததால், தன்னையறியாமல் கொஞ்சம் கடினமாக, "என்னடி!" என்றார்.

"நீதான் கோவிச்சுக்கிறியே, அப்பா! நான் சொல்லமாட்டேன். போ!"

"கோவம் என்னடி, கோவம்! சும்மா சொல்லு!"

"அதோ பார். பல்லு மாமா!"

முருகதாசரின் நண்பர் சுப்பிரமணிய பிள்ளைக்குக் கொஞ்சம் உயர்ந்த பற்கள். அவை வெளியே நீண்டு கொண்டு, தமது இருப்பை, அனாவசியமாக உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தன. அதனால் அலமு அவருக்கு இட்ட காரண இடுகுறிப் பெயர் அது.

"எங்கடி!"

"அதோ பார், வீட்டு நடேலே! என்னை எறக்கிவிடப்பா!" என்று அவரது கையிலிருந்து வழுக்கி விடுவித்துக் கொண்டு, வீட்டிற்கு ஓட ஆரம்பித்தது.

"மெதுவா! மெதுவா!" என்றார் பிள்ளை; குழந்தையா கேட்கும்?

"மாட்டேன்!" என்றது. அதற்கப்புறம் ஏக களேபரம். பாவாடை தடுக்கிற்றோ என்னமோ? அலமு வலுக்கட்டாயமாக அங்கப் பிரதக்ஷிணம் செய்ய ஆரம்பித்தாள். பிள்ளையவர்கள் ஓடிப் போய்க் குழந்தையை வாரி எடுத்தார். ஆனால் இவர் பதட்டத்திற்கு ஏற்ப அங்கு குழந்தைக்கு ஒன்றும் ஏற்படவில்லை.

"தோளுக்கு மேலே தொண்ணூறு, தொடச்சுப் பார்த்தா ஒண்ணுமில்லே!" என்று பாடிக் கொண்டு குழந்தை எழுந்தது.

"என்ன ஸார், குழந்தையை நீங்க இப்படி விடலாமா?" என்று சொல்லிக்கொண்டே சுப்பிரமணியம் அவர்கள் பக்கம் வந்தார்.

"என்ன ஸார் செய்யட்டும்! என்ன சொன்னாலும் கேட்கிறதில்லை என்ற உறுதி மனசிலே ஏறிப்போயிருக்கு. வெளிலே புறப்பட்டாச்சா, அப்புறம் தேடிக்கொண்டு பின்னோட பத்துப் பேர். இவளைக் கடைக்கனுப்பிச்சுட்டா தாயார். இவ்வளவு நேரம் அந்த ரிக்ஷாக்காரனோடு தர்க்கம் - என்ன செய்கிறது! வாருங்கள் ஸார். உள்ளே! ஒன் மினிட்! விளக்கை ஏத்துகிறேன்."

குழந்தை அலமு அதற்குள் வீட்டிற்குள், "பல்லு மாமா வந்துட்டார்!" என்று பொதுவாக உச்ச ஸ்தாயியில் விளம்பரம் செய்து கொண்டு ஓடிவிட்டாள்.

"குழந்தை துறுதுறுவென்று வருகிறதே! பள்ளிக்கூடத்திற்காவது அனுப்பக் கூடாதா?" என்றார் நண்பர்.

"ஆமாம் ஸார். தொந்திரவு சகிக்கலே. அங்கேதான் கொண்டு தள்ளணும். வயசு கொஞ்சம் ஆகட்டுமே என்று பார்க்கிறேன்" என்றார் முருகதாசர். விளக்குத் திரியை உயர்த்திக் கொண்டே.

"நேத்து பீச்சுக்குப் போயிருந்தேன்! சுந்தரத்தைப் பார்த்தேன்..." என்று ஆரம்பித்தார் சுப்பிரமணிய பிள்ளை.

"அந்த ராஸ்கல் வந்துட்டானா! என்றைக்கும் அவன் தொல்லைதான் பெரிய தொல்லையாக இருக்கிறது. இங்கே வந்தான்னா ஆபீஸுக்கு வந்து யாருக்காவது வத்தி வச்சுட்டுப் போயிடறது... மின்னே வந்தப்போ, என்ன எழவு சொன்னானோ, அந்த ஆர்ட்டிஸ்ட் 'பதி' இருந்தானே அவனுக்குச் சீட்டுக் கொடுக்க வழி பண்ணிட்டான்..." என்று படபடவென்று பேசிக்கொண்டே போனார் முருகதாசர்.

"அப்படிப் பாத்தா உலகத்திலே யார்தான் ஸார் நல்லவன்! அவன் உங்களைப் பத்தி ரொம்ப பிரமாதமாக அல்லவா கண்ட இடத்திலெல்லாம் புகழ்ந்து கொண்டிருக்கிறான்?"

"சவத்தெ தள்ளுங்க, ஸார்! பேன் பார்த்தாலும் பார்க்கும். காதை அறுத்தாலும் அறுக்கும். அவன் சங்காத்தமே நமக்கு வேண்டாம்... நீங்க என்ன சொல்ல வாயெடுத்தீர்கள்?"

"அதுதான். உங்களெப் பத்திதான் ஒரு இங்கிலீஷ்காரனிடம் பிரமாதமாகப் பேசிக்கொண்டிருந்தான்..."

"இவ்வளவுதானா! கதையை எழுதறேன் அல்லது கத்தரிக்காயை அறுக்கிறேன், இவனுக்கென்ன?..."

அதே சமயத்தில் வெளியிலிருந்து "முருகதாஸ்! முருகதாஸ்!" என்று யாரோ கூப்பிட்டார்கள்.

"அதுதான்! அவன்தான் வந்திருக்கிறான் போலிருக்கிறது! பயலுக்கு நூறு வயசு..."

"'சைத்தான் நினைக்கு முன்னால் வந்து நிற்பான்' என்பதுதான்!" என்று முணுமுணுத்தார் முருகதாசர். பிறகு அவர் எழுந்து நின்று வெளியில் தலையை நீட்டி, "யாரது?" என்றார்.

"என்ன? நான்தான் சுந்தரம். இன்னும் என் குரல் தெரியவில்லையா?" என்று உரத்த குரலில் கடகட வென்று சிரித்துக் கொண்டு உள்ளே நுழைந்தார் வந்தவர். அவருடைய சிரிப்புக்கு இசைந்தபடி காலில் போட்டிருக்கும் ஜோடு தாளம் போட்டது.

"என்ன சுந்தரமா? வா! வா! இப்பொத்தான் உன்னைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நீயும் வந்தாய்! காப்பி போடச் சொல்லட்டுமா? அலமு! அலமு!" என்று உரக்கக் கூவினார் எடுத்துக்கிட்டுப் போகணும். சுடுது!" என்று சொல்லிக் கொண்டு, நிலைப்படி இரண்டு பக்கத்தையும் தொட்டவண்ணமாய் ஒற்றைக் காலை ஆட்டிக் கொண்டு நின்றாள் அலமு.

"அம்மா எங்கே?"

"அம்மா சாதத்தெ வடிச்சுக்கிட்டிருக்கா, அப்பா!"

"சரி! இதோ வாரேன், போ!"

"வாயேன்!"

"வாரேன்னா, போடீ உள்ளே!"

"காப்பி ஆறிப்போயிடும், அப்பா!"

"இதோ ஒரு நிமிஷம்!" என்று சொல்லிக் கொண்டு உள்ளே சென்றார்.



முருகதாசர். எங்கிருந்தோ, "என்னப்பா!" என்று அலமுவின் குரல் வந்தது.

"அம்மாவை மூணு கப் காப்பி போடச் சொல்லு. சீக்கிரம் ஆகணும்!"

"நீ என்ன பத்திரிகையையே விட்டுவிட்டாயாமே! இப்பத்தான் கேள்விப்பட்டேன்."

"வயிற்றுப் பிழைப்பிற்கு எதில் இருந்தால் என்ன? சீலைப்பேன் குத்துகிறதும் ஒரு 'பிஸினஸ்' ஆக இருந்து, அதில் ஒரு 'சான்ஸ்' கிடைத்தால் அதையும் விட்டா வைக்கிறது? நான் பத்திரிகையை விட்டுவிட்டா கதை எழுதாமல் இருந்துவிடுவேனோ? ஒரு பெரிய நாவலுக்கு 'பிளான்' போட்டிருக்கேன். தமிழன்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், எனக்குக் காகிதம் வாங்கவாவது காசு கிடைக்கும். அதில் 'சென்ட்ரல் ஐடியா' என்ன தெரியுமா?..."

"நீங்க நேற்று பொருட்காட்சிக்குப் போனீர்களாமே!" என்று பேச்சை மாற்ற முயன்றார் சுப்பிரமணிய பிள்ளை. இந்த விஷயத்தைத் தொட்டுவிட்டால், முருகதாசர் கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக் கொண்டிருப்பார்!

"அப்பா! காப்பியாயிட்டுது. நீதான் வந்து

"மாமா! நீ என்ன கொண்டாந்தே!" என்று கேட்டுக் கொண்டு, சுப்பிரமணிய பிள்ளை மடியில் உட்கார்ந்து, கழுத்திலிருக்கும் நெக் டையைப் பிடித்து விளையாட ஆரம்பித்தாள் அலமு.

"அதெப் பிடித்து இழுக்காதே! மாமாவுக்கு கழுத்து வலிக்கும்!" என்றார் சுந்தரம் பிள்ளை.

"வலிக்காதே!" என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

முருகதாசரும் மேல் துண்டின் உதவியால் ஒரு செம்பை ஏந்திய வண்ணம் உள்ளே நுழைந்தார்.

"என்னப்பா, மூணு டம்ளர் கொண்டாந்தே! எனக்கில்லையா?"

"உனக்கென்னடி இங்கே! அம்மாகூடப் போய்ச் சாப்பிடு."

"மாட்டேன்" என்று ஒரு டம்ளரை எடுத்து வைத்துக் கொண்டது குழந்தை.

முருகதாசர் காப்பியை ஆற்றி, சுந்தரம் கையில் ஒரு டம்ளரைக் கொடுத்தார்.

சுந்தரம் வாங்கி மடக்மடக்கென்று மருந்து குடிப்பது போல் குடித்து விட்டு, "காப்பி வெகு ஜோர்!" என்று சர்டிபிகேட் கொடுத்தார்.

மற்றொரு டம்ளர் சுப்பிரமணிய பிள்ளையிடம் கொடுக்கப்பட்டது. "மாமா! எனக்கில்லையா?" என்று அவரிடம் சென்று ஒண்டினாள் அலமு.

"வாடி, நாம ரெண்டு பேரும் சாப்பிடுவோம்!" என்றார் முருகதாசர்.

"மாமாகூடத்தான்!" என்றது குழந்தை, சுப்பிரமணியபிள்ளை கையிலிருந்த டம்ளரில் அலமுவைக் குடிக்கச் செய்தார்.

பாதியானதும், "போதும்!" என்றது குழந்தை.

"இந்தாருங்க ஸார்!" என்று மற்ற டம்ளரையும் நீட்டினார் முருகதாசர்.

"வேண்டாம்! வேண்டாம்! இதுவே போதும்!" என்றார் சுப்பிரமணிய பிள்ளை.

"நான்சென்ஸ்!" என்று சொல்லிவிட்டு, "இப்போ என் கையில் இதுதான் இருக்கிறது!" என்று ஓர் எட்டணாவைக் கொடுத்தார் சுப்பிரமணியம்.

"இது போதாதே!" என்று சொல்லி, அதையும் வாங்கி வைத்துக் கொண்டார் முருகதாசர்.

"அப்போ..." என்று மீண்டும் ஏதோ ஆரம்பித்தார்.

"பார்ப்போம்! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது" என்று சுப்பிரமணியமும் விடை பெற்றுச் சென்றார். முருகதாசர் தமது ஆஸ்தான அறையின் சிம்மாசனமான பழைய கோரைப் பாயில் உட்கார்ந்து கொண்டு, அந்த எட்டணாவைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டு, நீண்ட யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

"அங்கே என்ன செய்யறீங்க?" என்று மனைவியின் குரல்!

நீங்க நேற்று பொருட்காட்சிக்குப் போனீர்களாமே!" என்று பேச்சை மாற்ற முயன்றார் சுப்பிரமணிய பிள்ளை. இந்த விஷயத்தைத் தொட்டுவிட்டால், முருகதாசர் கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக் கொண்டிருப்பார்!

குழந்தை எச்சிற்படுத்தியதைத் தாம் வாங்கிக் கொண்டார் தாசர்.

"நேரமாகிறது, மவுண்டில் ஒரு நண்பரைப் பார்க்க வேண்டும்!" என்று எழுந்தார் சுந்தரம். "அதற்குள்ளாகவா! வெற்றிலை போட்டுக் கொண்டு போகலாம்!" என்றார் முருகதாசர்.

"கையில் எடுத்துக் கொண்டேன். நேரமாகிறது! அப்புறம் பார்க்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டு வெளியேறினார் சுந்தரம்.

கையில் இருந்த புகையிலையை வாயில் ஒதுக்கிவிட்டு, சிறிது சிரமத்துடன் தமக்கு நேரமாவதைத் தெரிவித்துக் கொண்டார் சுப்பிரமணிய பிள்ளை. தொண்டையைச் சிறிது கணைத்துக் கொண்டு, "சுப்ரமண்யம், உங்களிடம் ஏதாவது சேஞ்ஜ் இருக்கிறதா? ஒரு மூன்று ரூபாய் வேண்டும்!" என்றார் முருகதாசர்.

"ஏது அவசரம்!"

"சம்பளம் போடலே: இங்கு கொஞ்சம் அவசியமாக வேண்டியிருக்கிறது...திங்கள்கிழமை கொடுத்துவிடுகிறேன்!"

"அதற்கென்ன!" பர்ஸை எடுத்துப் பார்த்துவிட்டு "நீதான் இங்கே வாயேன்!"

கமலம் உள்ளே வந்து, "அப்பாடா!" என்று உட்கார்ந்தாள். அவர் கையில் இருக்கும் எட்டணாவைப் பார்த்துவிட்டு, "இதேது?" என்றாள்.

"சுப்பிரமணியத்திடம் வாங்கினேன்!"

"உங்களுக்கும்... வேலையில்லையா?" என்று முகத்தைச் சிணுங்கினாள் கமலம். பிறகு திடீரென்று எதையோ எண்ணிக் கொண்டு "ஆமாம், இப்பத்தான் நினைப்பு வந்தது. நாளைக்குக் காப்பிப் பொடி இல்லை. அதெ வச்சு வாங்கி வாருங்களேன்!" என்றாள்.

"அந்தக் கடைக்காரனுக்காக அல்லவா வாங்கினேன்! அதைக் கொடுத்துவிட்டால்?"

"திங்கள்கிழமை கொடுப்பதாகத்தானே சொன்னீர்களாம்!"

"அதற்கென்ன இப்பொழுது!"

"போய்ச் சீக்கிரம் வாங்கி வாருங்கள்!"

"திங்கள்கிழமைக்கு?"

"திங்கள்கிழமை பார்த்துக் கொள்ளுகிறது!"



தேசப்பற்று

நிவேதிதா | ஓவியம்: ஸ்யாம்


‘மனம் வேண்டுதே, இன்னும்...’

இந்திய மக்கள் அமைதி விரும்பிகள்; அனைவரிடமும் அன்பைப் பொழிபவர்கள். ஆனால், தன் தேசத்துக்கு ஓர் ஆபத்து வந்துவிட்டால் வீரமுடன் வீறுகொண்டு எழுவார்கள். அந்நிலையில் அவர்களுக்கிடையே எந்த ஒரு பேதமும் ஏற்படாது. அப்படிப்பட்ட பல வீரர்கள் நம் தேசத்தின் பல பகுதிகளிலும் தோன்றி வீர சாகசங்கள் புரிந்திருக்கின்றனர். அத்தகைய வீரர்களில் ஒருவரைப் பற்றிய வீர காவியம் இது.

பாலம்பூர், இமாசல பிரதேசத்தில் அமைந்திருக்கும் அழகிய மலை நகரம். பல வீரர்களை இந்திய ராணுவத்துக்கு அர்ப்பணித்த வீரத்தின் விளைநிலம்



பாலம்பூர். அந்த நகரத்தில் 1974-ம் வருடம் செப்டம்பர் மாதம் 9-ம் தேதி பாத்ரா - கமல் காந்த் தம்பதிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அந்த இரட்டைக் குழந்தைகளுக்கு விக்ரம், விஷால் என்று பெயர்கள் சூட்டப்பட்டன. விக்ரம் 'லவ்' என்றும் விஷால் 'குஷ்' என்றும் புனைப்பெயர் வைத்து அழைக்கப்பட்டனர். இரட்டையரில் விக்ரம்தான் பதினான்கு நிமிடங்கள் மூத்தவர். விக்ரமுக்கு சீமா, நூதன் என்ற இரண்டு சகோதரிகளும் உள்ளனர். இவருடைய முன்னோர்கள் 1947-ம் வருடம் இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின்போது



1996-ல் ஒருங்கிணைந்த பாதுகாப்பு சேவைகளுக்கான தேர்வுகளில் வெற்றி அழைத்தபோது அதை மறுத்துவிட்டார். அது பற்றித் தன் தாயிடம் கூறும்போது, பெரிய ஒன்றை என் தேசத்தின் நன்மைக்காகச் செய்யவேண்டும் என்பதே என்

மேற்கு பஞ்சாபிலிருந்து இமாசலத்தின் பாலம்பூர் நகருக்குக் குடிபெயர்ந்தவர்கள் ஆவர். விக்ரம் தன்னுடைய ஆரம்பக் கல்வியை பள்ளி ஆசிரியையாக இருந்த தன் தாயிடமிருந்தே பெற்றார். பின்னர் பாலம்பூரில் உள்ள டி.ஏ.வி. பள்ளி, பாலம்பூரில் உள்ள மத்திய பள்ளி ஆகியவற்றில் பள்ளிக் கல்வியை முடித்தவர், பின்னர் கல்லூரியில் சேர்ந்தார். பள்ளியிலும் சரி, கல்லூரியிலும் சரி கராத்தே, டேபிள் டென்னிஸ் மற்றும் பல விளையாட்டு களில் தன் திறமையை வெளிப்படுத்தினார். படிப்பிலும், விளையாட்டுகளிலும் முதன்மையானவராக விளங்கினார்.

கல்லூரி முதல்வராக இருந்த விக்ரமின் தந்தை தினமும் தன் பிள்ளைகளுக்கு தேசபக்தி ஊட்டும் பல வரலாற்றுச் சம்பவங்களையும் வீரர்களின் வீர சாகசக் கதைகளையும் மனதில் பதியும் வண்ணம் சுவாரசியமாகக் கூறுவார். இதனாலெல்லாம் விக்ரமின் மனதில் தேசத்தின் மீதான பக்தி வேரூன்றிவிட்டது.

விக்ரம் கல்லூரியில் சேர்ந்த முதல் வருடமே தேசிய மாணவர் படையின் விமானப் படைப் பிரிவில் சேர்ந்தார். அடுத்த இரண்டு வருடங்களில் கேப்டனாகவும் இருந்தார். தேசிய மாணவர் படையில் 'சி' சான்றிதழ் பெற்றார். 1994-ம் வருடம் குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்கத் தேர்ந் தெடுக்கப்பட்ட விக்ரம், அந்த நிகழ்வுக்குப் பிறகு தான் ராணுவத்தில் சேர விரும்புவதாகத் தன் பெற்றோரிடம் தெரிவித்தார். அவர்களும் சம்மதித்தனர்.

1995-ம் வருடம் தன் பட்டப் படிப்பை முடித்த விக்ரம் ஒருங்கிணைந்த பாதுகாப்பு சேவைகளுக்கான (Combined defence services) தேர்வுக்குத் தயாரானார். அதே வருடம் சண்டிகர் பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் முதுகலை ஆங்கில இலக்கியம் படிப்பதற்காகச் சேர்ந்தார். பெற்றோருக்கு சுமையாக இருக்க விரும்பாத விக்ரம், பயண நிறுவனம் ஒன்றில் பகுதிநேர வேலை பார்த்தபடி மாலை வகுப்புகளில் பயின்று வந்தார்.

1996-ல் ஒருங்கிணைந்த பாதுகாப்பு சேவைகளுக்கான தேர்வுகளில் வெற்றி பெற்ற விக்ரம், ஹாங்காங் நாட்டைச் சேர்ந்த வணிக கடற்படை நிறுவனம் பணிக்கு அழைத்தபோது அதை மறுத்துவிட்டார். அது பற்றித் தன் தாயிடம் கூறும்போது, 'பணம் மட்டுமே வாழ்க்கையில் எல்லாம் இல்லை. நான் என் வாழ்க்கையில் மிகப் பெரிய ஒன்றை என் தேசத்தின் நன்மைக்காகச் செய்யவேண்டும் என்பதே என் விருப்பம்' என்றார்.

1996-ம் வருடம் ஜூன் மாதம் டேராடூனில் உள்ள மானேக்ஷா பட்டாலியனில் உள்ள இந்திய ராணுவ அகாடமியில் சேர்ந்தார். அங்கு ராணுவப் பயிற்சியை முடித்த பின்னர், ஜம்மு காஷ்மீர் ரைபிள்ஸ் பிரிவில் 13-வது லெப்டினென்டாக நியமிக்கப்பட்டார். ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டம் சபூர் நகரில்தான் அவருடைய முதல் பணி இருந்தது. விக்ரம் தான் இருந்த பகுதியில் அடிக்கடி தீவிரவாதிகளைச் சந்தித்தார். ராணுவத்தில் சேர்ந்த பிறகு வாய்ப்பு கிடைக்கும்போது விடுமுறை எடுத்துக்கொண்டு பாலம்பூருக்கு வருவார்.

1999-ம் வருடம் ஹோலி பண்டிகையின்போது பாலம்பூருக்கு வந்தார். அப்போது தன் தோழியும் காதலியுமான டிம்பிள் சீமாவைச் சந்தித்தார். விக்ரமை பெருமித உணர்ச்சியுடன்



பெற்ற விக்ரம், ஹாங்காங் நாட்டைச் சேர்ந்த வணிக கடற்படை நிறுவனம் பணிக்கு ‘பணம் மட்டுமே வாழ்க்கையில் எல்லாம் இல்லை. நான் என் வாழ்க்கையில் மிகப் விருப்பம்’ என்றார்.

பார்த்த சீமா, 'யுத்தத்தின்போது கவனமாக இருங்கள்' என்று பரிவுடன் கூறினார். அதைக் கேட்ட விக்ரம், 'நான் இந்திய தேசியக் கொடியை வெற்றிகரமாக உயர்த்திய பிறகு வீட்டுக்குத் திரும்ப வருவேன். அல்லது இந்திய தேசியக் கொடியை போர்த்தியபடி வருவேன்' என்று கூறினார்.

குறுகிய கால விடுமுறைக்குப் பிறகு அவர் தன் குழுவினருடன் இணைந்துகொண்டார். ஜூன் 5-ம் தேதி கார்கில் யுத்தம் தொடங்கியது. ஜூன் 19-ம் தேதி விக்ரம் பாத்ராவை அழைத்த உயரதிகாரி, பாகிஸ்தான் தீவிரவாதிகள் பங்கர்கள் அமைத்துள்ள சிகரம் எண் 5140- ஐ மீட்க வேண்டும் என்றும், அதை மீட்டுவிட்டால் அடுத்தடுத்து மற்றவற்றைப் பிடிப்பது எளிதாகி விடும் என்றும் கூறினார்.

அதிகாரியின் கட்டளையை மிகுந்த மகிழ்ச்சி யுடன் ஏற்றுக்கொண்ட விக்ரம் பாத்ரா, தன் வீரர்களுடன் பின் வழியாகச் சுற்றிக்கொண்டு சென்று தாக்குதல் தொடுக்கப்போகும் தன் திட்டத்தை மேலதிகாரியிடம் விவரித்துவிட்டு, அதன்படியே பின் வழியாகச் சென்று தாக்குதலைத் தொடுத்தார். அனைவரையும் தனக்குப் பின்னால் வரச்சொல்லிவிட்டு அவர் முன்னேறிச் சென்றார். எதிரிகளின் அசைவு தெரிந்துவிட்டது. அவ்வளவுதான், விக்ரம் பாத்ரா மற்றும் அவருடன் சென்ற வீரர்களின் மிஷின்கன்கள் எதிரிகளை நோக்கி குண்டு மழை பொழிந்தன. எதிரிகள் அடியோடு அழிந்தனர். தன் குழுவினரில் எவருக்கும் சிறு காயமும் இல்லாமல் சிகரத்தைப் பிடித்த நிலையில் விக்ரம் பாத்ரா வயர்லெஸ்ஸில் 'என் மனம் வேண்டுதே இன்னும்' (ஏ தில் மாங்கே மோர்) என்று முழங்கினார்.

ஜூலை 8-ம் தேதி சிகரம் எண் 4875-ஐ மீட்கவேண்டும் என்பது விக்ரம் பாத்ராவின் இலக்கு. ஏற்கெனவே பட்ட காயம் ஆறாமல் இருந்த நிலையிலும் விக்ரம் துணிந்து சென்றார். மீண்டும் மலையேற்றம். ஊசியாகக் குத்தும் குளிர். இந்த முறை பாகிஸ்தான் படையினருக்கு எதிரியின் வருகை எந்த திசையில் இருக்கும் என்பது புரிந்துவிட்டது. விக்ரம் பாத்ராவுக்குமே அது தெரிந்தே இருந்தது.

சக அதிகாரி அஞ்சு நய்யாருடன் மேலே ஏறியதும் பாகிஸ்தான் ராணுவத்தினருடன் நேருக்கு நேர் மோதல் தொடங்கியது. வெற்றி நெருங்கும் வேளையில் வீரர் ஒருவர் குண்டடி பட்டு பாதுகாப்பற்ற நிலையில் இருந்தார். அவரை மீட்டு வர சக வீரர்கள் விரைந்தபோது அவர்களைத் தடுத்து நிறுத்திய விக்ரம் பாத்ரா, தான் மட்டும் முன்னேறிச் சென்றார். தன் வார்த்தையை மீறி முன்னேறி வந்த வீரரைப் பார்த்த விக்ரம், 'ஏய், உனக்கு மனைவி, குழந்தைகள் இருக்கின்றனர். நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று கூறிவிட்டு முன்னேறிச் சென்றார்.

அந்தத் தருணத்துக்காகவே காத்துக் கொண்டிருந்த பாகிஸ்தான் படையினர், போட்டி போட்டுக் கொண்டு விக்ரம் பாத்ராவை துப்பாக்கி குண்டுகளால் துளைத்தனர். அந்த நிலையிலும் எதிரி வீரர்களில் ஐந்து பேர்களை யமனுலகுக்கு அனுப்பிய பிறகே வீர மரணம் அடைந்தார் விக்ரம் பாத்ரா. தொடர்ந்து சென்ற அஞ்சு நய்யார் அந்தச் சிகரத்தைப் பிடித்த பிறகே உயிர் நீத்தார்.


காதலி டிம்பிள் சீமாவிடம் கூறியபடி இந்திய தேசியக் கொடி போர்த்தியபடி தன் ஊருக்குத் திரும்பினார் விக்ரம் பாத்ரா.

விக்ரம் பாத்ராவின் வீர சாகசங்களைப் பாராட்டி கௌரவிக்கும் வண்ணம் இந்திய தேசத்தின் மிக உயரிய வீர விருதான பரம் வீர் சக்ரா விருது அவருடைய தாயாரிடம் வழங்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் அவருடைய நினைவாக இந்திய ராணுவத்தின் பல கட்டடங்களுக்கு கேப்டன் பத்ரா என்ற பெயரை வைத்துள்ளது. அவர் சென்ற மலையுச்சிக்கு 'பாத்ரா டாப்' என்றும் அதேபோல் இந்திய மிலிட்டரி அகாடமியில் உள்ள உணவகத்திற்கு 'விக்ரம் பாத்ரா மெஸ்' என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

வெ.இன்சுவை

ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் நான்காவது புதன்கிழமை தேசிய மகளிர் உடல் ஆரோக்கிய தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை...

–பொறுப்பாசிரியர்



பெண்களின்



குடும்பத்தின்

'உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே!'

என்று திருமூலர் தமது திருமந்திரத்தில் தெளிவாக்குகிறார்.

உடல் நலமே உலகின் பெரிய செல்வம். அரண்மனை போன்ற வீடும், கட்டுக்கட்டாய் பணமும் ஒருவருக்கு மகிழ்ச்சியைத் தர முடியாது. செல்வத்தை அனுபவிக்க உடல்நலம் முக்கியம். நோயற்ற வாழ்க்கையைக் காட்டிலும் பெரிய செல்வம் வேறு ஏதும் இல்லை. குறிப்பாகப் பெண்கள் தங்கள் உடல் நலத்திலும், உடல் சுத்தத்திலும் அதிக கவனமும், அக்கறையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தற்காலப் பெண்களில் பெரும்பாலா னோருக்கு இந்த அக்கறை இருக்கும்போது, சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெண்களுக்குத் தன் சுயம், தன் உடல், தன் இலக்கு, தன் உரிமை என்று எதைப் பற்றியும் சிந்திக்கத் தெரியாது. விவரம் தெரியாத வயதில் திருமணம், பின்னர் வரிசையாய் குழந்தைகள், சமையல், வீட்டுவேலை என மூன்றாம் கட்டுக்குள்ளேயே முடங்கிப் போனது பலரின் வாழ்க்கை.

கையில் ஒரு குழந்தை, வயிற்றில் ஒரு குழந்தை என சுமந்த அவர்களுக்குத் தங்களுடைய உடல் நலத்தைப் பற்றி யோசிக்க ஏது நேரம்? பெண் பிள்ளைப் பெரியவளானதும் பின்னல்சடை கொண்டையாகிவிடும். காலில் கொலுசு அணியமாட்டார்கள். வலிந்து வயதான தோற்றத்துக்கு மாறுவார்கள். நேரத்திற்குச் சாப்பிடமாட்டார்கள். உண்மையில் சாப்பிட நேரம் இருக்காது. கூட்டுக் குடும்ப அமைப்பில் தனக்குப் பிடித்ததை சமைத்து சாப்பிட வகை இருந்திருக்காது. எப்போதும் வீட்டு வேலை அழுத்திக் கொண்டிருக்க, வேறு சிந்தனைக்கு ஏது இடம்?

பாரதிதாசனின் 'குடும்ப விளக்கு' நூலின் முதற் பகுதியில் ஒரு பெண்ணின் ஒருநாள் வேலை என்னென்ன என்று பட்டியல் இடப்பட்டிருக்கும்.

சமையல் வேலை, வீட்டு வேலைகள், தையல் வேலை, மரச்சாமான்களைப் பழுது பார்த்தல், கொல்லூற்று வேலை, விருந்தினர் போற்றல் இப்படி அடுக்கடுக்காய் வேலைகள். பெண்கள் என்ன இயந்திரமா?

'கொண்டவர்க் கெது பிடிக்கும்
குழந்தைகள் எதை விரும்பும்
தண்டூன்றி நடக்கும் மாமன்
மாமிக்குத் தக்கதென்ன
உண்பதில் எவரு டம்புக்கு
எதுவுத வாதென் றெல்லாம்
உண்பவர் தம்மைக் கண்டாள்'



ஆனால், அவளுக்கு எது பிடிக்கும் என

ஆரோக்கியமே ஆரோக்கியம்



யோசிப்பார் எவரும் இல்லை. இப்படித்தான் அக்காலப் பெண்களின் வாழ்க்கை இருந்துள்ளது.

காலங்கள் சென்றன. அடுக்களையில் இருந்து வெளிவந்து வேறு ஓர் உலகம் இருப்பதைப் பெண்கள் கண்டார்கள். குடும்பத்திற்காக மெழுகாய் தங்களைக் கரைத்துக் கொள்வதில் பயன் இல்லை. தனக்கான ஓர் அழகிய வாழ்க்கையைத் தாங்கள்தான் அமைத்துக்கொள்ள முடியும் என்பதை உணர்ந்தார்கள். கூட்டுப் புழுவாய் இருந்தவர்கள், வண்ணத்துப் பூச்சியாய் வானில் வட்டமிடத் தொடங்கினார்கள். தங்களைச் சுற்றி நடப்பனவற்றை அவதானித்துப் புரிந்து கொண்டார்கள். கல்வி அவர்களுக்கு மிகுந்த தன்னம்பிக்கையைத் தந்தது. பூட்டியிருந்த தங்கள் கை விலங்குகளை உடைத்தெறிந்துவிட்டு, தாம் எவர்க்கும் அடிமையல்ல எனப் புதியதோர் உலகம் படைக்கப் புறப்பட்டார்கள்.

தற்காலப் பெண்களில் பெரும்பாலானோர் தங்கள் உடல்நலம் குறித்து மிகுந்த விழிப்பு உணர்வோடு உள்ளார்கள். அழகாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க அதிக அக்கறை காட்டுகிறார்கள். வேலைக்குப் போகும் பெண்கள், கல்லூரியில் படிக்கும் பெண்கள் மற்றும் வீட்டிலுள்ள பெண்கள் என அனைவரும் தங்கள் உடலைப் பேண நேரத்தையும், பணத்தையும் செலவிடுகிறார்கள்.

தெருவுக்கு ஓர் அழகு நிலையம் உள்ளது. உச்சி முதல் உள்ளங்கால் வரை பல அழகு சிகிச்சைகள். பின்னால் இருந்து பார்த்தால் அம்மாவுக்கும், பெண்ணுக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. முன்பெல்லாம் தலைமுடி நரைத்திருந்தால் வயோதிகர் எனக் கொள்வோம். இப்போதோ அகவை எழுபது ஆனாலும் தலைச்சாயம் அடித்துக் கொண்டு இளமையாகத் தோன்ற விரும்புகிறார்கள்.

போதாக்குறைக்கு சமூக வலைத்தளங்களில் அழகுக் குறிப்புகள் குவிந்து கிடக்கின்றன. அதையெல்லாம் பார்த்துத் தாங்களும் நிறைய மெனக்கெடுகிறார்கள். முன்பெல்லாம் மாதம் ஒரு முகப்பவுடர் குப்பி, ஒரு சாந்து பாட்டில், ஒரு சின்ன கண் மை டப்பி இவையே ஒரு பெண்ணின் தேவைகளாக இருந்தன. இப்போதோ ஒரு வீட்டின் மளிகைப் பொருள்களின் செலவைவிட, பெண்களின் அழகு சாதனங்களின் செலவு அதிகம்.

உடலின் ஒவ்வொரு உறுப்புக்கும் தனித்தனியாக எதை எதையோ வாங்குகிறார்கள். தலைமுடிக்கு எவ்வளவு பணம் செலவழிக்கிறார்கள் தெரியுமா? அழகு நிலையத்தில் தலைமுடிக்கு மசாஜ் எனப் பல நூறுகள் வாங்குகிறார்கள். கைகளுக்கு, கால்களுக்கு எனத் தனித்தனிக் கட்டணம். கை, கால் விரல் நகங்களைக்கூட அங்கே போய்தான் வெட்டிக் கொள்கிறார்கள். வீட்டில் விசேஷம் என்றாலோ அல்லது எங்காவது நிகழ்ச்சிகளுக்குப் போக வேண்டுமென்றால் அழகு நிலையங்களுக்குப் போய் பல ஆயிரங்களை அள்ளி விடுகிறார்கள்.

பல பெண்கள் காலையில் நடைப்பயிற்சி மேற்கொள்கிறார்கள். எப்போதும் வேலை இருந்து கொண்டேதான் இருக்கும். ஆனாலும் உடம்பை நாம்தானே பார்த்துக்கொள்ள வேண்டும் என்று பல பெண்களும் உணர ஆரம்பித்துவிட்டார்கள்.

வேலைக்குப் போகும் பல பெண்கள், மாலையில் உடற்பயிற்சி நிலையத்துக்குச் சென்று உடற்பயிற்சிகளைச் செய்துவிட்டு, பின்னர் வீட்டிற்குப் போகிறார்கள். முன்பெல்லாம் இவ்வாறு பெண்களால்

நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. அதற்கு அனுமதி கண்டிப்பாகக் கிட்டியிருக்காது. இப்போது அவர்கள் சம்பாதிப்பதால், எவரின் தயவையும் நாட வேண்டிய தேவையில்லை. எண்ணெய் பண்டங்களைத் தொடுவது கிடையாது. தற்போது குடும்பங்களில் சிறுதானியங்களை அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்கிறார்கள். எல்லோருக்கும் சாமுத்திரிகா லட்சணம் இலக்கணப்படி உடல் இருக்கவேண்டும் என்று ஆசை. எங்கேயும் சதை அதிகம் இருக்கக் கூடாது.

ரவிவர்மா ஓவியம் போல இருக்க ஆசை. அதனால் ஆசைப்பட்டதைச் சாப்பிடாமல், எப்போதும் உடல் எடையைப் பரிசோதித்துக் கொண்டே இருக்கும் கூட்டம் ஒருபுறம் என்றால், இன்னமும் தன்னைப் பற்றிச் சிந்திக்கத் தெரியாத, நேரமில்லாத கூட்டம் போகிறார்கள்.

'இளையதாக முள்மரம் கொல்க' என்பதை உணராது கோடாரி கொண்டு வெட்டும் அளவுக்கு விட்டுவிடுகிறார்கள். அதற்கு இரண்டு காரணங்கள், ஒன்று பணம் செலவாகும். மருத்துவர் பெரிதாக எதையாவது செலவை இழுத்து விட்டு விடுவார். இரண்டாவது, தான் உடம்பு முடியாமல் படுத்துவிட்டால், வீட்டின் நிலை என்னாகும் என்ற கவலை. உண்மையில் குடும்பத் தலைவிக்கு அறுவைச் சிகிச்சை ஏதாவது நடந்துவிட்டால், அந்தக் குடும்பம் தவித்துப் போகிறது. சமையல் அறைப் பக்கமே எட்டிப் பார்க்காத கணவர் என்ன செய்வார்? நோயின் வலியைவிட கணவரும், பிள்ளைகளும் படும் அவஸ்தை மிகுந்த வலியைக் கொடுக்கும். அதனால் பூரண ஓய்வு எடுக்காமல், உடம்பு



“பல பெண்கள் மகப்பேறுக்குப் பிறகு தங்கள் நலன் குறித்துக் கவலைப்படுவதே இல்லை. குழந்தை வளர்ப்பில் கவனம் செலுத்திக் கொண்டு தங்களை மறந்து போகிறார்கள்.”

மறுபுறம், காலை நேரப் பரபரப்பில், சமையலையும் செய்துகொண்டு, கணவரையும், குழந்தைகளையும் அலுவலகத்திற்கும், பள்ளிக்கும் செல்ல உதவிக் கொண்டு, தானும் வேலைக்குக் கிளம்ப, காலில் சக்கரம் இல்லாத குறைதான். அத்துனை வேகம், பதற்றம்.

பலர் காலைச் சிற்றுண்டியைத் தவிர்த்து விடுகின்றனர். சிலர் நின்றுகொண்டே ஓரிரு இட்லியைப் பிட்டு வாயில் அடைத்துக் கொண்டு ஓடுகின்றனர். உடம்புக்கு ஏதாவது முடியவில்லை என்றால், உடனே மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது கிடையாது. கூடுமானவரை நாள்களைத் தள்ளிக் கொண்டே சிறிது தேறியதும் இப்பெண்கள் வேலை செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். பாவம். கணவன் ஊரில் இல்லை என்றால், தன் ஒருத்திக்காக சமையல் செய்ய சோம்பல்பட்டுக் கொண்டு எது இருக்கிறதோ, அதை வைத்து ஒப்பேற்றி விடுகிறார்கள்.

மேல்தட்டுப் பெண்களும், உயர், நடுத்தர குடும்பத்துப் பெண்களும் மிகுந்த அக்கறையோடு தங்கள் தேக நலனையும், உடல் தூய்மையையும் அழகாகப் பராமரித்துக் கொள்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு நேரம் இருக்கிறது.

நூறு ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழ விஸ்வேஸ்வரய்யா கூறும் யோசனைகள்

1. அளவோடு சாப்பிடு.
2. எப்போதும் மகிழ்ச்சியாய் இரு.
3. மனசாட்சிக்கு விரோதமான செயலைச் செய்யாதே.
4. போதுமான உறக்கம்.
5. கடன் வாங்காமல் வருமானத்துக்குள் வாழ்க்கை நடத்து.
6. சம்பாதிக்கும் போதே சேமிப்பு.
7. எப்போதும் சுறுசுறுப்புடன் இரு.



தங்கள் நலன் குறித்துக் கவலைப்படுவதே இல்லை. குழந்தை வளர்ப்பில் கவனம் செலுத்திக் கொண்டு தங்களை மறந்து போகிறார்கள். நோயின் ஆரம்பக் கட்டத்தில் அசட்டையாக இருந்து விடுகிறார்கள். காரணம், அளவற்ற சகிப்புத்தன்மை, போதிய விழிப்புணர்வு இன்மை.

மணமான பெண்களின் பிரச்னைகளில் மாதவிடாய், கருத்தரித்தல், குழந்தை பிறப்பு, மாத விடாய் நிறுத்தம், மார்பகப் புற்றுநோய், கருக்கலைப்பு, சிறுநீர் ஒழுகல் போன்றவை கவனிக்கப்படவேண்டும். ஊட்டச்சத்து குறைபாடு, ரத்த சோகை, ரத்தக் கொதிப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை அதிகம். ஒரு பெண்ணுக்கு நாளொன்றுக்கு 2,200 கலோரி சக்தி தேவை. எலும்புத் தேய்மானம் பற்றி யோசிப்பதில்லை. அதுவும் விளிம்பு நிலையிலுள்ள மகளிரின் நிலை வருத்தம் அளிக்கிறது. பொறுப்பான குடும்பத் தலைவன் வாய்க்காத நிலையில், அந்த ஏழைத் தாய்மார்கள் அந்தச் சுமையைத் தங்கள் தோளில் தாங்குகிறார்கள். அவர்களுக்குத் தங்கள் உடல் நலம், தூய்மை பற்றிய சிந்தனை எங்கே எழப் போகிறது?

சமைத்தோமா, மகிழ்ச்சியாக சாப்பிட்டோமா? என்ற நிலையிலா இக்காலப் பெண்கள் உள்ளார்கள்? மனஉளைச்சல், வீட்டு நிர்வாகம், சமூகக் கடமை எனப் பல பிடுங்கல்கள். அதுமட்டுமல்ல, வெளியே சொல்ல முடியாத பலப்பல சங்கடங்கள், மனவலிகள், ஆறாத ரணங்கள் என உள்ளுக்குள்ளேயே உடைந்துபோய் நடைப்பிணமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெண்கள்

உடல் நலனைப் பேணுவது மிகமிக முக்கியம். உடல் வளம் மற்றும் சுகாதாரத்தின் சரியான கோட்பாடுகளை இளம் வயதிலேயே பெண் குழந்தைகளுக்குக் கற்பித்தல் வேண்டும். சீரான, சத்தான உணவு, நேரத்துக்கு உண்ணுவது (விரதம் இருந்து வயிற்றைப் பட்டினி போட வேண்டாம்), நல்ல உறக்கம், உடற்பயிற்சி, சுற்றுப்புறத் தூய்மை, ஆரோக்கியமான மனப்பாங்கு, காலை உணவைத் தவிர்க்காமல் இருத்தல், மென்று சுவைத்து உண்பது, போதுமான ஓய்வு முதலிய அனைத்தும் மிகமிக அவசியம்.

பல பெண்கள் மகப்பேறுக்குப் பிறகு உடல்நலன் பற்றி யோசிப்பதே இல்லை. ‘உடல் நலம் காப்போம்; உயிர் நலம் வளர்ப்போம்’ நமக்கு நிம்மதியும், மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கை வேண்டும் என்றால், நம் உடல் நலனும், சுகாதாரமும் அவசியம். ’மருத்துவருக்குக் கொடுப்பதை, வாணியனுக்குக் கொடு’ என்பார்கள்.


பாரதி சொன்னது போல, சூரிய ஒளியைக் கண்டவுடன் சுடர் முகம் தூக்கிச் சிரிக்கும் வண்ண மலர்களைப் போல மனித முகங்கள் மகிழ்ச்சியில் அன்றாடம் விழி மலர்ந்தால், உள்ளத்தில் உவகைப் பூக்கும்; வாழ்க்கையில் எப்போதும் வசந்தம் கவரி வீசும். ●


Godrej interio®
N.MAHALINGAM & COMPANY
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand Coimbatore - 641 018.
Email : homeappliances@nmanco.com, godrej@nmandco.com
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811, Mob : +91 98438 40000

லக்ஷ்மிதரன்

ஆனைமுகத்தோனின் ஆறு படைவீடுகள்

முருகப் பெருமானுக்குத்தான் அறுபடை வீடு என்று கூறுவது வழக்கம். விநாயகருக்கு அவ்வாறு கூறுவதில்லைதான். ஆனாலும், முருகப்பெருமான் ஆறுபடைவீடுகளில் ஆறு விதமான பலன்களை வழங்குவதைப் போல், கணபதிக் கடவுளும் ஆறு தலங்களில் ஆறு வகையான பலன்களை தம்மை வழிபடுபவர்க்கு அருள்கிறார். அந்த ஆறு படைவீடுகள்...



திருவண்ணாமலை – முதல் படை வீடு

நினைத்தாலே வினைதீர்க்கும் சிவ ஸ்தலம் திருவண்ணாமலையாகும். திருவண்ணாமலை திருக்கோயிலின் கோபுர அடிவாசலில் அமைந்துள்ள சின்னஞ்சிறு பிள்ளையாருக்கு 'அல்லல்போம் விநாயகர்' என்று பெயர். இறைவனது வினை தீர்க்கும் செயலே அருளாற்றலில் முதன்மையானது. இதனால் திருவண்ணாமலையிலுள்ள 'அல்லல்போம் விநாயகர்' சந்நிதி அவருக்கு முதல் படை வீடாகிறது.

"அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம் - நல்ல
குணமதிகமாம் அருணைக் கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்"

– விவேக சிந்தாமணி

இச்சந்நிதிக்கு சென்று வழிபட்டால் ஊழ் வினைகள் அடியோடுநீங்கும். திருவண்ணாமலை சிவ ஸ்தலம் என்பது வேறு. விநாயகரின் படை வீடு என்பது வேறு. விநாயகர் தனிச் சந்நிதியில் பேரருளோடு வீற்றிருக்கும் இடமே அவரின் முதல் படை வீடாகும்.



விருத்தாசலம் – இரண்டாம் படை வீடு


திருமுதுகுன்றம் என்கிற விருத்தாசலம் இரண்டாவது படை வீடாகும். அங்கு சிவன் கோயிலின் முன்புறத்தில் பூமிக்கடியில்

ஆழத்துப் பிள்ளையார் கோயில் உள்ளது. விநாயகர் தனிக் கோயிலில் வீற்றிருக்கிறார். வினையெல்லாம் தீர்ந்த பிறகு நம் குடும்பத்தில் செல்வமும், கல்வியும், சீரும், சிறப்பினையும் தருவதில் நிகரற்றவர். இதனால் இந்தத் தலம் இரண்டாவது படை வீடாகும்.

"திருவும் கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவோம்".

- ஸ்ரீஞானக் கூத்தர்

திருக்கடவூர் – மூன்றாவது படை வீடு



வினைகள் தீர்ந்த பிறகு, நாம் பெற்ற செல்வங்களை அனுபவிப்பதற்கு நமக்கு நீண்ட ஆயுள் தேவை. மார்க்கண்டேயனுக்கு தீர்க்காயுளை வழங்கிய சிவபெருமானின் திருத்தலமே திருக்கடவூர். இந்தத் தலமே மூன்றாவது படை வீடாகும். இந்தக் கோயிலினுள்ளே கள்ளவாரண விநாயகர் சந்நிதி தனியே அமைந்துள்ளது. நம் உள்ளத்தைக் கவரும் விநாயகர் என்பதால், கள்ள விநாயகர் என்று அழைக்கப்படுகிறார். இவ்விநாயகர் நமக்கு தீர்க்காயுளை வழங்குவதில் மகா வல்லவர். என்ன நோய் இருந்தாலும் இவ்விநாயகரை வழிபட்டால் அனைத்து நோய்களும் நீங்கும். ஆயுள் தோஷம் உள்ளவர்கள் நாற்பது நாள்கள் இக்கோயிலில் இருந்து கள்ள விநாயகரை வழிபட்டால் பூரண ஆயுள் பெறுவர். நாற்பது நாள்கள் இருக்க முடியாதவர்கள் ஒருமுறை நேரில் சென்று தரிசனம் செய்து, வீட்டிற்கு வந்து மானசீகமாக அவரை நினைத்து வழிபட்டு வந்தால் தீர்க்காயுள் பெறலாம்.

"தண்டாயுதத்தையும் சூலாயுதத்தையும் தாங்கி யென்னைக்
கண்டாவி கொள்ள நமன்வரும் வேளையில் காத்திடுவாய்
வண்டார வாரஞ்செய் மாமலர்ச் சோலை வளப்பமுடன்
விண்டாவிய கடவூர் வாழும் கள்ள விநாயகனே".

மதுரை – நான்காவது படை வீடு




ஸ்ரீமீனாட்சி அம்மன் அரசாளும் மதுரையம்பதியே கணபதிக் கடவுளின் நான்காவது படை வீடாகும். வினைகள் தீரவும், செல்வமும், நீண்ட ஆயுளும் பெற்ற பிறகு நாம் நினைத்த காரியம் ஸித்தியாக வேண்டுமென்று நினைப்பது இயற்கையே. மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலினுள் நுழைந்தவுடன் ஸித்தி விநாயகர் சந்நிதியை தரிசிக்கலாம். இம்மூர்த்தி சிறியதாக இருந்தா

லும் கீர்த்தி மிகப் பெரியது. மாணிக்கவாசகப் பெருமான் பாண்டிய மன்னனுக்காக குதிரை வாங்கப் புறப்படும்போது ஸித்தி விநாயகரை வழிபட்ட பிறகே புறப்பட்டார் என்கிறது திரு விளையாடல் புராணம். மாணிக்கவாசகப் பெருமான் வழிபட்ட ஸித்தி விநாயகரை வழிபடுவது எவ்வளவு சிறப்பு என்பதை நாம் உணர வேண்டும். நாம் நினைத்த காரியம் வெற்றி பெற ஸித்தி வழங்குவதாலேயே இவருக்கு ஸித்தி விநாயகர் என்ற திருப்பெயர் ஏற்பட்டது. இவரது பெயரே இவரை வழிபட்டால் நாம் நினைத்த காரியம் ஸித்தியாகும் என்பதை உணர்த்தும். அதனாலேயே இந்தத் திருத்தலம் விநாயகருடைய நான்காவது திருத்தலமாகும்.

காசி மற்றும் பிள்ளையார்பட்டி – ஐந்தாவது படை வீடு

நம்முடைய வினைகள் தீர்ந்து, வாழ்விற்குத் தேவையான செல்வமும் சிறப்பும் பெற்று, நோய்கள் விலகி, நினைத்த காரியம் ஸித்தியடைந்தால் அடுத்ததாக நாம் ஞானம் பெற்று இறைவனது திருவடியை அடைவதைத்தான் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். அதற்கு முதலில் மந்திர உபதேசம் பெறுவதுதான் சிறந்த வழியாகும். மந்திரத்தின் வழி ஞானம் உதயமாகும்.

காசி, துண்டிராச கணபதியைத் தீட்சா கணபதி என்றும் கூறுவது வழக்கம். இந்த கணபதி, மந்திர பலன்களை வாரி வழங்குவதில் மிகவும் வல்லவர். தனக்குகந்த குருவினை இவரது சந்நிதிக்கு அழைத்துச் சென்று அவரிடம் மந்திரோபதேசம் பெற்றால் உடனே அஃது பலிதமாகும். குரு கிடைக்காவிட்டால் தீட்சா கணபதியின் சந்நிதியில் நாமே சிவ பஞ்சாட்சரத்தை மானசீகமாகக் கூறி தீட்சைப் பெற்றுக் கொள்ளலாம். பிள்ளையார்பட்டி



கற்பக விநாயகர் சிவபூஜை செய்யும் கோலத்தோடு வீற்றிருப்பதால் இவருடைய சந்நிதியிலும் மந்திர தீட்சைப் பெறலாம். கேட்பவற்றைக் கொடுக்கும் கற்பக விருட்சத்திற்கு அத்தகைய ஆற்றலை வழங்கியதால் இவ்விநாயகருக்கு கற்பக விநாயகர் என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. இவரின் தனிச்சிறப்பு மந்திரோபதேசப் பலன் தருவதேயாகும். தகுந்த குரு கிடைக்காதவர்கள் ஸ்ரீ கற்பக விநாயகரையே குருவாக மனதில் நினைத்து, மந்திரோபதேசம் பெறலாம்.



திருநாரையூர் – ஆறாவது படை வீடு

திருமுறைகள் வெளி வருவதற்குக் காரணமாக இருந்த நம்பியாண்டார் நம்பிக்கு அருள்புரிந்த திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையார் மிகவும் சக்தி நிறைந்தவர். மந்திரோபதேசம் பெற்ற பின்னர் அடிக்கடி திருநாரையூர் சென்று பொள்ளாப் பிள்ளையாரை வழிபட்டு வந்தால் நாளடைவில் முக்திப் பேறடைவர். இத்திருத்தலம் சிதம்பரத்திற்கு அருகில் அமைந்துள்ளது.


என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்

-நம்பியாண்டார் நம்பி

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான். காற்றும் எங்கும் இருக்கிறது. ஆனால், கடற் கரையில் அஃது அதிகமாக வீசுவதுபோல், இந்த ஆறுபடை வீடுகளில் திருவருட் காற்று வலிமையாக வீசுகிறது. நாமும் அங்கே சென்று உரிய பலன்களைப் பெறலாம்.

●

டாக்டர் து.பு.சண்முகநாதன்



மறுமலர்ச்சிக்கான பாரதியின் முயற்சிகள் மிக மகத்தானவை. அவருடைய வாழ்வு முப்பத்தி ஒன்பதே ஆண்டுகள்தான். இந்தக் குறுகிய காலத்திலேயே நாட்டு நலன், மக்களின் அடிமை வாழ்வு முறை, குறுகிய கல்வி, மக்களின் மந்த உணர்வு, வறுமை, ஆங்கில மோகம் யாவையும் அவர் மனதை வருத்தின. எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் அவற்றை ஏற்றுக் கொண்டவர்களாய், குறைகள் அனைத்தையும் நீக்க முயற்சி செய்யாமல் இருந்ததைக் கண்ட பாரதியின் மனம் மிக வாட்டமடைந்தது. மக்களை உணர்வூட்டவும், மந்த நிலையை நீக்கவும் பாரதி வெகுண்டு பல கவிதைகளை தனது ‘இந்தியா’ பத்திரிகையிலும் மற்றும் சில பத்திரிகை களிலும் எழுதினார். அடிமை வாழ்வை அறவே மறுத்தார்.


பாரதியின் வாழ்க்கையிலும் வறுமை வாட்டியது. துயரங்கள் சூழ்ந்தன. மிக இளைய வயதிலேயே தந்தையை இழந்தார். ஆனால் இயற்கையாகவே கவிபாடும் திறன் இருந்தது. எட்டயபுரம் ஜமீன்தார் அரண்மனையில் பல புலவர்களோடு அவர் பழகியதால் கவித்திறன் மேலும் வளர்ந்தது. ஜமீன்தார் பாரதியிடம் உறவோடு இருந்ததால் புலவர்களும் பாரதியிடம் அன்பாகப் பழகி னார்கள். அவரது புலமையைக் கண்ட புலவர்கள் ‘பாரதி’ என்று பெயர் வைத்தனர். பாரதி ஜமீன்தாருக்கு துதிபாடுவதை வெறுத்து எட்டயபுரம் அரண்மனையை விட்டு விலகினார். பள்ளிப் படிப்பிலும் அவர் மனம் விருப்பம் கொள்ளவில்லை.





பாரதியும் மறுமலர்ச்சியும்

பிறகு பாரதியின் அத்தை அவரை காசிக்கு கூட்டிச் சென்றார்கள். அங்கு முதுகலைப்படிப்பு, மேற்கல்வியைக் கற்கும்போது ஆங்கிலம், இந்தி, பிரெஞ்சு முதலிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார். மேலும் சுதேசமித்திரன் பத்திரிகையில் பணிபுரியும்போது உலகம், இந்தியா, தமிழ்நாடு பற்றிய பரந்த செய்திகளும் விவரங்களும் தெரிந்து கொள்ள முடிந்தது. ‘இந்தியா’ என்ற தனது பத்திரிகை மூலமாக வெளி உலகத்தைக் காண நேர்ந்தது. அதில் செய்திகள், கவிதைகள் மூலம் தனது ஆழ்ந்த எண்ணங்களைப் பரப்பினார்.



பாரதியாரைப் பொறுத்தவரையில் சுதந்திர வேட்கை உள்ளத்தின் இன்றியமையாத தன்மையாக அவருடைய ஊனோடும், உயிரோடும் ஒன்றிவிட்டபடியால், அவருடைய கவிதைகள் உள்ளத்தின் உண்மைகளிலிருந்து உதிக்கும் ஒளிக்கதிர்களாகி, அவற்றைப் பாடுவோரின் உள்ளங்களையும் ஒளிமயமாகச் செய்கின்றன.

பாரதியின் காலத்தில் பாரதநாடு அடிமை வாழ்வுக்கு இலக்காகி, பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டிருந்தது. இதைக் கண்டு துயருற்ற பாரதியார், அந்நிலையை மக்களுக்கு உணர்த்துவதற்காக எத்தனையோ சோகச் சித்திரங்களை வரைந்துள்ளார்.

பாரதி நினைவு தினம் செப்-11

புன்னகையு மின்னிசையு மெங்கொளித்துப் போயினவோ,

இன்னலொடு கண்ணீரிருப்பாகி விட்டனவே!

ஆணெலாம் பெண்ணாய் அரிவையரெலாம் விலங்காய்

மாணெலாம் பாழாகி மங்கிவிட்டதிந் நாடே.

வேதவுப நிடத மெய்நூ ல்களெல்லாம் போய்

பேதைக் கதைகள் பிதற்றுவாரிந் நாட்டினிலே!

செந்தேனும் பாலும் தெவிட்டி நின்ற நாட்டினிலே

வந்தே தீப்பஞ்ச மரபாகி விட்டதுவே!

செல்வத்தையும், சுகங்களையும், வீரத்தையும், அறிவையும் இழந்து வாடும் நாடு பரிதாபத்துக்கு உரியது. அதன் மக்களின் அவலநிலை எல்லையற்ற வருத்தம் கொடுப்பதாகும்.

நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த

நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்...

என்று துயருற்றார் பாரதியார்.

வலிமையற்ற தோளினனாய், பொலிவிலா முகத்தினனாய், பொறியிழந்த விழியினனாய், ஒலி யிழந்த குரலினனாய், ஒளியிழந்த மேனியனாய், கிலிபிடித்த நெஞ்சினனாய், கீழ்நிலையே வேண்டிக்கொண்டிருக்கும் பாரதத்தை,

போ, போ என்று விரட்டுகிறார் என்றால் அவர் உள்ளம் எவ்வளவு துன்பப்பட்டிருக்கும் என்று அறியலாம். இவை யாவும் மக்கள் நிரந்தரமாக தெரிந்துகொள்ள பத்திரிகைகளிலும் எழுதிக்கொண்டிருந்தார்.

இதிலிருந்து மக்கள் எழுச்சி பெற்று விழித்தெழுந்து ஊக்கம் பெற பாரதி பல கவிதைகளை எழுதியுள்ளார்.

அந்த காலகட்டத்தில் காற்றிலே கலந்திருந்த உணர்ச்சிகளைத் தீவிரமாக அனுபவித்து, அவற்றைக் கவிதை மூலம் சாதாரண மக்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார்.

அடிமை நிலையில் அகப்பட்டு அவல நிலையில் இருக்கும் மக்களுக்கு தன்னம்பிக்கை கொடுப்பதற்கும் அவர்களுடைய சிந்தனையைத் தூண்டவும் பாரத மாதா பாட்டு பாடுகிறார்.

சிறந்து நின்ற சிந்தையோடு

தேயம் நூறு வென்றிவள்

மறந்தவிர்ந்தந் நாடர் வந்து

வாழி சொன்ன போழ்தினும்

இறந்து மாண்பு தீரமிக்க

ஏழ்மை கொண்ட போழ்தினும்

அறந்தவிர்க்கிலாது நிற்கும்

அன்னை வெற்றி கொள்கவே.

பாரதியாரின் பாடல்கள் நேரடியான போருக்கோ,



புரட்சிக்கோ தூண்டலாக அமையவில்லை. மக்களின் சோர்ந்த நிலைகளிலிருந்து விழிப்புணர்ச்சியைத் தூண்டவேதான்.

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்

வேறொன்று கொள்வாரோ – என்றும்

ஆரமுதுண்ணுதற்காசை கொண்டோர் கள்ளில்

அறிவைச் செலுத்துவாரோ?

கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்

கைகட்டிப் பிழைப்பாரோ?

மண்ணிலின் பங்களை விரும்பி சுதந்திரத்தின்

மாண்பினையிழப்பாரோ?

பாரத சுதந்திரமே பாரதியின் விருப்பம். ஜாதி மதங்களைப் பாராத, எக்குலத்தினராயினும் சமமாக கருதுகின்ற, ஒற்றுமைபட்ட, எப்பதம் வாய்த்திடுமேனும் யாவரும் பொதுவாக அனுபவிக்கும் ஒரு பாரதமே பாரதியின் குறிக்கோள். பொருளாதார வளர்ச்சி, அறநெறியில் வாழும் சமுதாயம் அவர் குறிக்கோள். பூரண சுதந்திரம் பெற்று விட்ட உணர்ச்சியில், பல வருடங்களுக்கு முன்பே "ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்" என்று பாடினார். நாடு சிறக்க வேண்டுமானால் மக்கள் ஒற்றுமையோடு உழைக்க வேண்டும். அதையே 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வே, ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே, நன்றிது தேர்ந்திடல் வேண்டும்" என்று பாடுகிறார்.

சாதிகள் இல்லையடி பாப்பா! குல

தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்'

என்று குழந்தைக்கு பாடுகிறார். வளரும்போதே, சாதிகளால் பிளவுகள் கூடாது என்று அவர் விரும்புகிறார். பெண்ணடிமை, கல்வி மறுப்பு, மூட நம்பிக்கை இவற்றையும் பாரதி விரும்பவில்லை. பெண்களுக்கு நாணமும் அச்சமும் வேண்டும் என்று சொல்லியே பெண்களுக்கு சுதந்திரம் மறுக்கப் பட்டது. இவை நீக்கப்படுவதற்காக 'புதுமைப் பெண்' என்ற கவிதை எழுகிறது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்

நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்

திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்

செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்.

பாரதியின் நூற்றாண்டு நினைவுநாள் அஞ்சலி செலுத்தும் இந்த மாதத்தில், நாடும், வீடும், தமிழும், மக்களும் எழுச்சி பெற்று மறுமலர்ச்சி பெற்று பெருமையுடன் வாழ்ந்திட விரும்பிய பாரதியின் விருப்பம் நிறைவேற விரதம் மேற்கொள்வோம்.


கட்டுரையாளர்:

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
கங்கா மருத்துவமனை
கோயம்புத்தூர்


தூய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Sakthi
MILK
SPECIAL
SUPREME
SELECT
Pasteurised Toned Milk
500ml
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

தங்கமகன்

ஆசார்யர்கள்



கரும்பலகைகளில்
விரல்களால் பிடித்து
வெள்ளை சாக்பீஸ்களால்
எழுதிவிட்டுத் திரும்பும்போது
வெள்ளை அடித்துக்கொண்டது
உங்கள் உள்ளங்கைகள் மட்டுமல்ல
எங்கள் உள்ளங்களும்தான்

எடுத்துச் சொல்லும் பாடங்களை
எதுவும் விடாமல் குறிப்பெடுக்க
எங்கள் எழுத்தாணிகள்
தாள்களின் மீது தலைகீழாய்
சிரசாசனம் செய்ததால்தான்
சிம்மாசனம் கிட்டியது

படி மேலும் படி என்று
கட்டுக் கட்டுகளாய்
புத்தகங்கள் தந்தீர்கள் - அவை
வெறும் புத்தகக் கட்டுகளல்ல
வெற்றிக்கு வித்திட்ட படிக்கட்டுகள்

வசீகரமாய் நீங்கள்
வகுப்பறையில் சொன்னவை யாவும்
செவிப் பறைகள் தாண்டி
சிந்தைக்குள் சிறைப்பட்டதால்
கல்லறை வரைக்கும் அவை
காலாவதியாகாது

ஒவ்வொரு முயற்சியிலும்
ஒன்றொன்றாய் முன்னேறி
உச்சாணிக்கொம்பில் நாங்கள்
உயர்வாய் உட்கார்ந்தாலும்
அச்சாணி நீங்கள்தான்
ஆசிரியப் பெருந்தகையே!

மாதா பிதா குரு
என்று எழுதும்போது
புள்ளிகள் வருவதில்லை
அர்ப்பணிப்பு உணர்வோடு
அறிவு புகட்டுகின்ற
உங்கள் புகழை
உரைக்கத் தொடங்கினால்
முற்றுப் புள்ளிகள்
முகம் காட்டுவதில்லை

கல் என்று சொல்லி
கல்விக் கொடை தந்தவர்க்கு
கல்லாலயம் ஒன்றை
கட்டவில்லை என்றாலும்
சொல்லாலயம் கட்டி
சுகமடைகிறது எம் மனது

ஆயிரமாயிரம் பேர்களின்
அமோக வாழ்க்கைக்கு
ஆரம்ப ஆதாரமாய்
அமைகின்ற அமுதசுரபிகளே!
ஆசிரியர்கள் என்று உங்களை
அழைப்பதையும் மீறி
ஆசார்யர்கள் என்று சொன்னால்
அதுவும் பொருத்தம்தான்!

‘புறக்கணிக்கப்பட்டவர்களுக்குப் புகலிடம் தந்த தேசம்!’

-சுவாமி விவேகானந்தர்


செப்டம்பர் மாதம் இந்து சமய சரித்திரத்தில் மறக்க முடியாத மாதம். 1893-ம் வருடம் செப்டம்பர் மாதம் 11-ம் நாள், சுவாமி விவேகானந்தரை ஜகத்குருவாக மதித்து உலகத்தவர்கள் கொண்டாடிய திருநாள். அதுவரை இந்தியா என்றாலே நாகரிகமற்றவர்களின் நாடு என்றும், பாரதம் என்றாலே பாம்பாட்டிகளின் தேசம் என்றும் நினைத்துக்கொண்டிருந்த மேலைநாட்டினரின் அறியாமையைப் போக்கி, பாரத தேசத்தின் மாண்பையும், இந்து சமயத்தின் தொன்மைச் சிறப்பையும் உணரச் செய்த தினம். எத்தனை முறை படித்தாலும் சலிக்காத அந்த அற்புத உரை இங்கே உங்களுக்காக...

-பொறுப்பாசிரியர்

அமெரிக்க நாட்டின் சகோதரிகளே, சகோதரர்களே! இதயம் கனிந்த உங்கள் வரவேற்புக்கு பதிலளிப்பதற்கு, இப்போது நான் உங்கள் முன் நிற்கிறேன். என் இதயத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அதை வெளியிடுவதற்கு எனக்கு வார்த்தைகள் இல்லை. உலகத்தில் மிகவும் பழைமை வாய்ந்த சந்நியாசிகள் பரம்பரையின் பெயரால், நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அனைத்து மதங்களின் தாய் மதமாகிய இந்துமதத்தின் பெயரால், நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த கோடிக்கணக்கான இந்துக்களின் பெயரால், நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். இந்த மேடையில் எனக்கு முன்பு சொற்பொழிவாளர்கள் பலர் பேசினார்கள். அவர்களில் சிலர், கிழக்கு நாடுகளிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, “மற்ற மதங்களை வெறுக்காத பண்பைப் பல நாடுகளுக்கும் எடுத்துச் சென்ற பெருமை, தொலைவில் உள்ள நாடுகளிலிருந்து வந்திருக்கும் இவர்களையே சேரும்” என்று உங்களுக்குக் கூறினார்கள். அவர்களுக்கும் என் நன்றி.

பிற மதக்கொள்கைகளை வெறுக்காமல் மதித்தல், அவற்றை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய இரண்டு பண்புகளை உலகத்திற்கு வழங்கிய ஒரு மதத்தைச் சேர்ந்தவன் நான் என்பதில் பெருமை அடைகிறேன். ‘எந்த மதத்தையும் வெறுக்காமல் மதிக்க வேண்டும்’ என்னும் கொள்கையை நாங்கள் நம்புவதோடு, ‘எல்லா மதங்களும் உண்மை’ என்றும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். உலகிலுள்ள எல்லா



விவேகானந்தரின்
சிகாகோ சொற்பொழிவு
நினைவு தினம் -
செப்டம்பர் - 11





நாடுகளாலும், எல்லா மதங்களாலும் கொடுமைப் படுத்தப்பட்டவர்களுக்கும் - தங்கள் நாட்டை விட்டு துரத்தப்பட்டவர்களுக்கும் - புகலிடம் அளித்த நாட்டைச் சேர்ந்தவன் நான் என்பதில் பெருமைப்படுகிறேன். என் சகோதரர்களே! கோடிக்கணக்கான இந்திய மக்கள் நாள்தோறும், இன்றும் தொடர்ந்து ஒரு துதிப்பாடலைச் சொல்லி வருகிறார்கள். நான் என் சிறுவயதிலிருந்து சொல்லி வரும் அந்தத் துதிப்பாடலின் சில வரிகளை, இங்கு உங்களிடம் சொல்ல விரும்புகிறேன்:

“பல்வேறு ஆறுகள், பல்வேறு இடங்களில் தோன்றினாலும் - முடிவில் அவை ஒரே கடலில் சென்று கலக்கின்றன. அதுபோல், பலவிதமான மனப்பான்மை கொண்டவர்கள் பின்பற்றும் வழிமுறைகள் நேரானவையாகவும் குறுகலானவையாகவும் தோற்றம் அளித்தாலும் - இறைவா, முடிவில் அவை உன்னிடமே அழைத்துச் செல்கின்றன.”

இந்தப் பேரவை, இது வரையில் நடந்த மாநாடுகளில் மிகவும் சிறந்தது. இந்த மாநாடு கீதையில் சொல்லப்பட்டிருக்கும் பின்வரும் அற்புதமான ஓர் உண்மையை உலகத்திற்குப் பிரகடனம் செய்திருக்கிறது:

“யார் என்னை எப்படி வழிபடுகிறார்களோ, அவர்களை அப்படியே நான் வழி நடத்து கிறேன். மனிதர்கள் எப்போதும் என்னுடைய வழியையே பின்பற்றுகிறார்கள்.” மத வேறுபாடுகளாலும் - மதக்கொள்கைகளில் அளவுக்கு மீறிய பிடிவாதத்தாலும் ஏற்பட்ட மதவெறி, இந்த அழகான உலகத்தை நீண்ட காலமாக இறுக்கிப் பிடித்திருக்கிறது. அவை இந்த பூமியை வன்முறையால் நிரப்பியிருக்கிறது. இது போன்ற வன்முறைகள் உலகத்தை ரத்தவெள்ளத்தில் மீண்டும் மீண்டும் மூழ்கடித்தது. அது நாகரிகத்தை அழித்து, எத்தனையோ நாடுகளை நிலைகுலையச் செய்துவிட்டது. அந்தக் கொடிய அரக்கத்தனமான செயல்கள் இல்லாமல் இருந்திருந்தால் - மனித சமுதாயம் இன்று இருப்பதைவிட, பல மடங்கு உயர்ந்த நிலை அடைந்திருக்கும்.

இத்தகைய கொடிய செயல்கள் இப்போது அழியும் காலம் வந்துவிட்டது. இன்று காலையில் இந்தப் பேரவையின் ஆரம்பத்தைக் குறிப்பிடுவதற்கு மணியோசை முழங்கியது. அந்த மணியோசை எல்லா மதவெறிகளுக்கும், வாளாலும் பேனாவாலும் நடைபெறுகின்ற கொடுமைகளுக்கும், ஒரே லட்சியத்தை அடைவதற்குப் பல்வேறு வழிகளில் சென்றுகொண்டிருக்கும் மக்களிடம் நிலவும் இரக்கமற்ற உணர்ச்சிகளுக்கும் சாவு மணியாகும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ●

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான் அன்பு செயல் வேண்டும்.

– வள்ளலார்

மலர்:39 | செப்டம்பர் 2021 | இதழ் :8

நிறுவனர்: **நா.மகாலிங்கம்**
ஆசிரியர் – வெளியிடுபவர்: **ம.மாணிக்கம்**
Editor & Publisher : **M.MANICKAM**

அச்சிடுபவர்: **த.ராஜ்குமார்**
Printer : **T.RAJKUMAR, Rukmani Offset Press**
ருக்மணி ஆப்செட் பிரஸ், 32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோவை – 641 021.

பொறுப்பாசிரியர்: **எஸ்.கண்ணன்கோபாலன்**

நிருபர்: **இரா.பொன்னாண்டான்**
தலைமை வடிவமைப்பு: **கே.எம்.பிரசன்னா**
வடிவமைப்பு: **எஸ்.காமராஜ்**
அலுவலக நிர்வாகம்: **ஆர்.குமாரசாமி**

தனிப் பிரதி ரூ.15/–
ஆண்டு சந்தா ரூ.180/–
ஆயுள் சந்தா ரூ.2500/–
(14 ஆண்டுகள் சிறப்பிதழ் உட்பட)

சந்தா தொகையை **"SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI"** என்ற பெயரில் டி.டி.யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி: **ஆசிரியர், ஓம் சக்தி, சக்தி சுகர்ஸ் லிமிடெட், 180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் – 641 018,** போன்; **0422 4322471, 0422 4322222** வெளியிட்டோர்; **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com

வாசகர் கடிதங்கள்

ரசிக்கும்படி இருந்தது

ஆகஸ்ட் மாத அட்டைப்படம் அருமை. கோகுலாஷ்டமி வரும் நேரத்தில் ரசிக்க வைத்தது. கண்ணான கண்ணே கவிதை மிகவும் ரசிக்கும்படி இருந்தது.

– உஷாமுத்துராமன், திருநகர்.

இப்போதெல்லாம் ஓம் சக்தி இதழைத் திருப்பிய பக்கமெல்லாம் பெயருக்கேற்ப பக்திமனம் வீசுகிறது. அதிலும் கிருஷ்ண பகவான் பற்றிய கதைகளும், அரிய நிகழ்வுகளும் தாங்கிய களஞ்சியமாக வெளிவந்திருக்கிறது. வாழ்த்துகள்!

– தாண்டவராயன், கிருஷ்ணகிரி.

நோயின்தன்மை சிகிச்சை முறைகள் குறித்து பதினெட்டு வருட கால நீண்ட ஆராய்ச்சி மற்றும் தேடலுக்குப் பிறகு ஒருங்கிணைந்த மருத்துவ மையத்தை 'மிராக்கிள் வெல்னெஸ் கிளினிக்' என்ற பெயரில் ஏற்படுத்தி, நோயாளிகள் நோய் நீங்கி ஆரோக்கியமாக வாழ வழி செய்த திரு.மாணிக்கம் அவர்களை எத்தனை பாராட்டினாலும் தகும்.

– வா.மு. குணசேகரன், சின்னசேலம்.

திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திருக்கோவிலூர், திருக்கண்ணபுரம் மற்றும் திருக்கபிஸ்தலம் ஆகிய ஐந்து கோயில்களைப் படித்தபோது நேரில் சென்று தரிசித்ததைப் போன்ற உணர்வு ஏற்பட்டது.

– கோ. வெங்கட்ரமணன், திருச்சி.

இந்திய பெண்மணிகள் வரிசையில் இம்மாத ஓம்சக்தியில் அன்னை ஸ்ரீசாரதா தேவி பற்றிய விரிவான கட்டுரையை நம் பாரதப் பெண்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற ஆர்வம் மேலிடுகிறது.

– பெ. சுந்தரவள்ளி, சூரக்கோட்டை.

ஆதித்தமிழர் மொழியின் சிறப்பு, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மதுரையில் தமிழ்ச்சங்கம் தோன்றியது போன்ற அரிய தகவல்களை அள்ளித் தந்திருக்கிறார் அருட்செல்வர் ஐயா அவர்கள்.

– முகிழரசன், கன்னியாகுமரி.

இலக்கியப் பகுதியில் நக்கீரரின் திருமுருகாற்றுப் படையில் திருச்செந்தூர் பற்றிய கட்டுரையில் முருகப்பெருமானின் ஒவ்வொரு முகத்தைப் பற்றியும் விவரித்திருக்கும் விதம் மிக அருமை. இந்தக் கட்டுரையை வழங்கிய காயத்ரி கணேஷை எப்படி பாராட்டினாலும் தகும்!

– பாரதி சுப்பிரமணியன், சென்னை.

ஓம் சக்தியில் வெளிவரும் ராசி பலனைப் படித்து வருகிறேன். என்னுடைய ராசிக்கு உரிய பலன்கள் கிட்டத்தட்ட சரியாக இருக்கிறது. எனவே எனது நண்பர்களுக்கும் படிக்கப் பரிந்துரை செய்துள்ளேன்.

– வே. பூபாலகிருஷ்ணன், மதுரை.

அடுத்த இதழில்... **பொருநைக் கரையில் புனித ஆலயங்கள்**

ஓம் சக்தி

கலை, இலக்கிய, ஆன்மிக மாத இதழ்

சந்தாதாரர் ஆகுங்கள்!



ஊர் கூடி தேர் இழுப்போம் வாருங்கள்

ஆன்மிகமும் தேசியமும் தம்முடைய இருவிழிகளாகக் கொண்ட அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்கள், ஆன்மிகத்துக்கு வள்ளலாரையும், தேசியத்துக்கு அண்ணல் காந்தியடிகளையும் வழிகாட்டியாகக் கொண்டவர். தமிழ்ச் சமூகத்தின்பால் ஆழ்ந்த அன்பும் பற்றும் கொண்டிருந்தவர். அந்த வகையில், தமிழ்ச் சமூகத்துக்கு மிகவும் பயனுள்ள விஷயங்களைக் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற உயரிய நோக்கில் அருட்செல்வர் அவர்களால் கடந்த 1983–ம் வருடம் தை மாதம் ஆன்மிகம், கலை, இலக்கிய மாத இதழாகத் தொடங்கப்பட்டதுதான் உங்கள் 'ஓம் சக்தி' மாத இதழ்.

தரம் குறையாமலும், நம்முடைய கலாசாரம், பாரம்பர்யம் ஆகியவற்றின் தொன்மையை எடுத்துச் சொல்லும் வகையிலும் கடந்த 39 வருடங்களாகத் தொடர்ந்து ஓம் சக்தி மாத இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. அருட்செல்வர் எந்த லாபநோக்கமும் இல்லாமல் தொடங்கிய இந்த இதழை அவரைத் தொடர்ந்து சக்தி குழுமங்களின் தலைவர் ம.மாணிக்கம், இதழ் நடத்துவதில் உள்ள சிரமங்களைப் பொருட்படுத்தாமல் சிறப்பான முறையில் கொண்டு வருகிறார்.

கடந்த ஏப்ரல் இதழில் இருந்து 'ஓம் சக்தி' இதழ், ஆன்மிகம், தேசபக்தி, மருத்துவம், சாதனைப் பெண்கள் என்று மிகத் தரமாக வெளிவருவதாகப் பல தரப்பில் இருந்தும் வெளிப்படும் பாராட்டுகள் எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கவே செய்கிறது. அதே நேரம், ஓர் இதழை லாப நோக்கம் இல்லாமல் நடத்துவது என்பது ஊர் கூடி தேர் இழுப்பதைப் போன்றதுதான். அந்த வகையில் நாங்கள் வாசகர்களின் பேராதரவை எதிர்பார்க்கிறோம். மதிப்புக்கு உரிய சந்தாதாரராக ஓம் சக்தி இதழுடன் இணைந்து பயணிக்க அன்புடன் அழைக்கிறோம்.

சந்தா தொடர்பான விவரங்களுக்கு : 0422 - 4322471

சந்தா விவரம்

☐ 1 வருடம் - ரூ.180/-   ☐ 3 வருடம் - ரூ.500/-   ☐ 5 வருடம் - ரூ.800/-   ☐ ஆயுள் சந்தா- ரூ.2,500/- (14 வருடம்) (சிறப்பிதழ்கள் உட்பட)

வாசக அன்பர்கள் இந்த சந்தா ஃபாரத்தை பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை M.O/Cheque/D.Dயாக 'SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI' என்ற பெயருக்கு எடுத்து ஆசிரியர், ஓம் சக்தி, சக்தி சுகர்ஸ் லிமிடெட், 180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் – 641 018 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

பெயர்:..

முகவரி:..

செல்பேசி:.............................. மின்னஞ்சல்:..............................

சந்தா விவரம்:..



ஆத்மலிங்கத்திலிருந்து தோன்றிய முருடேஸ்வரர்




வெளிமாநிலக் கோயில்கள்

மீனாட்சி ரவிகுமார்

அலைகள் ஆர்ப்பரிக்கும் அரபிக் கடலின் கரையோரத்தில் அமைந்திருக்கிறது அருள்மிகு முருடேஸ்வரர் ஆலயம். நெடுஞ்சாலையை ஒட்டி ஆலயத்தின் அலங்கார வளைவு உள்ளது. அந்த வளைவைக் கடந்து செல்லும் சாலையில் சுமார் 1 கி.மீ.தொலைவில் ஆலயம் அமைந்திருக்கிறது.

தொலைவில் இருந்து பார்க்கும்போதே ஆலயத்தின் நெடிதுயர்ந்த ராஜகோபுரம் நமக்குக் காட்சி தருகிறது. ராஜகோபுரத்தின் அருகில் மிக பிரம்மாண்டமான தோற்றத்தில் சிவபெருமான் நான்கு திருக்கரங்களுடன் சின்முத்திரை காட்டியபடி காட்சி தருகிறார். உலகிலேயே இரண்டாவது மிகப் பெரிய சிவபெருமானின் சிலை இது என்பது வியப்புக்கு உரிய விஷயம். சிவபெருமானின் சிலைக்கு அருகிலேயே பற்றுகளைத் துறந்து நம் கடமைகளைத் தவறாமல் செய்தால்தான் பரம்பொருளுடன் ஐக்கியமாக முடியும் என்ற தத்துவத்தை உணர்த்திய கிருஷ்ணரின் கீதோபதேசம், ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் வலம் வரும் சூரியபகவான், உலகத்துக்கு நன்மை







ஏற்படும் என்றால் அதன் பொருட்டு தன் அழகிலும் கம்பீரத்திலும் குறைவு ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று நினைத்து தன் தந்தத்தை ஒடித்து வியாசர் சொல்லும் மகாபாரதத்தை எழுதும் விநாயகர், தான் சிவனாரிடம் பெற்று வந்த ஆத்மலிங்கத்தை சிறுவனாக வந்த விநாயகரிடம் ராவணன் கொடுக்கும் காட்சி என்று பல சிற்பங்கள் நம் தேசத்து சிற்பக்கலைஞர்களின் கலைத்திறனை நமக்கு உணர்த்தி பரவசம் கொள்ளச் செய்கின்றன. பகீரதனின் பிரார்த்தனைக்கு இரங்கி கங்கையை தன் திருமுடி மீது தாங்கும் சிவபெருமானின் பொன்போல் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் சிற்பம் நம் மனதை அப்படியே கொள்ளை கொண்டு விடுகிறது.

ஒன்பது நிலைகளுடன் விண்ணைத் தொடும் வண்ணம் உயர்ந்து காணப்படும் ராஜகோபுரத்தைக் கடந்து படிகளின் வழியாக ஏறிச் செல்கிறோம். கொடிமரம், பலிபீடம், நந்தி மண்டபம், நீண்டு செல்லும் பிராகாரங்கள், தெய்வ சந்நிதிகளின் விமானங்கள் என்று அமைந்திருக்கும் திருக்கோயிலில் நாம் முதலில் விக்கினங்களை அகற்றும் விநாயகப் பெருமானை தனிச் சந்நிதியில் தரிசிக்கிறோம். தங்கக் கவசத்தில் தகத்தகாயமாக பிரகாசிக்கும் கணபதிக் கடவுளிடம் நம் வழிபாடு விக்கினம் இல்லாமல் நிறைவு பெறவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு ஆலயத்தை வலம் வருகிறோம். அடுத்து வள்ளி தேவசேனா சமேதராக வெள்ளிக் கவசம் தரித்து எழிலார்ந்த திருக்கோலத்தில் காட்சி அருளும் முருகப்பெருமானின் சந்நிதியை தரிசிக்கிறோம். நான்கு திருக்கரங்களுடன் அபய வரத ஹஸ்தம் காட்டி அருள்கிறார். கந்தக்கடவுளின் பின்னணியில் அவருடைய வாகனமான மயிலும் வெள்ளிக் கவசத்துடன் காட்சி தருகிறது. தொடர்ந்து மும்மூர்த்தியரின் அம்சமான தத்தாத்ரேயர் தனிச் சந்நிதியில் நான்கு வேதங்களின் வடிவமான நான்கு நாய்களுடன் காட்சி தருகிறார். தொடர்ந்து அஞ்சனை மைந்தன் அனுமனின் சந்நிதி அமைந்திருக்கிறது. சந்நிதியில் ஆஞ்சநேயர் அஞ்சலிஹஸ்தராகக் காட்சி அருள்கிறார்.

அடுத்து அம்பிகையின் சந்நிதி அமைந்திருக்கிறது. தன் திருக்கரங்களில் அபய வர ஹஸ்தம் காட்டி, வண்ணப் பட்டாடை உடுத்தி, கருணை பொழியும் அழகு திருமுகத்துடன் பார்வதி என்னும் திருப்பெயர் கொண்டு காட்சி அருள்கிறார்.

அம்பிகையை தரிசித்த பிறகு ஐயனை தரிசிக்கச் செல்கிறோம். கருவறைக்கு எதிரில் அமைந்திருக்கும் நந்தியின் சிற்பம் ஆலயத்தின் தொன்மைச் சிறப்பை நமக்கு உணர்த்தும் வண்ணம் காட்சி தருகிறது. சந்நிதியில் முகக்கவசம் அணிந்து காட்சி அருளும் முக்கண் பெருமானின் திருமுடிக்கு மேலாக இருக்கும் தாரா பாத்திரத்தில் இருந்து வர்ஷிக்கும் தீர்த்தம் ஐயனுக்கு அபிஷேகம் செய்வதுபோல் தோன்றுகிறது. அவருக்கு முன்பாக மிகப் பெரிய ஆவுடை மற்றும் அதன் நடுவில் மிகச் சிறிய லிங்கத் திருமேனியும்







அமைந்திருப்பதை தரிசிக்கலாம்.

தல வரலாறு: தம்முடைய அருள்திறனால் பல்வேறு அருளாடல்களை நிகழ்த்திய சிவபெருமான், ராவணனின் பக்திக்கு இரங்கி அவன் வழிபாட்டுக்கு ஆத்மலிங்கத்தை வழங்கி அருள்புரிந்தார். அவன் அதை இலங்கைக்கு எடுத்துச் சென்றுவிட்டால் அவனை அழிக்க முடியாது. எனவே, ராவணன் சந்தியாகால பூஜை செய்யும் வேளையில், அந்தண இளைஞன் வேடத்தில் வந்த விநாயகர் தன்னிடம் ராவணன் கொடுத்துச் சென்ற லிங்கத்தை பூமியில் வைத்துவிட்டார். பூஜை முடிந்து திரும்பி வந்த ராவணன் அதைக் கண்டு அதிர்ந்து தனது இருபது கைகளால் லிங்கத்தை எடுக்க முயன்றபோது ராவணன் கையோடு வந்த வஸ்திரமே சிவலிங்கத் திருமேனியாக மாறியது என்கிறது முருடேஸ்வரர் தல வரலாறு. ராவணன் இழுத்த சிவலிங்கம் நான்கு துண்டுகளாக மாறியதாகவும், அவற்றுள் ஒரு துண்டு முருடேஸ்வரராக சிவலிங்க வடிவம் கொண்டதாக மற்றொரு வரலாறும் சொல்லப்படுகிறது.

வடக்கு கர்நாடக மாநிலத்தில் உள்ள பட்கல் என்ற ஊரில் அமைந்திருக்கிறது அருள்மிகு முருடேஸ்வர் ஆலயம்.

காயத்ரி கிருஷ்ணராஜ்

குருவருள் பொழியும் தட்சிணாமூர்த்தி கணபதி

முழுமுதற் கடவுள் என்று போற்றி வழிபடப்பெறும் விநாயகர் சித்தி - புத்தி சமேதராக தெற்குப் பார்த்து தட்சிணாமூர்த்தி கணபதியாக அருள்புரியும் தலம் மெலட்டூர்.

இந்தத் தலத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீஸித்தி புத்தி சமேத தட்சிணாமூர்த்தி தலம், ஸ்ரீகர்க மஹரிஷியின் ஞான புராணத்தில் இடம் பெற்றிருக்கும் 108 கணபதி தலங்களில் 81-வது தலமாக அமைந்திருக்கிறது. குரு பரிகாரத் தலமான தென்குடி திட்டைக்கு அருகில் அமைந்திருக்கும் இந்தத் தலத்தின் மூர்த்திக்கு தட்சிணாமூர்த்தி விநாயகர் என்ற பெயர் ஏற்பட்டதன் பின்னணியில் சிலிர்ப்பூட்டும் வரலாறு கூறப்படுகிறது.

1899-ம் ஆண்டு உத்தரவாஹினியாக பாயும் காவிரியில் பெருக்கெடுத்த வெள்ளத்தில் மிதந்தபடி வந்தவர்தான் இந்தக் கோயிலில் அருள்புரியும் கணபதி. அதனால், இவருக்கு 'மிதந்தீஸ்வரர்' என்றும் ஒரு திருப்பெயர் உண்டு. தெற்குத் திசை பார்த்தபடி கரை ஒதுங்கிய கணபதி விக்கிரகத்தை கண்டெடுத்த அன்பர் ஒருவர் கோயில் கட்டி பிரதிஷ்டை செய்தார். விநாயகரின் இந்தத் திருமேனி உளியால் செதுக்கப்படாமல் சுயம்புவாகத் தோன்றியதாக சிவாசார்யார்கள் கூறுகின்றனர். இந்த விநாயகரின் கழுத்தை ஒட்டியபடி ருத்திராட்ச மாலை அணி செய்கிறது.







செப்டம்பர் - 10 விநாயகர் சதுர்த்தி

தெற்கு நோக்கி அமைந்துள்ள கோபுர வாயிலை நோக்கியவாறே, தட்சிணாமூர்த்தியாக வீற்றிருக்கிறார் ஸித்தி புத்தி சமேத விநாயகர். தெற்கு பார்த்து அருள்வதால் இவருக்கு தட்சிணாமூர்த்தி விநாயகர் என்ற திருப்பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. விநாயகரின் தனிக் கோயிலாக இந்தக் கோயில் இருந்தாலும் சிவாலயம் போலவே நிர்மாணிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க விஷயம். சிவாலயத்தில் நடராஜ பெருமான் திருவுருவம் அமைந்திருப்பது போலவே இந்தக் கோயிலில் நர்த்தன கணபதி அருள் புரிகின்றார். அதேபோல் அஸ்திரதேவரைப் போலவே சூலாயுதம் தாங்கி சூலத்துறை கணபதியும் காட்சி அளிக்கிறார். இவர்களுடன் ஸித்தி புத்தி சமேதராக, செப்புத்திருமேனியில் சிரித்த வண்ணம் காட்சியளிக்கிறார் ஸ்ரீதட்சிணாமூர்த்தி விநாயகர்.

மூலவர் சக்தி சமேதராய் இருந்தபோதிலும், ஸித்தி புத்தி தேவியர் சிலா ரூபமாக பிரதிஷ்டை செய்யப்படவில்லை. மாறாக மூலவரின் பீடத்திலேயே மந்த்ர ஸ்வரூபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர் என்பது தனிச்சிறப்பு. சிவ சொரூபமாகவே விநாயகர் வீற்றிருப்பதால், வேறெந்த





ஆலயத்திலும் காண முடியாத வண்ணம், விநாயகப் பெருமானின் சந்நிதிக்கு, இடப்புறத்தில் யோக நிஷ்டையில் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார் ஸ்ரீகும்ப சண்டிகேஸ்வரர்.

திருமணம் தடைப்பட்டு வரும் அன்பர்கள், இந்தத் தலத்துக்கு வந்து தட்சிணாமூர்த்தி விநாயகரிடம் வேண்டிக் கொண்டால், உடனே திருமணம் நடைபெறுவதாக பக்தர்கள் நம்பிக்கையுடன் கூறுகின்றனர். அதேபோல் தம்பதியரிடையே கருத்து வேற்றுமை, குழந்தை பாக்கியம் இல்லாமை போன்ற பல பிரச்னைகளையும் போக்கி மகிழ்ச்சியைத் தரும் வரப்பிரசாதியாகத் திகழ்கிறார் தட்சிணாமூர்த்தி விநாயகர்.

திருமணவரம் வேண்டி வருவோர்க்கு, சிறப்பு அர்ச்சனைகள் செய்யப்பட்டு, பங்காள மஞ்சள் பிரசாதமாக வழங்கப்படுகிறது. மேலும் பூஜிக்கப்பட்ட மஞ்சள் கயிற்றை, திருமண வரம் வேண்டும் பக்தர்களின் கையில் ஒரு கங்கணம் போல் கட்டுகின்றனர். அவ்வாறு கட்டப்பட்ட நாளிலிருந்து, ஒரு மண்டலத்துக்குள் திருமணம் கைகூடி வருவதாகக் கூறுகின்றனர் பக்தர்கள்.

ஒவ்வோர் ஆண்டும், ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்தியையொட்டி, பத்து நாள்கள் பிரம்மோற்ஸவம் நடைபெறுகிறது. குறிப்பாக ஐந்தாம் திருநாள், ஏழாம் திருநாள் மற்றும் ஒன்பதாம் திருநாள் ஆகியவை வெகு சிறப்புடையவையாகக் கூறப்படுகின்றன. ஐந்தாம் திருநாளன்று ஆத்ம பூஜை' கோலத்தில், தன்னைத்தானே விநாயகப் பெருமான் பூஜித்துக் கொள்ளும் திருக்காட்சி அரங்கேறுகிறது. ஏழாம் நாள் உற்ஸவத்தில், விநாயகப் பெருமான், ஸ்ரீஸித்தி புத்தி தேவியரை மணந்தருளும் திருக்கல்யாணம் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் கணேசப் பெருமானின் தேரோட்டம் நடைபெறுகிறது. சுவாமியின் வீதியுலா ஏழு சுற்றுக்களைக் கொண்டதாக முறையே, மங்கல இசை முழங்க இரு சுற்றுகளும், வேத பாராயணத்தோடு இரு சுற்றுகளும், சங்கீத முழக்கத்தோடு ஒரு சுற்றும், மௌன நிலையில் ஒரு சுற்றும், இவை அத்தனையும் சேர்ந்த ஸமஷ்டி கோஷத்தோடு ஏழாம் சுற்றும் என நிறைவுறுகிறது. இந்த வருடம் செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் 10-ம் தேதி வரை நடைபெற உள்ளது.

அமைவிடம்: தஞ்சாவூரில் இருந்து திட்டை செல்லும் சாலையில் சுமார் 19 கி.மீ. தொலைவில் மெலட்டூர் அமைந்துள்ளது.

●

Registered with Registrar of Newspapers for India
No. 42582/83 Licensed to post without Pre-payment
under Regn.No. TN/WR/CBE/016/WPP/2021-23
Regd. No. : CB/016/2021-23
Date of Publication : 28th Every Month

OM SAKTHI - SEPTEMBER - 2021